# உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 103 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 25 சனிக்கிழமை (09/03/2013) UTHAYAN - A Lively National Tamil Daily


## ஈழத் தமிழருக்காக தமிழக மாணவர்கள் பெரும் எழுச்சி

### எட்டு பேர் தொடர் உண்ணாநிலைப் போராட்டம்

சென்னை, மார்ச் 9

ஈழத்தமிழர் ஆதரவு அலை தற்போது சர்வதேச ரீதியாக எழுச்சி கொண்டுள்ள நிலையில், ஈழத்தமிழரின் நலனுக்காக - விடிவுக்காக சென்னையில் மாணவர்கள் 8 பேர் காலவரையறையற்ற - தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

சென்னையில் குறித்த மாணவர்கள் 8 பேரும் தியாகி திலீபன் காட்டிச் சென்ற வழியில் அஹிம்சைக் களத்தில் குதித்துள்ளனர்.

சென்னையில் உள்ள தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு சார்பில் நேற்றுமுதல் சென்னை லெயோலா கல்லூரியில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜோபிரிட்டோ, திலீபன், சாஜிபாய் அன்டனி, லியோ, சண்முகப்பிரியன், பிரசாத், அனிஷ், பால் ஆகிய 8 மாணவர்களுமே உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, உண்ணாவிரதமிருக்கும் மாணவர்கள் முன்வைத்துள்ள அதே கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை லெயோலா கல்லூரி மாணவர்கள் சுமார் 500 பேர் நேற்று உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினர்.

(மற்றொரு செய்தி 8ஆம் பக்கத்தில்)

(த-சி)



## இந்திய அரசை எச்சரிக்கவே தமிழக மீனவர் மீது தாக்குதல்


### –ஜெயலலிதா

சென்னை, மார்ச் 9

சர்வதேச அளவில், தனக்கு எதிராக இந்தியா குரல் கொடுக்கக் கூடாது என்று எச்சரிக்கத் தமிழக மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தி வருகிறது என, முதல்வர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

பார்க்க பக்கம் 04

## இன நல்லிணக்கம் இன்றேல் அமைதிக்கு வழியே இல்லை



### இந்தியப் பிரதமர் எச்சரிக்கை

புதுடில்லி, மார்ச் 9

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தில் இலங்கை அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்காது இழுத்தடிப்புச் செய்து வருகிறது என மேற்குலக நாடுகள் குற்றஞ்சாட்டிவரும் நிலையில், இன நல்லிணக்கம் ஏற்படாமல் இலங்கையில் அமைதி நிலை திரும்ப வாய்ப்பில்லை என்று அண்டை நாடான இந்தியாவும் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ் மக்களின் தலைவர்களுடன் பேச்சு நடத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் அமைதி மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்

பார்க்க பக்கம் 04

## ஏ–9 வீதி அபிவிருத்திப் பணிகள் ஓகஸ்டில் பூர்த்தி

கொழும்பு, மார்ச் 9

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மூன்று பெரும் வீதி அபிவிருத்தித் திட்டங்களில் இரண்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும். ஏனைய ஒரு திட்டம் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் என்று துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்

பார்க்க பக்கம் 04

## ஜெனிவா பிரேரணையை பலவீனப்படுத்த முயற்சி

### பிளேக்கை சந்தித்தார் சுப்பிரமணிய சுவாமி

ஜெனிவா, மார்ச் 9

ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணையைப் பலவீனப்படுத்துவதற்கும், அமெரிக்காவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கும், இந்தியாவின் ஜனதா கட்சித்தலைவர் சுப்பிரமணிய சுவாமியை இலங்கை அரசு களமிறக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம், இலங்கை அரசின் அழைப்பின் பேரில் கொழும்பு சென்ற சுப்பிரமணிய சுவாமி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும்,

பார்க்க பக்கம் 04

## ஆடவர் தினம் கொண்டாடும் காலம் விரைவில் உருவாகும்

### யாழ். பல்கலை. துணைவேந்தர் வசந்தி கூளுரை

யாழ்ப்பாணம், மார்ச் 9

மகளிர் தினம் கொண்டாடும் நிலைமை மாறி வெகு விரைவில் ஆடவர் தினம் கொண்டாடும் நிலை உருவாகவுள்ளது. சகல துறைகளிலும் மிளிர்ந்து வரும் பெண் தலைமைத்துவம் இதனை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளதாக, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் 'வனிதா வாசனா' கணக்கு அறிமுக நிகழ்வு யாழ். நகரிலுள்ள அதன் அலுவலகத்தில் இடம்பெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகை

பார்க்க பக்கம் 04

## மிதிவெடி வெடித்து பணியாளர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

முகமாலை முன்னரங்கப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த

பார்க்க பக்கம் 04

## பெண்களுக்கு பாதுகாப்பு கோரி வவுனியாவில் நேற்றுப் பேரணி



வவுனியா,மார்ச் 9

போருக்குப் பின்னரான இலங்கையில் குறிப்பாக வட. பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்திருப்பதனால், தமக்கு உரிய பாதுகாப்பளிக்கப்பட வேண்டும், இத்தகைய வன்முறைகளில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் மூலம் தண்டித்து வன்முறைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்படவேண்டும் என்று வவுனியாவில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நேற்றுப் பேரணி நடத்திய பெண்கள் கோரியுள்ளனர்.

பார்க்க பக்கம் 04


அரிய வாய்ப்பு

கனடாவில் படிக்க, உழைக்க விசா ஆலோசனை

4 மாதத்தில் செல்ல விசா ஆலோசனை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090

7 நாள்களும்

காலை 8.30 - மாலை 6.30 வரை

(34300) (10,6,7)


## தெல்லிப்பழைச் சம்பவம்; பொலிஸ் முன்னேற்றம்

### இருவர் பிடிபட்டதை ஒரு வாரத்தில் கண்டறிந்து கொண்டது

யாழ்ப்பாணம், மார்ச்.9

வலி.வடக்கில் படையினரால் காணி சுவீகரிக்கப்படுவது மற்றும் வீடுகள் இடித்தழிக்கப்படுவதற்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டத்தில் சிலர் சென்று குழப்பம் விளைவிக்க

பார்க்க பக்கம் 04

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எயிட்ஸ் தொற்றுள்ள சிறுமி யாழில்

யாழ்ப்பாணம்,மார்ச் 09

எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட சிறுமியொருவர் யாழ்.போதனா வைத்தி சாலையில் இனங்காணப்பட்டுள்ளதாக சில இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த சிறுமியே இவ்வாறு எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளாரென அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஸ்ரீ.பவானந்தராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, எயிட்ஸ் நோயாளர் யாரும் இவ்வாறு இனங்காணப்படவில்லை.

அவ்வாறு இனங்காணப்பட்டால் உரிய எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

(த-16-4)

# குடாநாட்டின் பல இடங்களில் கடந்த வாரமும் திருட்டுக்கள்

### ரூ.12 லட்சம் பெறுமதியான பொருள்கள் பறிபோயின

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் காரணமாக 12 லட்சத்து 12 ஆயிரத்து 480 ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தெல்லிப்பழையில் பட்டப்பகலில் வீடு புகுந்து 4 இலட்சத்து 93ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. யாழ். ஸ்ரான்லி வீதியில் வீடு உடைத்து 30ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கொழும்புத்துறையில் வைத்து வத்தளையைச் சேர்ந்த பெண் அணிந்து சென்ற 35ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் தவறவிட்ட ஏ.ரி.எம்.அட்டையை எடுத்து நபர் ஒருவர் வங்கியில் ஆயிரத்து 100 ரூபா பணத்தைத் திருடியுள்ளார். இணுவில் சந்தியில் 11ஆயிரத்து 380 ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டு பின்னர் மீட்கப்பட்டதோடு சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் மேற்கில் 5 லட்சத்து 55ஆயிரம் ரூபா பெறுமதியான ஓட்டோ திருடப்பட்டுள்ளது. பின்னர் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸார் அதனை மீட்டதோடு, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 3 பேரையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருமாக 4 பேரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

குப்பிளான் கிழக்கில் ஒருவரைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. சுதுமலையில் சென்று கொண்டிருந்த கைதடியைச் சேர்ந்த பெண்ணிடம் இருந்து 2 பேர் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவில் வீடு உடைத்து 80ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் கூறினார். (த-4)

## மகா சிவராத்திரி தினத்தில் களியாட்டத்தை தவிருங்கள்

### இந்து மா மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 9

மகா சிவராத்திரியான நாளை ஞாயிற்றுக்கிழமை சகல இந்து ஆலயங்களிலும் சமய முறைப்படி வழிபாடுகள் நடத்தப்பட வேண்டும். தேவையற்ற களியாட்ட நிகழ்வுகளைத் தவிர்க்க வேண்டும் என்று அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இந்துமா மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மகா சிவராத்திரியை வர்த்தக விடுமுறையாக பிரகடனப்படுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அது இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. எனினும் அன்றைய தினம் சகல இந்து மக்களும் சமய வழிபாடுகளில் ஈடுபடக்கூடிய வகையில் தொழில் நிறுவனங்களில் விடுமுறை வழங்கப்படுவதுடன் மதுபான சாலைகள் மற்றும் இறைச்சிக்

**மகா சிவராத்திரியை வர்த்தக விடு முறையாக பிரகடனப்படுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அது இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை.**

கடைகள் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சிவராத்திரி தினத்தன்று விசேட பூசை வழிபாடுகள் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இடம்பெறவுள்ளன: அத்துடன் இந்துமா மன்றத்தின் காலாண்டு இதழாகிய ''இந்து ஒளி'' வெளியிட்டு வைக்கப்படவுள்ளது- என்றுள்ளது. (த-14)

## உள்ளூர் ஊடகவியலாளர் தாக்கப்பட்டுள்ளார்

யாழ்ப்பாணம், மார்ச்.9

உள்ளூர் ஊடகவியலாளரொருவர் இனந் தெரியாதோரின் தாக்குதலுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் வைத்து தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் உ.சாலின் (வயது-24) என்பவரே யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (6)

## ஐந்தரைப் பவுண் தாலியை பறி கொடுத்தார் பெண்

### புலோலியில் நேற்று அதிகாலை

யாழ்ப்பாணம், மார்ச் 9

அதிகாலையில் வீட்டுக் கேற்றுக்கு வெளியே குப்பைகளைக் கூட்டிக் கொண்டிருந்த பெண்ணிடமிருந்து ஐந்தரைப் பவுண் நிறையுடைய தாலியைக் கொள்ளையடித்துக் கொண்டு மாயமாகி விட்டான் கொள்ளையன்.

இந்தச் சம்பவம் புலோலி தெற்கு, வாணர் குடியிருப்பில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

பிரஸ்தாப குடும்பப் பெண் வீட்டுக் கேற்றடியில் வீதியில் குப்பைகளைக் கூட்டி அள்ளிக் கொண்டிருந்துள்ளார். அந்த இடத்தால் சென்ற கொள்ளையன் பெண் அணிந்திருந்த தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

பெண்ணின் கணவன் கோயிலுக்குச் சென்றுவிட்ட நிலையில் பிள்ளைகள் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த நிலையில் எவரும் இல்லாத நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(த-4-8)

# இந்திய வீட்டுத் திட்டத்தில் பாரபட்சம் எதுவும் கிடையாது

### தூதரகம் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 9

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்திய வீட்டுத் திட்டத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் ஆதாரமற்றவை என்று இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு-கிழக்கில் 43 ஆயிரம் வீடுகளை அமைக்கும் இந்திய வீட்டுத் திட்டமானது கடந்த வருடம் ஒக்ரோபர் 2 ஆம் திகதி ஆரம்பமானது. இதற்கு வடக்கு மாகாணத்தில் முதல் கட்ட வேலைத் திட்டத்துக்கு 8 ஆயிரத்து 700 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குரிய முதற்கட்ட நிதி இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ளதுடன், வீட்டின் நிர்மாணத்தை நிறைவு செய்த 25 சதவீதமான பயனாளிகள் தங்களின் இரண்டாம் தவணைப் பணத்தையும் பெற்றுள்ளனர். இந்த வருட இறுதிக்குள் வடக்கில் 10 ஆயிரம் வீடுகள் அமைத்து முடிக்கப்படும்.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பயனாளிகள் தெரிவில் ஓரவஞ்சனை இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடக்குக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியத்தூதுவர் அசோக் கே.காந்தா ஆராய்ந்திருந்தார்.

வடமாகாணத்தில் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிராமங்கள் அடையாளம் காணப்படுகின்றன. இதன் பின்னர் அந்தக் கிராமத்திலுள்ள தற்போது நிரந்தரமாகத் தங்கள் கிராமத்தில் வசிப்பதற்குத் திரும்பியுள்ள இலங்கையின் எந்தப் பாகத்திலும் சொந்த வீட்டைக் கொண்டிராத நேரடியாக அல்லது மறைமுகமாக வேறு எந்த நிரந்தர வீடமைப்பு உதவியையும் பெற்றிராத, தற்போது நிரந்தர வீடொன்று தேவைப்படும் அந்தக் கிராமத்தில் வசித்த அல்லது அங்கு நிரந்தரமாக வசித்தோரின் வழித்தோன்றல்களானோர்கள் முதலாவது பயனாளிகள் தெரிவுப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

அவர்களினால் வழங்கப்படும் தரவுகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. இந்திய வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிப்பவர்களின் வாழ்வாதாரம், குடும்பத்தில் தங்கியுள்ளோரின் எண்ணிக்கை, அவர்களின் வயது, குடும்பத்திலுள்ள அங்கவீனர்கள் போன்றன கவனத்தில் கொள்ளப்படும்.

இதனடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு நியம வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் இறுதியான பயனாளிகள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவர். புள்ளி வழங்கப்படும் முறைமை வெளிப்படையானதும் யாவரினதும் பங்குபற்றுதலுடையதுமாகும்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் புள்ளிகளுடன் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்படும். அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள், முறைப்பாடுகள் இருப்பின் தெரிவிப்பதற்கு இருவார கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பெயர்ப் பட்டியல் அனுப்பப்படுகின்றது. ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் பிரதேச செயலராலும், நடைமுறைப்படுத்தும் முகவர்களாலும் விசாரணை செய்யப்படும். ஆதாரத்துடன் செய்யப்படாத முறைப்பாடுகள் ஏற்கப்படமாட்டாது.

மக்கள் தமது முறைப்பாடுகளைக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கோ, யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய உதவித் தூதரகத்துக்கு தெரிவிக்க முடியும்.

மேலும் பயனாளிகள் தெரிவில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் சிவில் சமூகங்களும், உள்ளூர் சமுதாயங்களுக்கும் முக்கிய பங்கை வகிக்கின்றன. தூதுவர் சிவில் சமூகங்களுடன் பேச்சு நடத்தியன் பயனாக தெரிவு முறைமை மேலும் பலமாக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு உதவிக்கான பயனாளிகளின் இறுதிப் பட்டியல் கடுமையான முறைமையின் கீழ் அடையாளம் காணப்பட்டு, சரிபார்க்கப்பட்டு முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

எனவே தெரிவில் காட்டப்படும் பாரபட்சம் சம்பந்தமான முறைப்பாடுகள் ஆதாரமற்றவையாகும்.

27 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், வீடமைப்பிற்காக 4 கட்டமாக 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் பிரித்து வழங்கப்படும். வீட்டுத் திருத்தப் பணிக்காக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும். இதனைவிட வலுவிழந்தோருக்கான 2ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன-என்றுள்ளது. (த-5)

# ஐ.நாவுக்கு தகவல் வழங்குவதற்கு கொழும்பு செல்ல வேண்டியதில்லை

### பேச்சாளர் கூறுகிறார்

நியூயோர்க், மார்ச் 9

இலங்கையின் வடக்கில் வாழும் தமிழ்மக்கள் ஏதாகிலும் பிரச்சினை தொடர்பாக ஐ.நாவுக்கு தகவல் தர விரும்புவார்களானால் அவர்கள் அதற்காக கொழும்புக்கு போக வேண்டும் என்பதில்லை. ஐ.நாவுடன் தொடர்பு கொள்வதற்கு வேறு மார்க்கங்களும் இருக்கின்றன.

இவ்வாறு நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கிலிருந்து கொழும்பிலுள்ள ஐ.நா பிரதிநிதிகளிடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சென்ற நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் வவுனியாவில் தடுத்து நிறுத்தப்பட்டனர் என்ற செய்தி தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.நாவுக்கு ஏதும் தகவல் வழங்க வேண்டும் என்றால் வேறு வழிமுறைகளும் இருக்கின்றன. கொழும்புக்குப் போக முடியவில்லையென்றால் அவைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும் - என்றார்.

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. பேச்சாளர் மார்ட்டீன் நொசர்க்கு.

காணாமல் போயுள்ள தமது

**ஐ.நாவுக்கு ஏதும் தகவல் வழங்க வேண்டும் என்றால் வேறு வழிமுறைகளும் இருக்கின்றன. கொழும்புக்குப்போக முடியவில்லையென்றால் அவற்றை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும்**

உறவுகளைக் கண்டுபிடித்து கொடுக்கும்படி அரசைக் கோரும் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளவும் கொழும்பிலுள்ள ஐ.நா. காரியாலயத்தில் இது தொடர்பாக அறிக்கையொன்றைக் கையளிக்கவுமெனப் புறப்பட்டுச் சென்ற வட பகுதி தமிழ் மக்கள் அநேகமானோர் வவுனியாவில் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

பத்துக்கு மேற்பட்ட பஸ்களில் கொழும்புக்குச் செல்வதற்காக வவுனியா, மன்னார் மற்றும் பல இடங்களில் இருந்து தமிழ் மக்கள் கொழும்புக்கு செல்ல ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த வேளையில் அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அவர்கள் கொழும்பு நோக்கிச் செல்கையில் பஸ்கள் இடையில் தாக்குதல்களுக்கு உள்ளாகலாம் என்ற தகவல் தங்களுக்கு கிடைத்திருந்தமையாலேயே அவர்கள் தடுக்கப்பட்டார்கள் என்று பொலிஸார் கூறினார்கள்.

மக்கள் தமது கருத்தை சுதந்திரமாக வெளியிடுவதற்கு சர்வதேச சட்டங்களும், இலங்கை அரசமைப்பும் அனுமதிக்கின்றன. என்பதால் இலங்கை அரசு அதற்கு தடை ஏற்படுத்தாமல் அனுமதிக்க வேண்டும் என்று கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரேரணை ஒன்றை கொண்டு வருவதன் மூலம் இந்த உரிமைகளை நிலைநாட்ட சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து அமெரிக்கா பணியாற்றி வருவதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது. (ப)

## இலங்கையில் நல்லிணக்கத்துக்கு நிதி வழங்கிறது அமெ.

கொழும்பு,மார்ச்.9

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு ஆதரவு மற்றும் பாதுகாப்பு என்பவற்றை அதிகரிக்கும் செயற்றிட்டத்துக்கும் நாட்டில் நல்லிணக்கத்தை வளர்க்கும் செயற்றிட்டத்துக்கும் தலா 5 லட்சம் அமெரிக்க டொலர் வீதம் நிதி வழங்கப் போவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அமெரிக்க தொண்டர் நிறுவனங்களுக்கு மட்டும் இது வழங்கப்படும்.

இலங்கையில் பிரச்சினைகளைத் துருவி ஆராயும் வகையான புலனாய்வு ஊடகத்துறையில் சுதந்திர ஊடகங்களின் ஊடகவியலாளர்களுக்கான செயற்றிட்டம் முதலாவது வகையாகும். மற்றையது சகல மக்களும் ஏனைய சமூகத்தினருடன் சமாதானமாக வாழ வழி செய்வதாக இருக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## தரமுயர்த்தப்பட்டது நானாட்டான் ம.வி.



மன்னார், மார்ச் 9

மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம் 1ஏபி பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இது நடைமுறைக்கு வரும் வகையில் வடமாகாணக் கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

1901 ஆம் ஆண்டு நானாட்டான் அடைக்கல அன்னை தேவாலயத்தின் ஒரு புறத்தில் கிடுகினால் வேயப்பட்ட கொட்டகை ஒன்றில் கத்தோலிக்க குருமார்களால் இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் படிப்படியாக பல முன்னேற்றங்களைக் கண்ட இந்தப் பாடசாலை தற்போது 1ஏபி தரத்துக்கு உயர்வடைந்துள்ளது.

இங்கு தரம் - 1 தொடக்கம் 13 வரையான வகுப்புகள் இடம்பெற்று வருகின்றன. இதில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளமை சிறப்பானதென அதிபர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

நானாட்டான் நகரத்தின் மத்தியில் பல்வேறு சமயங்களையும் சேர்ந்த மாணவர்களைத் தன்னகத்தே கொண்டு இந்தப் பாடசாலை வளர்ச்சி பெற்று வருவதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார். (க-12)

### வவுனியாவில் மூடப்பட்ட நிலையில் உள்ள

# உளவள நிலையத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

வவுனியா, மார்ச் 9

*வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலக வளாகத்தில் மூடப்பட்ட நிலையில் காணப்படும் உள வள நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

வடமாகாண கல்வித் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உள சமூக திட்டமிடல் செயலமர்வு ஒன்று இடம்பெற்றது. இதன் போதே வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளரிடம், வடமாகாண உளவளத்துணையாளர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

வன்னிப் பிரதேச உள சமூகச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கென 2008ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் உள சமூக இடையீட்டு நிகழ்ச்சித் திட்டப் பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வடமாகாண கல்வித்திணைக்களத்தால், வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலக வளாகத்தில் உள சமூக வள நிலையம் அமைக்கப்பட்டது.

இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டதும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார் ஆகிய கல்வி வலயங்களின் உள சமூகச் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழிகாட்டல் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

வன்னியிலிருந்து வருகை தந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் ஊடாக உணர்வுச் சமநிலையை இந்த நிலையத்தைச் சேர்ந்த உளவளத் துணையாளர்கள் ஏற்படுத்தினர்.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் முதல் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி திடீரென இந்த நிலையம் மூடப்பட்டது. புலம்பெயர் தமிழ் உறவுகளால் இந்த நிலையத்துக்கென அன்பளிப்புச் செய்யப்பட்ட இசைக் கருவிகள் உட்பட தளபாடங்கள் மாகாண கல்வித்திணைக்களத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு பயன்பாடு இன்றி முடக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் உளவளத் துணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே இதன் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-எ)

## இந்திய வீடுகள் கிடைக்காதவர்களுக்கு ஜனாதிபதி செயலணியால் வீடுகள்

வவுனியா, மார்ச் 9

ஜனாதிபதி செயலணியால் வழங்கப்படும் புள்ளித் திட்டத்தின் அடிப்படையில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான வீடுகள் வழங்கப்படவுள்ளன. இவ்வாறு வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் தெரிவித்தார்.

இந்திய வீட்டுத்திட்டம் கிடைக்காதவர்களுக்கு ஜனாதிபதி செயலணியின் புள்ளிவிவ்ரத்தின் அடிப்படையில் மூன்றாம் கட்டத்தில் வீடுகள் வழங்கப்படும்.

மேலும் மின்சாரம் இல்லாத பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் பிரதேச செயலக மட்டத்தில் நிறைவு பெற்று அதற்குரிய திணைக்களங்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, காணிகளுக்கான அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கு அதனை வழங்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-எ)



கிளிநொச்சி பழக்கடைகளுக்கு லொத்தர் மூலமாக வர்த்தகர்களைத் தெரிவு செய்வதில் கரைச்சிப் பிரதேச சபையின் தலைவரும், உப தலைவரும் ஈடுபட்டுள்ளனர். (க-405)

## இதுதான் அபிவிருத்தியா?

*முல்லைத்தீவு, மார்ச் 9*

*உள்ளூர் வீதிகளில் கற்களைப் பரவி மக்களைக் காயப்படுத்துவதுதான் வடக்கில் அபிவிருத்தியா என ஒட்டுசுட்டான் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.*

*ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காணப்படும் சேதமடைந்த வீதிகள் அபிவிருத்தி என்ற பெயரில் கற்கள் பரவிய நிலையில் காணப்படுகின்றன.*

*இதனால் பாதசாரிகள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. ஒட்டுசுட்டான் பாடசாலைக்குச் செல்கின்ற மிகவும் குறுகிய வீதியும் கற்கள் பரவிய நிலையில் காணப்படுவதால் வேறு பாதையால் சுற்றி வர வேண்டிய நிலை காணப்படுகின்றது. மேலும் முல்லைத்தீவு செல்லும் பிரயாணிகள் கூட வேறு பாதையால் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.*

*இந்த வேதனை எப்போது நீங்குமென ஒட்டுசுட்டான் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-500)*

## மீன்களுக்கு அதிக விலை

மன்னார், மார்ச் 9

மன்னாரில் இருந்து வவுனியாவிற்குக் கொண்டு வந்து விற்கப்படும் கடல் மீன்களின் விலை அடிக்கடி அதிகரிக்கப்படுவதால் வவுனியா மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

மன்னார்க் கடலில் பிடிக்கப்படும் மீன்கள் வவுனியாவுக்கு கொண்டு வரப்படுகின்றன. இந்த மீன்களில் சுறா, கீரி மீன், விளை மீன், பாரை, வாளை, முரல், சூரை, மஞ்சூரன் ஆகியவை அடங்கியுள்ளன.

ஆனால் இவற்றின் விலைகள் அடிக்கடி அதிகரிக்கப்படுவதால் வசதி குறைந்த மக்கள் இவற்றை வாங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக வவுனியாவில் பெய்யும் மழை காரணமாக குளத்து மீன்கள் குளங்களில் இருந்து வெளியேறியுள்ளன. இதனால் குளத்து மீனையும் பெற முடியாத நிலை தோன்றியுள்ளது.

எனவே மீன் வகைகளுக்குக் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்குமாறு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-402)

### மன்னார் நகரில் செயற்பட்டு வரும்

# உணவகங்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான கருத்தரங்கு





மன்னார், மார்ச் 9

மன்னார் நகரில் உள்ள உணவகங்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் நகரில் உள்ள உணவகங்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துதல் மற்றும் தரத்தை உயர்த்துதல் தொடர்பாக உணவகங்களின் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தக் கருத்தரங்கு பாவனையாளர் அதிகார சபையின் வட மாகாண இணைப்பாளர் கே. லயனல் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் நகர சபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ், மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி ஞா.குணசீலன், மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மன்னார் நகரில் உள்ள உணவகங்களின் உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மன்னார் நகரில் உள்ள உணவகங்களில் ஏற்பட்டுள்ள உள்ளக சுகாதாரக் குறைபாடுகள் தொடர்பிலும் அவற்றை எவ்வாறு மேம்படுத்துவது தொடர்பாகவும் உணவகங்களின் உரிமையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதேவேளை உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் எவ்வாறு உணவு வகைகளைக் கையாள்வது என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

இதேவேளை உணவு வகைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகளை விட மேலதிக பணம் அறவிடக்கூடாது எனவும், இனி வரும் காலங்களில் விலைக் கட்டுப்பாடு மற்றும் சுகாதார நடவடிக்கைகள் பரிசோதனை செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி ஞா.குணசீலன் தெரிவித்தார். (க-12)

## நெல் கொள்வனவு

வவுனியா, மார்ச் 9

வவுனியாவில் நெல் சந்தைப்படுத்தும் சபை, விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து வருகின்றது.

பெரும்பாலான விவசாயிகள் இந்த நிலையத்துக்குத் தமது நெல்லைக் கொண்டு வந்து விற்பனை செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது. (க-421)

## இலவச மின் இணைப்பு

வவுனியாவில் உள்ள சில வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

" வடக்கின் வசந்தம்" திட்டத்தின் கீழ் இந்த மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு மின் இணைப்புப் பெற்றவர்கள் சுனாமி மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-421)

உதயன்
09/03/2013

## மிதிவெடி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

'ஹலோரஸ்ட்' நிறுவனப் பணியாளர் ஒருவர் கண்ணிவெடி தவறுதலாக வெடித்ததில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த எம்.ரதன் என்ற பணியாளரே காயமடைந்தவராவார். இந்த வெடிப்புச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முகமாலை முன்னரங்கப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மண் அணையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் குறித்த பணியாளர் ஈடுபட்டிருந்தார். அதன்போது நியம அளவுக்கு அதிகமாக அதிக ஆழத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியை அகற்ற முற்பட்டபோதே இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது.

இடதுகையில் மூன்று விரல்கள் சிதைந்துள்ள நிலையில் குறித்த கண்ணிவெடி அகற்றும் பணியாளர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(த-5)

## ஏ-9 வீதி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வியாக யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஈ.சரவணபவன் எழுப்பியிருந்த கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே இந்த விவரங்கள் வெளியிடப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்திப் பணிகள் மந்த கதியில் நடக்கின்றன. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

இந்த வீதி அபிவிருத்தி வேலைகள் எப்போது பூர்த்தியடையும். அவற்றை மேலும் காலம் கடத்தாமல் கூடிய விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பியிருந்தார்.

வினாவுக்கான பதில் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி அபிவிருத்திப் பணிகள் 9.6.2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இவை இந்த வருடம் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதிக்குள் பூர்த்தியடையும்.

கண்டி - யாழ்ப்பாணம் வீதி கல்குளத்தில் இருந்து 230 கிலோமீற்றர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி நிறைவடையும்.

கண்டி-யாழ்ப்பாணம் எஞ்சிய பகுதி 230 கிலோமீற்றர் தூரம் யாழ்ப்பாணம் வரை இந்த வருடத்தில் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதிக்குள் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்படும்.

இந்த வீதி புனரமைப்புப் பணிகளுக்கு 85 சதவீதம் வெளிநாட்டு உதவியாகவும் அரச நிதியில் 15 சதவீதமும் செலவிடப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி வேலைகளை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றே மேற்கொண்டு வருகிறது எனவும் அந்தப் பதிலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-2)

## இந்திய அரசை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இது குறித்து, பிரதமர் மன்மோகனுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது;-

இலங்கைக் கடற்படையினர், அப்பாவி தமிழக மீனவர்கள் மீது, தாக்குதல்களை தொடர்ந்து கொண்டே இருக்கின்றனர். சில நாட்களுக்கு முன், தூத்துக்குடி மீனவர்கள், 16 பேரை பிடித்துச் சென்று, நீதிமன்றக் காவலில் வைத்துள்ளனர்.அமைதியான முறையில் வாழ்வாதரத்தைத் தேடும், தமிழக மீனவர்கள் மத்தியில் பீதியையும், அச்சத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, இலங்கைக் கடற்படை, இதுபோன்ற தாக்குதல்களை நடத்தி வருகிறது.ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்திய, நடத்தி வரும் தாக்குதல்களுக்கு, மனித உரிமை மீறல்களுக்கு, சர்வதேச விசாரணை வேண்டும் என, தமிழக அரசியல் கட்சிகள் நாடாளுமன்றில் வலியுறுத்தி வரும் இந்த நேரத்தில், தமிழக மீனவர்கள் மீது, இலங்கை அரசு தாக்குதல் நடத்தியுள்ளதில், பின்னணி இருப்பதாகக் கருதப்படுகிறது.ஈழத் தமிழர்கள் மீது நடந்த தாக்குதல்களுக்குச் சர்வதேச அளவிலான விசாரணையை, இந்திய அரசு கேட்கக் கூடாது என்று எச்சரிப்பதற்காக, தமிழக மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தியதாகவே தெரிகிறது -என்றுள்ளது.(த)

## ஜெனிவா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவையும் அலரி மாளிகையில் சந்தித்துப் பேசியிருந்தார்.

இதையடுத்து, அமெரிக்கா சென்ற சுப்பிரமணியசுவாமி, தெற்கு மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்கை சந்தித்துப் பேசியுள்ளார்.

தனிப்பட்ட முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட சந்திப்பு இது என்று கூறப்பட்டுள்ள போதிலும், இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரில், அமெரிக்காவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கான தரகராகவே அவர் இந்தச் சந்திப்பை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சுமார் ஒரு மணிநேரம் பிளேக்குடன் உரையாடியுள்ள சுப்பிரமணியசுவாமி, ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணை தொடர்பாக இலங்கையுடன் ஒபாமா நிர்வாகம் பேச்சு நடத்தி இணக்கம் காண வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்தப் பிரேரணை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பிரிவினைச் சக்திகளின் வெற்றியாக அமைந்து விடக்கூடாது என்றும், இதன் காரணமாக, விடுதலைப் புலிகள் மீள் எழுச்சி பெறக் கூடும் என்றும் பிளேக்கிடம், சுப்பிரமணியசுவாமி எச்சரித்துள்ளார்.

அமெரிக்க அதிகாரிகளுடனான தனது சந்திப்பு குறித்தும் அவர் திருப்தி வெளியிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் குறித்த எந்தவொரு விசாரணையையும் இலங்கையின் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசே மேற்கொள்ள வேண்டும் என்றும், எந்தவொரு அனைத்துலகக் குழுவும் அதை மேற்கொள்ளக் கூடாது என்றும் சுப்பிரமணியசுவாமி வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிகாரிகளுடன் தான் மேற்கொண்ட பேச்சுக்களின் அடிப்படையில், இலங்கைக்கு உத்தரவிடும் தொனியிலோ, அனைத்துலக விசாரணையைக் கோரும் வகையிலோ ஜெனிவா தீர்மானம் இருக்காது என்றும் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.(த)

## இனநல்லிணக்கம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

படும் என்றும் இதற்கென இலங்கை அரசுடன் இணைந்து போதிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்தியா நேற்று தெரிவித்துள்ளது.

டில்லி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மேற்கண்ட விடயங்களை வலியுறுத்திக் கூறினார்.

எனினும், ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையை இந்தியா ஆதரிக்குமா, இல்லையா என்பது குறித்து பிரதமர் மன்மோகன் சிங் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. இவ்விடயத்தில் தொடர்ந்தும் இந்தியா மதில் மேல் பூனை என்ற நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வருகிறது.

எனவே, பிரதமர் மன்மோகன் சிங்கின் பதிலில் தமக்கு திருப்தி இல்லை என்றும் இவரது பேச்சில் எந்த உத்தரவாதமும் இல்லை என்றும் தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தொடர்ந்து பேசிய மன்மோகன் சிங் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் சாமானிய மக்கள் படும் துயரம் குறித்து நாம் கவலைக்கொண்டுள்ளோம். இலங்கை தமிழர் சுயமரியாதை, கௌரவத்துடன் வாழ்வதை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்குவதில், இதனை பெற்றுத்தருவதில் இந்தியா தொடர்ந்து பணியாற்றும். அங்கு வாழும் தமிழர்களின் அமைதி மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இலங்கைத் தமிழரின் நிலை கவலை அளிக்கிறது. தமிழர் அமைப்புடன் இலங்கை அரசு பேச்சு நடத்த வேண்டும். - இவ்வாறு பிரதமர் பேசினார்.

ஆனால், இதற்கு தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இவரது பேச்சில் எதுவும் உத்தரவாதம் இல்லை என்றனர். இதனையடுத்து அவை ஒத்தி வைக்கப்பட்டது. (த-சி)

## தெல்லிப்பழை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முயன்றார்கள் என்பதை-கடந்த ஒரு வார காலத்தில் பொலிஸார் கண்டறிந்துள்ளார்கள் என்பது அவர்கள் நேற்று வழங்கிய தகவல்களி லிருந்து தெரியவருகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் தாம் எவரையும் கைது செய்யவில்லை, பொதுமக்கள் தாக்கப்பட்டதாக முறைப்பாடுகள் எதுவும் பதிவுசெய்யவில்லை எனப் பொலிஸார் கடந்தவார இறுதியில் செய்தியாளர்களிடம் கூறியிருந்தனர்.

குழப்பம் விளைவித்த இருவரை பொலிஸார் கைது செய்து கொண்டு செல்கையில் எடுக்கப்பட்டு ஊடகங்களில் வெளியான புகைப்படங்கள் வெறும்புனைவுகள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஏற்கனவே அடித்துக் கூறியிருந்தார்.

இந்த நிலையில் பொலிஸ் ஊடகப் பேச்சாள ரின் கருத்தை மறுதலித்திருப்பதாக அமையும் வகையில் தெல்லிப்பழையில் பொதுமக்களால் பிடித்து ஒப்படைக்கப்பட்ட இருவரை பொலி ஸார் தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றது உண்மைதான் என்பதை தற்போது அவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

அங்கு குழப்பம் விளைவித்த இரண்டு பேரையும் பொதுமக்கள் பிடித்து தம்மிடம் ஒப்படைத்தனர். அவர்களின் பாதுகாப்புக் கருதி அவர்களை எமது வாகனத்தில் ஏற்றிச் சென்று பின்னர் விடுவித்தோம் என்று தெரிவித்தார் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன. நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தெல்லிப்பழையில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் புகுந்த சிவில் உடையணிந்த நபர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தைக் குழப்பும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதன்போது பொதுமக்கள் பிரஸ்தாப இரண்டு பேரையும்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் அவர்களைக் கைது செய்து தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கடந்த வாரம் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான எம்.எம். ஜெப்றி, எம்.எம். ஏக்கநாயக்க ஆகியோர் பதிலளித்திருந்தனர்.

தெல்லிப்பழைச் சம்பவம் தொடர்பில் எவருமே கைது செய்யப்படவில்லை, குழப்பம் விளைவித்தனர் என்று கூறிப் பொதுமக்கள் எவரையும் தம்மிடம் ஒப்படைக்கவில்லை, அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவுமில்லை, அவர்கள் இருவரும் கூறியிருந்தனர்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்னவிடம் நேற்று கேள்வி எழுப்பப்பட்டது.

தெல்லிப்பழைச் சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெல்லிப்பழை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். கடந்த மாதம் 19 ஆம் திகதி அவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். ஆனால் பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவரும் அவ்வாறான முறைப்பாடு எதுவும் பதிவாகவில்லை என்று கடந்த வாரம் தெரிவித்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சம்பவம் தொடர்பில் பொலிஸில் செய் திருந்த முறைப்பாட்டின் பிரதி ஒன்று நேற் றைய ஊடகவியலாளர் மாநாட்டின் போது பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் காண்பிக்கப்பட்டது.

இதனையடுத்தே பொலிஸாரின் நிலைப்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடு குறித்து விசாரணைகள் மேற் கொள்ளப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன கூறினார்.

(த-4)

## ஆடவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

சகல நிறுவனங்களிலும் பால் சமத்துவம் தொடர்பில் பேசப்படுகின்றது. ஆனால் எமது பல்கலைக்கழகத்திலே இன்று பால் சமத்துவமில்லை:பெண்களே 60 சதவீதம் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் படிக்கின்றனர். இது தனியே எமது யாழ். பல்கலைக்கழகத்தின் நிலைமையல்ல. இலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழகங்களினதும் நிலை இது தான்.

நாங்கள் மகளிர்தினம் கொண்டாடும் காலம் போய் மிக விரைவில் ஆடவர் தினம் கொண்டாடும் காலம் வரப்போகின்றது.

வடக்கில் பல குடும்பங்களுக்கு பெண்களே தலைமை தாங்குகின்றனர். இந்தக் குடும்பங்களுக்கு வங்கிகள் விசேட உதவிகளை வழங்க வேண்டும் - என்றார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணியின் தலைவி ஜே.ரூபசிங்கம் தெரிவித்ததாவது:-

இன்று பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமை உருவாகியுள்ளது. பெண்கள் தங்களின் ஒழுக்கத்தை தாங்களே வகுத்துக் கடைப்பிடிக்க வேண்டும்.

சமூகத்தில் ஒரு பெண் விடுகின்ற தவறு ஒட்டுமொத்த பெண் சமூகத்தையே பாதிப்புக்குள்ளாக்குகின்றது. யார் தவறுவிட்டாலும் பாதிப்பு பெண்களுக்குத்தான்.

போரின் பின்னர் இங்குள்ள பெண்கள் பல பாதிப்புக்குள்ளாகின்றனர். காணாமல் போனோரைத் தேடுவது முதல், குடும்பத்துக்கு தலைமை தாங்குவதை வரை பெண்களே இன்று செய்கின்றனர். இந்தப் பெண்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும் - என்றார்.

பெண்கள் தமக்கு இடம்பெறுகின்ற வன்முறைகளை வெளிப்படுத்துவது இல்லை இதன் காரணமாக உள ரீதியான பாதிப்புகளையே சந்தித்து வருகின்றனர் - என்றார் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன்.

யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று யாழ்.நாவலர் வீதியிலுள்ள தியாகி அறக்கொடை நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''யாழ். மாவட்டத்தில் பெண்கள் உயர்ந்த பதவிகளில் இருப்பது பலத்தை தருவதாக அமைந்துள்ளது. அதனைப் போன்று மகளிர் அமைப்புகள் ஊடாக பெண்களுக்கான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் போது சமூகத்துக்கு அது பலத்தை தருவதாக உள்ளது'' - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறை சிரேஷ்ட - விரிவுரையாளர் மருத்துவர் திருமதி. சிறிரஞ்சனி சிவபாலன், யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணர் திருமதி ஜி. பவானி, யாழ். தேசிய கல்வி நிறுவன பிராந்திய இணைப்பாளர் திருமதி தனலட்சுமி விஸ்வநாதன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.




அதனைத் தொடர்ந்து 'பெண்கள் உரிமைகள்' எனும் நூல் வெளியீடும் 'பெண்கள் விடுதலை' எனும் நாடகமும் இடம்பெற்றது.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள், மாதர் சங்கத்தினர் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5-14)

## பெண்களுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இதேவேளை, வலது குறைந்த, கண் பார்வையற்ற, செவிப்புலனற்ற, வாய் பேச முடியாத பெண்கள் அரச அலுவலகங்களில் தமக்குரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் உட்கட்டமைப்பு வசதிகளையும், ஆளணி வசதிகளையும் செய்து தர வேண்டும் என்று சமூக சேவை அமைச்சிடம் அவர்கள் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

(த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமெரிக்காவின் ஜெனிவாப் பிரேரணை: வினையும் விளைவும் என்னாகுமோ..?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையின் நகல், நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. சுவிஸ் நேரத்தின்படி நேற்று மாலை மூன்று மணியளவில் தனது பிரேரணை குறித்து, ஐ.நா.மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்கா விளக்குவதற்கு ஏற்பாடாகி இருந்தது. அதன் பின்னரே பிரேரணை குறித்து இறுதி முடிவு செய்யப்பட்டு அது பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

2012 மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடியொற்றி அமெரிக்காவின் புதிய பிரேரணை அமையும் என்று அமெரிக்க உயர்மட்டத் தகவல்கள் முன்பு தெரிவித்திருந்தன.

கடந்த ஆண்டுத் தீர்மானத்தில், இலங்கையால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு கோரப்பட்டிருந்தது. கொடுக்கப்பட்ட ஒருவருடகாலத்தில் அத்தீர்மானத்தின் பிரதான கோரிக்கைகளை இலங்கை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது. அதனாற்றான் இரண்டாவது தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. இத்தீர்மானம் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை துரிதமாகச் செயற்படுத்த வேண்டும் என்று கோரியதுடன் நின்றுவிடாது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கையையும் இலங்கை செயற்படுத்த வேண்டும் என்று கோரியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாகச் செயற்படுத்த முழுமனமின்றி தடுமாறிக்கொண்டிருக்கிறது இலங்கை. அமெரிக்காவின் இப்போதைய பிரேரணை, தீர்மானமாகியதும் அது இலங்கைக்கு பேரிடியாகவே மாறும் என்ற கருத்தே மேலெழுந்த வாரியாகத் தொனிக்கிறது.

அத்துடன், அமெரிக்கத் தீர்மானம் வெளிவந்த பின்பே அதிலுள்ள சொற்பதங்களைப் பரிசீலனை செய்து முடிவெடுக்கப்போவதாகச் சறுக்கி நிற்கும் இந்தியாவும் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்படலாம்...

கடந்த ஆண்டுத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு நிபந்தனையாக இந்தியா எதனை நீக்கக் கோரியதோ அதே விடயம் இம்முறையும் சேர்க்கப்பட்டுவிட்டது. மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கையை செயற்படுத்துவது கல்லில் நார் உரிப்பது போன்று பெரும் கடினமானதே.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணையில் உள்ள முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

* நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளைத் துரிதமாகவும் காத்திரமாகவும் நடைமுறைப்படுத்த நாம் விடுத்த கோரிக்கையை இலங்கை அரசுக்கு மீளவும் வலியுறுத்துகிறோம்.

* ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளை இலங்கை செயற்படுத்த வேண்டும்.

* நீதித்துறை உத்தரவாதம், சமத்துவம், பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடுகள் ஆகியவற்றை உத்தரவாதப்படுத்த நம்பகத்தன்மை வாய்ந்த சுயாதீனமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

* விசேட நடைமுறைகளை மேற்கொள்ள ஆணை அதிகாரம் கொண்டோருடன் இணைந்து நீடித்துவரும் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணவேண்டும். ஒருதலைப்பட்சமான மரணதண்டனைகள், பலவந்தமாகக் காணாமற் போகச் செய்வதைத் தொழிலாகக் கொண்ட குழு, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஆகிய விவகாரங்களுக்கும் சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கும் முடிவுகட்டப்பட வேண்டும்.

* இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலும் சித்திரவதைகள் மற்றும் ஆள்கடத்தல் தொடர்பாகவும் இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அவதானிக்க ஐ.நாவின் பிரத்தியேக கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு அனுப்பவேண்டும்.

இந்தப் பிரேரணை தீர்மானமாகியதும், முன்னைய தீர்மானத்தை விட வலுவுள்ளதாக வடிவெடுக்கும். இலங்கைக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் புதிய பிரேரணை பெரும் நெருக்கடியைத்தரும்.

தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க ஐ.நா.குழு இலங்கை செல்வது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய அறிக்கையில் இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணை என்பவை இலங்கை மீதான சர்வதேசத்தின் பிடி மேலும் இறுகுவதற்கு வழி வகுக்கும். முதலாவது தீர்மானத்தில் உள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் இலங்கை தோல்வி கண்டதால் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் உள்ள சில கடுமையான சொற்பதங்களை நீக்கும் முயற்சி சாத்தியப்படமாட்டாது என்றே நம்பப்படுகிறது.

அமெரிக்காவின் புதிய பிரேரணை குறித்துக் கிஞ்சித்தும் சட்டை செய்யப்போவதில்லை என்ற தொனியில் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார். அந்த விடயத்தில் அமெரிக்காவுடன் தனிப்பட்ட முறையில் பேச வேண்டிய அவசரம் இப்போது இல்லை என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் பிரேரணை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற மாட்டாது என்ற அர்த்தத்தில் அமைச்சர் அதனைச் சொன்னாரா, அல்லது

ஜெனிவா மாநாட்டில் வெளிப்படும் சவால்களை எதிர்கொள்ளும் வல்லமை அல்லது சாதுரியம் இலங்கை அரசுக்கு உண்டு என்ற தற்துணிவுடன் கூறினாரா என்பதனை ஊகிப்பது கடினம்.

தண்ணீர் மட்டம் தலைக்கு மேல் வந்த பின்னர் சாண் என்ன முழம் என்ன என்று நினைத்துக் கருத்துரைத்தாரோ தெரியவில்லை.

எனினும் நாம் விழிப்புடன் தான் இருக்கிறோம் என்ற அமைச்சரின் கூற்று தள்ளாட்டத்தையே பிரதிபலிக்கிறது. எதற்கும் அமெரிக்கப் பிரேரணையின் விளைவை இப்போது எதிர்வு கூற முடியாது என்பதே யதார்த்தம் எனலாம்..!

# திட்டமிடல் சேவைக்கான பரீட்சையில் தமிழ்மொழி மூலமாக 7 பேரே சித்தி

அச்சுவேலி, மார்ச் 9

இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்குக் கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2011-2012 இல் தகுதி பெற்றுள்ள 205 பேரில் தமிழ்மொழி மூலம் தோற்றியவர்களில் 7 பேர் மட்டுமே தகுதி பெற்றுள்ளனர்.

மிக மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே தமிழர் மற்றும் முஸ்லிம்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலை, திறந்த நிலை என்ற வகையில் போட்டிப் பரீட்சை நடைபெற்றது. மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் தகுதிபெற்ற 53 பேரில் தமிழ்மொழி மூலம் தோற்றியோரில் எவருமே தகுதிபெறவில்லை.

திறந்த நிலையில் நடைபெற்ற பரீட்சையில் 152 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதில் தமிழ்மொழி மூலம் தோற்றியோரில் ஏழு பேர் தகுதி பெற்றுள்ளனர். தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றித் தகுதிபெற்றுள்ளோர் பெயர் விவரம் வருமாறு:-

மொஹமட் றிபான் (மருதமுனை)-நிலை 21, ஏ.லதுமீரா (கிளிநொச்சி)-நிலை 45, எம்.சஜீரா (நீர்கொழும்பு)-நிலை 45, வி.தர்சினி (சுன்னாகம்)-நிலை 53, பி.ராஜ் வினோத் (சுன்னாகம்)-நிலை 105, மொஹமட் சவ்றி (சாய்ந்தமருது)-நிலை 118, எவ்.சற்.எஸ்.மெஹமட் (பத்திரமுல்ல)-நிலை 118.

இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக திறந்தநிலை, மட்டுப்படுத்தப்பட்ட நிலை என்ற வகையில் பரீட்சை நடைபெற்றது.

பரீட்சார்த்திகள் தோற்றிய மூன்று பாடங்களிலும் பெற்ற புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு மொத்தப்புள்ளி அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட நிலைக்கு உயர்புள்ளி 225, தாழ்புள்ளி 192. திறந்தநிலைக்கு உயர்புள்ளி 226 தாழ்புள்ளி 186 என்ற வெட்டுப்புள்ளி அடிப்படையில் 'நிலை' அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சை கடந்த வருட நடுப் பகுதியில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்டது. பரீட்சை முடிவுகள் நிதித் திட்டமிடல் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

## துறைமுக அதிகார சபைக்கு ரூ.408 கோடி 2012 இல் இலாபம்

கொழும்பு, மார்ச் 9

இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை கடந்த ஆண்டில் 408 கோடி 60 இலட்சம் ரூபாவை நிகர இலாபமாகப் பெற்றுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் திட்டமிடல் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆயிரத்து 225 கோடி 70 இலட்சம் ரூபாவால் சாதனை படைத்த வருவாய் ஒன்றைத் துறைமுகங்கள் அதிகார சபை ஈட்டிக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை சர்வதேசத்துடன் போட்டிபோடும் அளவுக்கு பெரிய கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடையக்கூடிய வகையில் நிர்மாணிக் கப்பட்டு வரும் 6.4 கிலோ மீற்றர்கள் நீளமான துறைமுக நீரேரியின் பணிகள் நிறைவடைந்துள்ளன.

துறைமுகங்கள் அதிகாரசபை நட்டமடைந்து வருகிறது எனவும் கடன்களைப் பெற்றுவருகிறது எனவும் எதிர்த்தரப்பில் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

நாட்டின் அபிவிருத்திக்கே கடன் தொகைகள் பெறப்படுகின்றன. சர்வதேச நாடுகள் கடன் வழங்கும் அளவுக்கு இன்று எம்மீது நம்பிக்கை கொண்டுள்ளன.

இலங்கையைக் கப்பல் பயணங்களின் கேந்திர நிலையமாக்கும் இலக்குடன் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் செயற்றிட்டம் துறைமுகங்கள் அதிகாரசபை மூலமாக நடைமுறைப்படுத்தப்படும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

## நிரந்தர பல் வைத்தியர் வேலணைக்கு நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பற்சிகிச்சை நிலையத்துக்கு நிரந்தரமாக பல் வைத்தியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பல் வைத்தியரே இந்தப் பற்சிகிச்சை நிலையத்துக்குத் தற்காலிகமாகப் பணியாற்றி வருகின்ற நிலையில் தற்போது இந்த பற்சிகிச்சை நிலையத்துக்கு நிரந்தரமாக பல் வைத்தியர் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

புதிதாக நியமிக்கப்படும் இந்த பல் வைத்தியர் நயினாதீவு பற் சிகிச்சை நிலையத்திலும் வாரத்தில் ஒரு தடவை பணியாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## உள்ளூராட்சி சபை பணியாளருக்கு சிங்களபாடப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 9

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு பத்து நாள்கள் சிங்கள பாடப் பயிற்சிப் பட்டறையை விரைவில் நடத்தவுள்ளனர்.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து நடத்தவுள்ள பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றவுள்ள உத்தியோகத்தர்களின் விவரங்களை உடனடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ம-9)

## நினைவுக் கூட்டமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,மார்ச் 9

இலங்கையின் பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடித் தலைவராக விளங்கிய தோழர் நா.சண்முகதாசனின் 20 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டமும், 'ஒரு கம்யூனிஸ்டின் அரசியல் நினைவுகளும்' எனும் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு டி.எம்.ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இ.தவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை த.சிறீபிரகாஸும் கருத்துரையை எஸ்.கணேசவேல், க.தணிகாசலம், ஏ.சிவரட்ணம் ஆகியோரும் சிறப்புரையை கா.செந்தில்வேலும் நூல் வெளியீட்டுரையை சோ.தேவராஜாவும் நிகழ்த்தவுள்ளனர். (ம-13)

## மந்திகைச் சந்தைக் கட்டப் பணிகளின்போது உடைக்கப்படும் கடைக்கு மாற்று ஏற்பாடு செய்க

### பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரிடம் கோரிக்கை

வடமராட்சி, மார்ச் 9

மந்திகை சந்தைக் கட்டடப் பணிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்காக இடிக்கப்படும் பிரதேச சபைக்குச் சொந்தமான நான்கு கடைகளுக்கும் மாற்றுக் கடை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பருத்தித் துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சிவனிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சந்தை முகப்பு வாசலில் உள்ள நான்கு கடைகளையும் நடத்திவரும் கடைக்காரர்கள் நால்வரும் ஒன்றிணைந்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கட்டடப் பணிகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்த மந்திகை சந்தைக் கட்டட வேலைகள் மேலும் 200 இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வேலைகள் ஆரம்பிக்கப்படும் போது முகப்பில் உள்ள நான்கு கடைகளும் இடிக்கப்பட்டு, அந்தக் கடைகள் இருக்கும் இடத்தையும் சேர்த்து சந்தைக் கட்டடம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் "கடைகளைநம்பி வியாபாரம் செய்துவரும் நாங்கள் வங்கிகள், தனியார் நிறுவனங்களிடம் கடன் பெற்றே வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றோம். இந்தக் கடைகள் இடிக்கப்படுமாயின் நாம் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் பெரிதும் துன்புறவேண்டிய நிலைமை ஏற்படும்.

வியாபாரத்தைச் செய்தே பெற்ற கடன்களை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. எனவே கடைகள் இடிக்கப்படும் போது மாற்றுக் கடைகளை ஒதுக்கித் தந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவி புரியுமாறு வேண்டுகின்றோம்'' என்று பிரதேச சபைத் தலைவரிடம் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## ராணுவத்தினரின் சோதனையால் இரவுவேளை அராலி மக்கள் அச்சம்

வலி. வடக்கு, மார்ச் 9

இரவு வேளையில் இராணுவத்தினர் சோதனையில் ஈடுபடுவதால் அராலிப் பகுதி மக்கள் பெரும் நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றனர்.

மாலை வேளைகளில் அராலி கிழக்கு, அராலி தெற்கு ஆகிய பகுதிகளில் இந்த நடவடிக்கையை இராணுவத்தினர் நாளாந்தம் மேற்கொண்டு வருகின்றனர்.

அராலி கிழக்கு அம்மன் கோயிலுக்கு அண்மையாக உள்ள கேணியடியிலும் மற்றும் அராலி தெற்கில் உள்ள வெங்காயச் சங்கத்துக்கு அருகில் உள்ள ஆலடியிலும் இந்த சோதனை நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

வீதிகளுக்குக் கூட மின்குமிழ்கள் பொருத்தப்படாத நிலையில், இந்தப் பகுதிகளில் படையினர் இரவில் நிற்பதால் அந்தப் பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். (ம-86)

### வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட

# முஸ்லிம்களை அரசாங்கம் குடியமர்த்தி வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்

**வவுனியா நகர சபை உறுப்பினர் தெரிவிப்பு**

வவுனியா, மார்ச் 9

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை அவர்களின் சொந்த மண்ணில் குடியமர்த்தி, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அரசு செய்து கொடுக்கவேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் வவுனியா மாவட்ட இன நல்லுறவுக்கான ஒன்றியத்தின் தலைவரும், வவுனியா நகரசபை உறுப்பினருமான அப்துல் பாரி.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

வடக்கில் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் 22 வருடங்கள் கடந்த நிலையிலும் உரியமுறையில் மீள் குடியமர்வு செய்யப்படவில்லை. இருப்பினும் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ரிஸாத் பதீயுதீன், வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக இருக்கின்றமையால் எமது மக்களை மீள் குடியமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். அவரது முயற்சியை முறிடிக்கும் வகையில் பெரும்பான்மை அரச அதிகாரிகளும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் அமைப்புகளும் செயற்பட்டு வருகின்றன.

> வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் சுமார் 35 ஆயிரம் குடும்பங்கள் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மீள் குடியமர்வதற்கு தயார் நிலையில் உள்ளன.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் சுமார் 35 ஆயிரம் குடும்பங்கள் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மீள் குடியமர்வதற்கு தயார் நிலையில் உள்ளன. இந்தக் குடும்பங்களில் சுமார் 22 ஆயிரம் குடும்பங்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டிவிட்டு தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதற்கு பல அமைப்புகள் முயற்சி செய்து வருகின்றன.

அரசின் காணிக் கொள்கையின் பிரகாரமே முஸ்லிம் மக்களுக்கான காணிப் பங்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த நடைமுறைகள் மீறப்பட்டிருப்பின் அது குறித்து கவனம் செலுத்துவது நியாயமானதாகும். அதை விடுத்து மக்களின் குடியமர்வுக்கென பெறப்பட்ட காணிகளை அமைச்சர் ஒருவர் பெற்றுக்கொண்டார் என்று தெரிவிக்கும் கருத்து அப்பட்டமான பொய்யாகும்- என்று உள்ளது. (க-400)

## எப்போது விடிவு காலம் இந்தக் கட்டடங்களுக்கு?

துணுக்காய், மார்ச் 9

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட துணுக்காய் பிரதேச சபைக் கட்டடம், ஐயன்கன்குளம் பொதுச்சந்தை ஆகியன இதுவரை திறந்து வைக்கப்படாமை குறித்து இங்குள்ள பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச சபையின் கட்டடம் கடந்த போரின் போது சேதமடைந்து, பின்னர் 'என்றிப்' திட்டத்தின் கீழ் ஐந்து மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

இதன் பணிகள் கடந்த நவம்பர் மாதத்தில் நிறைவு பெற்றுள்ள போதிலும் திறந்து வைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றது.

இதேவேளை துணுக்காய் பிரதேச சபையின் கீழ் உள்ள ஐயன்கன்குளம் பொதுச் சந்தைக்கான புதிய கட்டடமும் 23 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அதுவும் திறந்து வைக்கப்படாமலேயே உள்ளது.

இரு கட்டடங்களும் அரசியல்வாதிகள் சிலரின் வருகைக்காக காத்துக் கொண்டிருக்கின்றன என்று இங்குள்ள பலரும் கடும் விசனம் தெரிவிக்கின்றனர். (க-6)

## கஞ்சா பொதிகளுடன் சிக்கினர் மன்னார் நகரில் மூவர்

மன்னார், மார்ச் 9

கஞ்சா பொதிகளை வைத்திருந்த மூன்று பேர் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இந்த மூன்று பேரும் வெவ்வேறு இடங்களில் வைத்து கஞ்சா பொதிகளுடன் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் அ. யூட்சன் குறித்த மூவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டமும் மூன்று மாத கால சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பு வழங்கினார்.

தண்டத்தை இவர்கள் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒரு மாத கால சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

(க-12)

## உயிலங்குளம் வீட்டுத்திட்ட மக்களுக்கு சிரமங்கள்

கிளிநொச்சி, மார்ச் 9

துணுக்காய் உயிலங்குளத்தில் அமைக்கப்பட்ட இந்திய வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் மக்கள் பல்வேறு வகையிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் குடிதண்ணீர் தொடக்கம் வாழ்வாதாரத் தொழில்கள் வரை அனைத்துக்குமே சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மிகவும் நலிவுற்ற குடும்பங்களுக்கென இந்திய அரசின் நிதி உதவியுடன் துணுக்காய் உயிலங்குளம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் தற்போது 40 குடும்பங்கள் வசித்து வருகின்றன.


இவர்களது குடிதண்ணீர்த் தேவைக்கென இரண்டு குழாய்க் கிணறுகளும் ஒரு திறந்த கிணறும் தற்போது பாவனையில் உள்ளன இவற்றில் இருந்து தமக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்வதில் இவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

> இதனால் இவர்களது வாழ்வாதார நிலையும் மோசமாகக் காணப்படுகின்றது.

அத்துடன் போரினால் உழைப்பாளர்களை இழந்து வருமானம் இல்லாது வறுமைக்கோட்டின் கீழ் இந்தக் குடும்பங்கள் உள்ளன. இதனால் இவர்களது வாழ்வாதார நிலையும் மோசமாகக் காணப்படுகின்றது.

மேலும் இங்குள்ள வீதிகள் சேதமடைந்து காணப்படுவதால் தாம் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

(க-6)



முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டில் வளரும் பப்பாசி மரத்தில் கொம்பு வடிவில் காய்த்த பப்பாசிக் காயைக் காண்கிறீர்கள். (க-6)

## வவுனியா பட்டகாட்டுக்குளத்தில் கால்வாய் அமைக்க வேண்டுகோள்

மன்னார், மார்ச் 9

பட்டாணிச்சூர் பட்டகாட்டுக்குளத்தில் இருந்து வான் பாயும் நீர் கால்வாய் ஊடாகச் செல்லக்கூடிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பட்டாணிச்சூர் பட்டகாட்டுக் குளத்துக்கு அருகில் வயல்நிலங்கள் உள்ளதால் இவற்றினூடாகச் செல்ல முடியாத நீர் மழை காலங்களில் வீதிகளைக் குறுக்கறுத்துப் பாய்ந்து செல்கின்றது.

இதனால் வீதிகள் சேதமடைவதோடு மக்கள் பயணிக்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆகவே குளத்தின் மேலதிக நீர் பாய்ந்து செல்லும் வண்ணம் கால்வாய் ஒன்றை அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் குளம் வான் பாய்வதால் குளத்தில் விடப்பட்ட நன்னீர் வளர்ப்பு மீன் குஞ்சுகள் வெளியேறி வருகின்றன. இதனால் இந்தக் குளத்தில் மீன் பிடித்து ஜீவனோபாயத்தை நடத்தும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-402)

## விழிப்புலன் இழந்தோர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி,மார்ச் 9

விழிப்புலன் இழந்தோர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட விழிப்புலன் இழந்தோர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இந்தப் பகுதிக்கான பொலிஸ் இணைப்பதிகாரி எம்.எல் அரிப்டின் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் பொலிஸ் தொடர்பாடல் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் விழிப்புலன் இழந்தோர் சங்கத்தின் தலைவர் எஸ்.ரூபதாஸ், உபதலைவர் ஏ.எமிலியாம்பிள்ளை, செயலாளர் எஸ்.ஆனந்தராஜா உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

எதிர்காலத்தில் விழிப்புலன் இழந்தோர் பிறரை நம்பி வாழும் நிலையை மாற்றி சொந்தக்காலில் நிற்கும் நிலையை உருவாக்க வேண்டும்.

மேலும் இவர்களுக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்பன தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக இணைப்பதிகாரியான எம்.எஸ்.அரிப்டீன் தெரிவித்தார். (க-6)

## போதனாசிரியர், பரிசோதகர் பதவிகளுக்கு விண்ணப்பம்

கிளிநொச்சி, மார்ச் 9

கிளிநொச்சி மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் போதனாசிரியர் மற்றும் பரிசோதகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தன்னியக்க வாகன போதனாசிரியர் பதவிக்கு வாகனத் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா தகைமையுடையவர்களும், தொழிற்சாலை மின் இணைப்பாளர் பதவிக்கு மின்னிணைப்பு தொழில்நுட்பத்தில் டிப்ளோமா தகைமையுடையவர்களும், பரிசோதகர் பதவிக்கு 2 வருட தொழில்நுட்ப அனுபவம் உடையவர்களும், கணித விஞ்ஞான பாடங்களில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான முடிவு நாள் இந்த மாதம் 15 ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-14)

## மாந்தை கிழக்கு வீதிகள் அனைத்துமே சேதம்

**பிரதேச செயலர் கூறுகிறார்**

துணுக்காய், மார்ச் 9

மாந்தை கிழக்கிலுள்ள வீதிகள் அனைத்தும் சேதமடைந்த நிலையிலேயே உள்ளன என்று மாந்தை கிழக்கு பிரதேச செயலர் தெரிவித்தார்.

தற்போது பெய்து வரும் மழை காரணமாகவே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறிய அவர், இராணுவத்தினரின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட வீதிகளும் மழை காரணமாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கும் பிரதேச செயலகத்துக்கும் செல்வதில் இங்குள்ள மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பிரதேச செயலர் கூறினார்.

இதேவேளை மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தால் அரச அதிபருடனான சந்திப்பின் போது போக்குவரத்து மற்றும் மின்சாரம் தொடர்பாகவே மக்கள் பல கோரிக்கைகள் முன்வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. கடும் மழை காலங்களில் சிறாட்டிகுளம் கிராமத்துடனான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு விடுகிறது எனவும் பிரதேச செயலர் மேலும் குறிப்பிட்டார். (க-18)

## கல்வாரி ஆலயத்தின் வருடாந்த திருவிழா

வவுனியா, மார்ச் 9

பிரசித்தி பெற்ற வவுனியா பெரியகோயில்குளம் கல்வாரி தேவவாலயத்தின் வருடாந்தத் திருவிழா இடம்பெற்று வருகின்றது.

கடந்த வாரம் ஆரம்பமான வருடாந்த திருவிழா இம்மாத இறுதிப் பகுதி வரை இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருவிழாவின் இறுதிநாள்களில் சிறப்பான முறையில் பூசைகள் இடம்பெறுவது வழக்கமாகும்.

இந்த ஆலயத்திற்கு பாத யாத்திரையாகவும், வாகனங்கள் மூலமும் வந்து செல்லும் பக்தர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையால் விசேட சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(க-421)

### சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள்

## அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டடங்கள் இனங்காணப்பட்டன

தென்மராட்சி,மார்ச் 9

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி கட்டப்பட்ட பல கட்டடங்கள் நகரசபை உத்தியோகத்தர்கள் குழுவினால் வசமாக இனங்காணப்பட்டுள்ளன்.

நகர சபையின் அனுமதியின்றி கட்டடங்கள் கட்டக்கூடாது என நகர சபையால் அறிவித்தல்கள் விடுக்கப்பட்ட போதிலும் சிலர் அதனை மீறி கட்டடங்களை அமைப்பதாக கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து தலைவர் இ.தேவசகாயம் பிள்ளையின் பணிப்பின் பேரில் உத்தியோகத்தர்கள் குழு நேற்றுமுன்தினம் பல இடங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டது.

அந்த வேளையில் அனுமதியின்றி குடியிருப்புக்கள், மதில்கள், குடியிருப்பு நீடிப்பு போன்ற நிர்மாண வேலைகள் இடம்பெற்றுள்ளதை இனங்கண்டனர்.

அனுமதிப் பத்திரமின்றி கட்டடங்கள் அமைத்தோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்ககப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சபை எல்லைக்கு உட்பட்ட அனைத்து வட்டாரங்களிலும் திடீர் பரிசோதனைகளை நடத்தி அனுமதியின்றி கட்டடங்கள் அமைப்போர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தலைவர் சி.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ம-9)

# 85 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் இந்தப் போகத்தில் உருளைக்கிழங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். குடாநாட்டில் இந்தப் போகத்தில் உருளைக் கிழங்குச் செய்கை விஸ்தரிப்புச் செய்யப்படவுள்ளது.

அந்த வகையில் இந்த முறை 85 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் உருளைக் கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த போகத்தில் உருளைக்கிழங்குச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் பெரும் விளைச்சலைப் பெற்றிருந்தனர்.

சுமார் 55 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட உருளைக்கிழங்குச் செய்கையில் இருந்து இந்த விளைச்சலைப் பெற்றிருந்தனர்.

**உருளைக்கிழங்குச் செய்கையாளரை உள்ளடக்கிய அமைப்பு ஒன்றையும் உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

கடந்த போகத்தை விட இந்தப் முறை அதிக எண்ணிக்கையான விவசாயிகள் உள்ளூர் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்தப் நிலையில் இந்த விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கை விவசாயிகளை பாதிக்கப்படாத வகையில் சந்தைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென உருளைக் கிழங்குச் செய்கையாளரை உள்ளடக்கிய அமைப்பு ஒன்றையும் உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமம், மாவட்டம், மாகாணம் போன்ற மட்டங்களில் இந்தச் சங்கங்களை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் நடவடிக்கைகள் ஊடாக உருளைக்கிழங்குச் செய்கையாளர் எதிர் காலத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ளாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கூறப்பட்டது. (ம-17)

## நாயன்மார்கட்டு முறிவு நெரிவு வைத்தியசாலை காணியை நம்பிக்கைச் சொத்தாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 9

நாயன்மார்கட்டு முறிவு, நெரிவு வைத்தியசாலைக்கென வழங்கப்பட்ட காணியை அந்த வைத்தியசாலைக்கு நம்பிக்கைச் சொத்தாகி ஆவணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த காணியைப் பொதுத் தேவைக்குப் பயன்படுத்துவதற்கும் அதனைச் சுவீகரிக்க வேண்டியுள்ளது என்று நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய குறிப்பிட்ட காணியின் உரிமையாளரை இனங்காண வேண்டியுள்ளது என்றும் குறித்த காணியின் உரிமையாளர், வாரிசுகள், உறவினர்கள் இருப்பின் நல்லூர் பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)



மாதகலில் நிலை கொண்டுள்ள கடற்படையினரால் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள், அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களென 84 குடும்பங்களுக்கு உலர் உணவு அல்லாத பொருள்கள் அடங்கிய பொதிகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. பொன்னாலைச் சந்தியில் அமைந்துள்ள கடற்படை முகாமில், மாதகல் மற்றும் அதனை அண்டிய பகுதி களின் கடற்படை கட்டளை அதிகாரி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கடற்படை களின் கட்டளைத் அதிகாரி ரியர் அட்மிரல், உடனிருந்த கலந்து கொண்டு பொது மக்களுக்கான பொருள்களை வழங்கினர். (ம-86)

## மேலும் 5 கிராமங்களுக்கு வடமராட்சி கிழக்கில் மின்சாரம்

வடமராட்சி, மார்ச்9

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மேலும் 5 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஆழியவளை, சுனாமிக் குடியிருப்பு, வெற்றிலைக் கேணி, முள்ளியான், போக் கறுப்பு, நாகர்கோவில் ஆகிய கிராமங்களுக்கே மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் முதல் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மருதங்கேணியில் உள்ள அரச அலுவலகங்களுக்கு மின் இணைப்பு முதன் முதல் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மருதங்கேணி செம்பியன் பற்று வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மின் இணைப்பு வ ழங்கப் பட்டது.

இவற்றுக்கு முன்னதாக கடந்த வருடத்துக்கு முன்னரேயே பருத்தித்துறைப் பகுதியில் இருந்து வடமராட்சி கிழக்கில் மணற்காடு, குடத்தனை அம்பன் ஆகிய கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## சங்கிலி அபகரித்தோர் அகப்பட்டனர்

தென்மராட்சி,மார்ச் 9

வீதியில் சென்ற மூதாட்டியின் தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு ஓட்டோவில் சென்றோரைத் துரத்திப் பிடித்தனர் வரணிப் பிரதேச இளைஞர்கள்.

நேற்று முன்தினம் மாலை வரணிப் பகுதி வீதியில் நடந்து சென்ற மூதாட்டியை ஓட்டோ ஒன்றில் வந்தவர்கள் குறிப்பிட்ட தொரு முகவரி எங்குள்ளது என்று விசாரித்துள்ளனர்.

ஓட்டோவுக்கு அருகில் மூதாட்டி சென்ற போது அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு ஓட்டோவில் தப்பியோடியுள்ளனர்.

மூதாட்டி கூக்குரலிடவே அந்தப் பகுதியில் நின்ற இளைஞர்கள் வாகனங்களில் துரத்திச் சென்று மீசாலைப் பகுதியில் வைத்து ஓட்டோவை மடக்கிப் பிடித்தனர்.

ஓட்டோவில் இருந்தவர்களில் ஒருவர் தப்பியோட ஏனைய இருவரையும் இளைஞர்கள் பிடித்து நையப்புடைத்ததுடன் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கடந்த சில மாதங்களாக வரணிப் பகுதியில் இடம்பெற்ற பல திருட்டுக்களுக்கும் இந்த திருட்டுக் கும்பலுக்கும் தொடர்புள்ளதா என பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

தப்பியோடியவர் சங்கிலியைக் கொண்டு சென்றுள்ளார் என்றும் அகப்பட்ட இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-9)

## வடமராட்சி கிழக்கில் குடிதண்ணீர் விநியோகப் பணி பூர்த்தியாகின்றது

வடமராட்சி, மார்ச் 9

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் 80 வீதமான வேலை கள் பூர்த்தியடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

என்றிப் நிறுவனத்தின் 25 மில்லியன் ரூபா உதவியுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள் ளப்பட்டுவரும் இந்தத் திட்டத்தின் மூலம் குடத்தனை, செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

**மணற்காட்டிலும் மருதங்கேணியிலும் குழாய்க்கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.**

குடத்தனைப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்கென மணற்காட்டிலும், மருதங்கேணி, செம்பியன்பற்று தெற்கு பகுதிக ளுக்கான குடிதண்ணீர் விநியோகத்துகென மருதங் கேணியிலும், குழாய்க்கிணறுகள் அமைக்க ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## எழுதுமட்டுவாழ் தெற்கில் தற்காலிக கிளை

வடமராட்சி, மார்ச் 9

மக்கள் மீளக் குடிய மர அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில்கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கடந்த வருடம் தற்காலிக கிளைக்கடை அமைக்கப்படவுள்ளது.

எழுதுமட்டுவாழ் சந்திக்கு அருகில் உள்ள தனியார் காணியின் தற்காலிக கடை அமைத்து கிளையை ஆரம்பி க்கவுள்ளதாகவும், எழுதுமட்டுவாழ் தெற்குக்கான கிளை இல.14 இற்கு உரிய கட்டடம் முன்னர் அமைந்திருந்த இடத்தில் 20 இலட்சம் ரூபா செலவில் கூட்டுறவு நகர்க் கடை அமைக்கவுள்ளதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரதேசத்தில் 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்த போதிலும், கிளைக் கடை இல்லாததால் இந்தப் பிரிவு மக்கள் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் உள்ள கிளைக் கடைக்குச் செல்ல வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## வலி . கிழக்கு பாலர் பாடசாலையின் ஆசிரியருக்கு சேவை முடிவுறுத்தல் கடிதம்

### முன்பள்ளிச்சிறார் பாதிக்கப்படும் நிலை என்று பெற்றோர் கவலை

அச்சுவேலி, மார்ச் 9

வலி. கிழக்குப் பிரதேச சபையின் கீழ் கடமை புரியும் கஜமுகன் பாலர் பாடசாலை பொறுப்பு ஆசிரியருக்கு சேவை முடிவுறுத்தல் கட்டளை பிரதேச சபையின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலையை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி தெற்கில் உள்ள கஜமுகன் பாலர் பாடசாலையில் 46 சிறார்கள் பயில்கின்றனர்.

பாடசாலையில் 10 வருடங்களுக்கு மேல் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றி கடந்த ஒன்பது வருடங்களாகக் குறித்த பாலர் பாடசாலையின் பொறுப்பாசிரியையாகக் கடமையாற்றி வருபவருக்குப் பதவி முடிவுறுத்தல் கடிதம் பிரதேச சபை செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் அனுப்பி வைத்துள்ள சேவை முடிவுறுத்தல் கடிதத்தில் ''தங்களின் பதவிக்கான ஆளணி இல்லாது ஒழிக்கப்பட்டு 28.02.2013 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படுவதால் தங்களது சேவைக்காலம் முடிவுறுத்தப்படுகின்றது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தெற்குப் பகுதியில் செயற்படும் ஒரே ஒரு பாலர் பாடசாலையான கஜமுகன் பாலர் பாடசாலை நிரந்தரமான கட்டடத்தில் செயற்படுகின்றது.

இந்த வருடம் 46 பிள்ளைகள் சேர்ந்துள்ளனர். ஆண்டுதோறும் நாற்பதுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் இணைந்து கொள்ளுவர்.

பிரதேச சபையின் நிர்வாகத்தில் கடந்த சில மாதங்களாக நிலவி வரும் முறுகல் நிலையால் பாலர் பாடசாலை ஆசிரியைக்கான கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என்றும் பதவி முடிவுறுத்தலுக்கும் இது தான் காரணம் என்றும் கூறப்படுகின்றது. (ம-11)

## நீதிமன்றங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்

திருச்சி, மார்ச் 9

திருச்சி முதன்மை அமர்வு நீதிமன்றத்துக்கு தொலைபேசி மூலம் மர்ம நபரால் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள் ளது.

அதைத்தொடர்ந்து நீதிமன்றத்தில் பொலிஸார் வெடிகுண்டுச் சோதனை மேற்கொண்டனர்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்ட அமர்வு நீதி மன்றம், சாத்தூரில் உள்ள அமர்வு நீதிமன்றம் ஆகியவற்றுக்கும் வெடிகுண்டு மிரட்டகள் விடுக்கப்பட்டுள்ளன. இதனால் பதற்றம் நிலவுகிறது. வெடிகுண்டு மிரட்டல்லை அடுத்து திருவள்ளூர் அமர்வு நீதிமன்றத்தில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ராஜபாளையம் நீதிமன்றத்திலும் வெடிகுண்டு மிரட்டலை அடுத்து நீதிபதி, சட்டத்தரணிகளை வெளியேற்றி விட்டு பொலிஸார் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். (வ)



சர்வதேச மகளிர் தின விழாவையொட்டி ஔவையார் சிலையின் கீழ் அமைக்கப்பட்டிருந்த ஔவையாரின் திருவுருவப் படத்துக்கு தமிழ முதல்வர் ஜெயலலிதா மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## இந்தியாவின் பிரபலமான பெண்கள் பட்டியலில் முதலிடத்தில் சோனியா

டில்லி, மார்ச்.9

இந்தியாவின் பிரபலமான பெண்கள் பட்டியலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் சோனியா காந்திக்கு முதலிடமும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு 17 ஆவது இடமும் கிடைத்துள்ளன.

அசோசெம், ஜுஎ பிஸினஸ் நிறுவனங்கள் இணைந்து இந்தியாவில் 2012 ஆம் ஆண்டுக்கான பிரபலமான பெண்கள் பற்றிய கருத்துக் கணிப்பொன்றை நடத்தின.

அதில் டில்லி, மும்பை, அகமதாபாத், கொச்சி, பெங்களூர், ஹைதராபாத், இந்தூர், பாட்னா, புனா, சண்டிகார் உட்பட இந்தியாவில் உள்ள மாநகரங்களில் கடந்த ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் மேற்படி கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

32 நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் இந்த பணியில் ஈடுபட்டனர். அவர்களில் பெரும் பாலானோர் தகவல் தொழில் நுட்ப ஊழியர்கள். சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுவதையொட்டி நேற்று முன்தினம் மாலை இந்திய பிரபல பெண்கள் பட்டியல் வெளியிடப்பட்டது.

அதில்காங்கிரஸ் தலைவி சோனியாகாந்திக்கு முதலிடம் கிடைத்துள்ளது. அவரைத் தொடர்ந்து ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி நிர்வாக இயக்குநர் சந்தா கோச்சார் 2 ஆவது இடத்தையும், பெப்ஸி நிறுனத் தலைவர் இந்திரா நூயி 3 ஆது இடத்தையும், பெற்றனர். (வ)

# போர்க்குற்றவாளி ராஜபக்ஷவை தண்டிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

### சென்னை லெயாலா கல்லூரி மாணவர்கள் ஏற்பாட்டில்

சென்னை, மார்ச்.9


போர்க்குற்றவாளியான இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தண்டிக்கக் கோரி சென்னை லொயலா கல்லூரி மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின்போது மாணவர்கள் பேசுகையில்:

இலங்கையில் லட்சக் கணக்கில் தமிழ் மக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இது மனித உரிமை மீறல் என்பதைவிட திட்டமிட்ட தமிழின படுகொலை என்பதுதான் உண்மை.

அதைப் பார்த்துக் கொண்டு மத்திய அரசு ஏன் மௌனம் காக்கிறது என்பது புரியவில்லை. இலங்கையை இந்தியாவுடன் ஒப்பிட்டால் ஒரு குட்டித் தீவு தான். அதற்கு ஏன் இந்தியா பயப்படுகிறது?






ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மன்ற கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்.

போர்க் குற்றவாளியான மஹிந்த ராஜபக்ஷவைத் தண்டிக்க வேண்டும். தமிழ் ஈழ மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி தீர்வு காண வேண்டும்.

இதேவேளை ஈழத்தில் பொது வாக்கெடுப்பு நடத்தக்கோரி சென்னையில் உள்ள தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு சார்பில் நேற்று தொடக்கம் சென்னை லெயாலா கல்லூரி அருகே உள்ள தேசிய அய்க்கப் அரங்கத்தில் ஜோபிரிட்டோ, திலீபன், சாஜிபாய் அண்டனி, லியோ, சண்முகப்பிரியன், பிரசாத், அனிஷ், பால் ஆகிய 8 மாணவர்கள் காலவரையற்ற உண்ணா நிலைப் பேராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (வ)

## தாக்குதல் எச்சரிக்கை திருப்பதியில் பாதுகாப்பு தீவிரம்

தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதாக மத்திய உளவுத்துறை எச் சரிக்கை விடுத்ததை அடுத்து, திருப்பதியில் பாதுகாப்பு அதிகரிக் கப்பட்டுள்ளது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் தரிசனத்துக்காக வரும், திருப்பதி, திரும்லை வெங்கடேசப் பெருமாள் கோயில் உள்ளிட்ட பிரபலமான கோயில்களில், பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று மத்திய அரசின் உளவுத்துறை எச்சரித். அதையடுத்து, திருமலை கோயிலில், பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருப்பதியிலிருந்து அலிபிரி வழியாக, திருமலைக்குச் செல்லும் வாகனங்களை பொலிஸார் தீவிர சோதனையிட்டு வருகின்றனர். திருமலையில், கருடாத்ரி நகர், பாபா விநாசனம் சுங்கச் சாவடி, ஸ்ரீவாரிபாதம் சிலா தோரணம் போன்ற இடங்களிலும், வாகன சோதனைகள் இடம் பெறுகின்றன. (வ)

# ‘டெசோ’ கூட்டத்தில் காங்கிரஸ் பங்கேற்பு ஏனைய கட்சிகளின் இருக்கைகள் காலி

டில்லி, மார்ச்.9

டில்லியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ‘டெசோ’ அமைப்பின் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் காங்கிரஸ் கட்சி பங்கேற்ற போதும் எதிர்பார்த்தளவில் பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாதது தி.மு.கவினருக்கு ஏமாற்றம் அளித்துள்ளது.

### தி.மு.க. ஏமாற்றம்




நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கருத்தரங்கம் நடைபெறுவதாக அறிவிக் கப்பட்டிருந்தது. காங்கிரஸ், பா.ஜ.க., பகுஜன் சமாஜ், சமாஜவாதி உள்ளிட்ட பிரதான கட்சிகள் உட்பட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு பிரத்தியேக இருக்கைகளும் போடப்பட்டிருந்தன. ஆனால், மாலை 4.30 மணி வரை அரங்கில் சிலர் மட்டுமே இருந்தனர்.

தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியினரும் மட்டுமே அரங்கில் இருந்தனர். பிற கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகள் முழுவதுமே வெறிச்சோடிக்கிடந்தன. ‘காங்கிரஸ் தரப்பில் இருந்து பிரதிநிதிகள் வருவார்களா, மாட்டார்களா’ என்று மிகுந்த எதிர்பார்ப்புடன் அனைவரும் காத்துக் கொண்டிருந்தனர். மாலை 5.45 மணிக்கு அகில இந்திய காங்கிரஸ் குழுப் பொறுப்பாளர் குலாம் நபி ஆசாத், தமிழக காங்கிரஸ் குழுத் தலைவர் பி.எஸ். ஞானதேசிகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என். எஸ்.வி. சித்தன், ஈ.எம். சுதர்சன நாச்சியப்பன் ஆகியோர் கருத்தரங்கக் கூடத்துக்கு வந்தனர்.

அதன் பின்னர்தான் தி.மு.கவினர் முகத்தில் மலர்ச்சி தென்பட்டது. அகில இந்திய அளவிலான பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள், பல்வேறு அமைப்பு களைச் சேர்ந்தோர் கருத்த ரங்கில் பங்கேற்பார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டது. இந்த நிலையில், காங்கிரஸைச் சேர்ந்த 4 பேர், தேசியவாத காங்கிரஸ் கட்சி உள்ளிட்டவற்றிலிருந்து ஓரிருவர் என சிலர் மட்டுமே பங்கேற்றமை தி.மு.க வினருக்கு ஏமாற்றம் அளிப் பதாக இருந்தது.

கருத்தரங்கிற்குப் பின்னர் ஸ்ராலின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

‘‘இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண் டும் என்று கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது’’- என்றார்.

முன்னதாக கருத் தரங்கில் சனல்- 4 தொலைக் காட்சிக் குழு தயாரித்த இலங்கைத் தமிழர் போரில் பாதிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான ‘நோ பயர் சோன்’ என்ற ஆவணப்படம் திரையிடப்பட்டது. (வ)

## அணு உலை எதிர்ப்பாளர் மனைவியின் வங்கிக் கணக்கில் 30 லட்சம் ரூபா

### மத்திய உள்துறை அமைச்சகம் விசாரணை

ராதாபுரம், மார்ச்.9

கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டக் குழு உறுப்பினரது மனைவியின் வங்கிக் கணக்குக்கு ரூ.30 லட்சம் இணையத் தளம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொலிஸார் மற்றும் மத்திய உள்துறை அமைச்சகம் விசாரணை மேற்கொண்டுள்ளது.

கூடங்குளம் பஞ்சாயத்து 14 ஆவது பிரிவு ஆணையாளராக குமார் உள்ளார். அவர் கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டங் களில் பங்கேற்று வருகிறார். இது தொடர்பாக அவர் மீது பல்வேறு வழக்குகள் உள்ளன. கடந்த ஆண்டு குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே வந்த அவர் தற்போது கூடங்குளம் பொலிஸ் நிலையத்தில் தினமும் கையெழுத்திட்டு வருகிறார். குமார் மனைவி அம்பிகா. அவர் கடந்த 3 ஆம் திகதி கூடங்குளத்தில் உள்ள கனரா வங்கியில் சேமிப்புக் கண்க்கு ஆரம்பித்தார். கடந்த 5 ஆம் திகதி லண்டனிலிருந்து இணையத்தளம் மூலம் 29 லட்சத்து 92 ஆயிரத்து 830 ரூபா இவரது கணக்குக்கு அனுப்பப்பட்டது.

லண்டனைச் சேர்ந்த ஆனந்த் என்பவர் இந்த பணத்தைக் கணக்கிலிட்டு இருப்பது தெரியவந்தது. கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில் அம்பிகாவின் வங்கிக் கணக்குக்கு வெளி நாட்டிலிருந்து ரூ.30 லட்சம் அனுப்பப்பட்டமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அவர்கள் உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தனர். (வ)

# ‘அடுத்த இலக்கு இந்தியாதான்’

## மிரட்டுகிறது பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 9

எமது அடுத்த தாக்குதல் இலக்கு இந்தியாதான். இந்தியாவின் மீது மிகப் பெரிய தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்- இவ்வாறு மிரட்டியுள்ளார் பாகிஸ்தானில் இயங்கும் ஜெய்ஷ் ஈ- முகமது தீவிரவாத அமைப்பின் முன்னாள் தலைவர் அஸமதுல்லா முவாவியா.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் முவாவியா குறிப்பிட்டுள்ளதாவது:-

இந்தியா மீது மிகப் பெரிய தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். ஆப்கனிலிருந்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் வெளியேறியதும், எங்களின் கவனத்தை காஷ்மீரின் மீது திருப்புவோம். இந்தியா எதிர்பாராத நேரத்தில் எமது காஷ்மீர் போராட்டம் ஆரம்பமாகும்.

எங்களைப் போன்ற இயக்கங்களை பாகிஸ்தான் கட்டுப்படுத்த முடியாது. எமது செயற்பாடுகள் பாகிஸ்தானில் இயல்பாகவே நடைபெறுகின்றது- என்று தெரிவித்துள்ளார்.

அஸமதுல்லா முவாவியா, பாகிஸ்தானிலிருந்து செயல்படும் ஜெய்ஷ் ஈ- முகமது பயங்கரவாத இயக்கத்தின் முன்னாள் தலைவராகவும், அல் குவைதாவின் ஒரு பிரிவுக்குத் தாக்குதல் தளபதியாகவும் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



## பின் லேடனின் பேச்சாளர் ஜோர்தானில் கைது

நியூயோர்க், மார்ச் 9

அல் குவைதா இயக்கத்தின் முன்னாள் தலைவர் பின் லேடனின் பேச்சாளர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். சுலைமான் அபு காயித் என்று குறிப்பிடப்படும் அவர், ஜோர்தானில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பின் லேடனின் மருமகன்களில் ஒருவராகக் கருதப்படும் காயித், அமெரிக்கா மீதான செப்ரெம்பர் 11 தாக்குதலில் முக்கிய பங்காற்றியிருந்தார் என்றும், அமெரிக்கப் பிரஜைகளை படுகொலை செய்த குற்றம் தொடர்பாக அபு காயித் மீது வழக்குப் பதிவு செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட காயித் தற்போது விசாரணைகளுக்காக நியூயோர்க் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவர் விசாரணைகளின் பின்னர் நியூயோர்க் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)

## தாய்வானில் நிலநடுக்கம்

தாய்பெய், மார்ச் 9

தாய்வானின் வடமேற்கு பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

5.6 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ள நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தொடர்பில் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

1999 ஆம் ஆண்டு தாய்வானில் 7.6 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 2 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.(ற)

## இரகசிய ஆவணங்களை தீயிட்ட ஜப்பான்

டோக்கியோ, மார்ச் 9

இரண்டாம் உலகப் போரில் நேசநாட்டுப் படைகளிடம் சரணடைந்தது ஜப்பான். அதற்கு முன்னதாக 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட இரகசிய ஆவணங்களைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளது.

இரண்டாம் உலகப் போரில் நேசப்படைகளின். தாக்குதலை எதிர்கொள்ள முடியாது ஜப்பான் சரணடையத் தீர்மானித்தது. அந்த இறுதி நேரத்தில் ஜப்பான் அவசர அவசரமாகப் பல இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

1945ஆம் ஆண்டின் ஒகஸ்ட் வரையான காலப் பகுதியில் தமது இரகசிய ஆவணங்களை தீயிட்டு அழிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது. சுமார் 8 ஆயிரத்துக்கும் அதிகமான மிக முக்கிய ஆவணங்கள் அந்தக் காலப்பகுதியில் தீயிட்டு எரிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

அதன்காரணமாக ஜப்பானை நேசநாடுகள் கைப்பற்றியபோதும், அவை ஜப்பானின் இராணுவ இரகசியங்களையோ, தொழில்நுட்ப இரகசியங்களையோ பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. (ற)



சுற்றுச்சூழல் மிக மோசமாக பாதிப்படையும் உலகின் 20 நகரங்களில் 16 நகரங்கள் சீனாவில் உள்ளதாக உலக வங்கியின் அறிக்கையொன்று தெரிவிக்கிறது. சுற்றாடல் மாசு காரணமாக சீனாவின் நிலத்தடியில் உள்ள 57 வீதமான நீர் மாசடைந்துள்ளது என்று அண்மைய ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனாவில் பின்தங்கிய கிராமங்களில் வாழும் 298 மில்லியன் மக்கள் அசுத்தமான நீரையே அருந்துகின்றனர் என்று அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது.

# தற்காத்துக் கொள்வதற்காக தாக்குதல்களை நடத்துவோம்

## ஐ.நா. தடைகளின் பின்னரும் வடகொரியா

பியாங்யாங், மார்ச் 9

எம் மீது திணிக்கப்படும் தடைகளால் எம்மைத் தற்காத்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அதற்காக எதிரி நாடுகளின் மீது தாக்குதல் நடத்துவது குறித்து எந்தக் காரணத்துக்காகவும் பின்நிற்க மாட்டோம்- என்று தெரிவித்துள்ளது வடகொரியா.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வடகொரியா மீது மேலும் பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதையடுத்தே வடகொரியா இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

‘‘ஐ.நாவின் இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் அமெரிக்கா இயங்குகின்றது. ஐ.நாவின் செயற்பாடுகள் பக்கச்சார்பாக இருப்பதாலேயே கொரிய மக்கள் அதை வெறுப்புற்றிருக்கின்றனர். தென் கொரியாவில் அமெரிக்கா தலைமையில் நிலைகொண்டுள்ள ஐ.நா. படைகளை அகற்ற வேண்டும். எமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள நாம் தாக்குதல்களை நடத்தவும் தயங்க மாட்டோம். எமக்குள்ள பிரச்சினைகளின் தொடக்கப்புள்ளி எங்கிருக்கிறதோ அங்கும் தாக்குதல் நடத்தக்கூடிய வலிமையுடன் வடகொரிய இராணுவம் உள்ளது- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# இத்தாலி முன்னாள் பிரதமருக்குச் சிறை

## அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு

ரோம், மார்ச் 9



பாதுகாப்புத்துறை தொடர்பான இரகசிய ஆவணங்களை வெளியிட்டமை தொடர்பான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து, இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனிக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சில்வியோ பெர்லஸ்கோனி, தனக்குச் சொந்தமான இல்கியோர்னேல் நாளிதழில் பொலிஸார் வைத்திருந்த ரகசிய ஆவணங்களை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாக நடைபெற்ற வழக்கிலேயே பெர்லஸ்கோனிக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

எனினும், சிறைத்தண்டனை விதிக்கப்பட்டபோதும் பெர்லஸ்கோனி சிறை செல்ல வேண்டி ஏற்படாது என்று கூறப்படுகிறது. இத்தாலி நாட்டுச் சட்டத்தின்படி 75 வயதுக்கு மேற்பட்டவர்கள், 2 ஆண்டுகளுக்கு கீழ் தண்டனை பெற்றிருந்தால் சிறைக்குச் செல்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்போது 76 வயதாகும் பெர்லஸ்கோனி, தண்டனையிலிருந்து தன்னை விடுவிக்கக்கோரி மேல் முறையீடு மனு தாக்கல் செய்வார் எனத் தெரிகிறது. (ற)

# உயரமான புத்தர் சிலை சீனாவில்



பீஜிங், மார்ச் 9

உலகிலேயே மிக உயரமான புத்தர் சிலை சீனாவில் திறக்கப்பட்டுள்ளது. உலகெங்குமுள்ள புத்தர் சிலைகளில் அமிதாப் புத்தர் என்ற ஒரு வகை சிலையும் ஒன்று. புத்த மத பிரிவான வஜ்ராயன பௌத்தத்தின் ஐந்து புத்தர்களில் அமிதாப புத்தர் ஒருவர் என்று கூறப்படுகிறது. சீனாவின் ஜியாங்ஷியில் உள்ள டோங்ளின் கோவிலில் உலகிலேயே உயரமான அமிதாப புத்தர் சிலை திறக்கப்பட்டுள்ளது. மொத்தம் 2400 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வெண்கல சிலை 48 மீற்றர் உயரம் கொண்டதாம். (ற)

# ஐ.நா. கண்காணிப்பாளர்கள் சிரியாவில் சிறைபிடிப்பு

டமஸ்கஸ், மார்ச் 9

ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பாளர்கள் சிரியப் புரட்சியாளர்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபைப் பேச்சாளர் கூறுகையில்,

‘‘ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பாளர்கள் சிரியாவில் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சிரிய - இஸ்ரேல் எல்லைக்கருகில் உள்ள கோலன் மலைப்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 30 பேரைக் கொண்ட ஆயுதக் குழுவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது கண்காணிப்பாளர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும். கண்காணிப்பாளர்களின் பாதுகாப்புத் தொடர்பில் ஐ.நா. கடும் கரிசனை கொண்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் கண்டனத்துக்குரியது’’- என்று தெரிவித்தார்.

இதேவேளை, சிரிய அரசதுருப்பினரால் சரமாரியாக மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களை தடுப்பதற்காகவே கண்காணிப்பாளர்களை தடுத்து வைத்துள்ளோம் என்று ஆயுததாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)

## ஐ.நாவில் மதுவுக்குத் தடை

நியுயோர்க், மார்ச் 9

ஐ.நா. சபையின் அலுவலகத்துக்குள் மது அருந்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சீர்திருத்த விவகாரங்களுக்கான ஐ.நா. தூதர் ஜோசப் டோர் செல்லா கூறுகையில்,

உறுப்பினர்கள் அதிக அளவு மது அருந்தி சபை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுந்ததை அடுத்தே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சபையின் செயற்பாடுகளில் உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும். எமது நடவடிக்கைகள் வெற்றியைத் தரட்டும். அதன்பின்னர் கொண்டாடுவோம். அதற்காக இப்போது கொஞ்சம் மதுவை மிச்சம் வைப்போம்- என்றார். (ற)

# பெண்களுக்கு எதிரான வன்முறை நாட்டில் தொடர்ச்சியாக அதிகரிப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 9
நாட்டில் நாளுக்கு நாள் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இதனைத் தட்டிக்கேட்க யாருமே இல்லை.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை விசாரணை செய்ய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வடக்கு உள்ளிட்ட நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களுக்கும் எதிரான வன்முறைகளை ஆராய்ந்து 6 மாதத்தில் நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவரினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும் குழுவின் நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் உள்ள 40 வீதமான பெண்களில் பல பெண்கள் பல்வேறு வகையான துஷ்பிரயோகங்களுக்கும் வன்கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பெண்களுக்கு எதிராக ஏற்படுகின்ற கொடுமைகளை விசாரித்து தீர்த்து வைப்பதற்கு யாருமில்லை.



இந்நிலையில், நாட்டில் ஆண்களுக்கு நிகரான சமவுரிமை பெண்களுக்கு வழங்கப்படவேண்டும். இது பௌத்த நாடு. இங்கு பெண்களுக்குச் சமவுரிமை மற்றும் முக்கியத்துவம் அளிப்பதாகக் கூறப்படுகின்றது ஆனால் பெண்களுக்கான வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. வடக்குப் பகுதியில் போரின் போது பல பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

ஒரு சமூகத்தின் முதுகெலும்பாக பெண்களே உள்ளனர். எனவே பெண்கள் சமூகத்தில் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்களை ஆராய்ந்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள குழுவுக்கு முழுமையான பங்களிப்பைச் செய்தல் வேண்டும்-என்றார். (த)

# நாட்டில் இருண்ட யுகம் உருவாக இடமளியோம்

### பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,மார்ச் 9
நாட்டில் இருண்ட யுகம் உருவாக இடமளிக்கக் கூடாது. குடும்பத்தைப் பாதுகாக்கும் பெண்களைப் பாதுகாப்பதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தாய்நாட்டை நேசிக்கும் ஒரு தலைமுறையை உருவாக்க அனைத்துப் பெண்களும் திடசங்கற்பம் பூண வேண்டும். நாட்டில் பயங்கரவாதத்தால் அதிகளவு பெண்கள் பாதிக்கப்பட்டனர். மீண்டும் இவ்வாறான இருண்ட யுகம் உருவாக இடமளிக்கக் கூடாது. நாட்டை நேசிக்கும் மக்கள் வாழும் வரை பெற்ற வெற்றிகளை மீளத் தோற்கடிக்க முடியாது.

நாட்டின் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும். அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் உயர்வடைந்துள்ளது.-என்றுள்ளது. (ச)

# அரசியலில் பெண்களின் வீதம்; அதிகரிப்பதற்கு அரசு முயற்சி

## மகளிர் தின அறிக்கையில் பிரதமர்

கொழும்பு,மார்ச் 9
அரசியலில் பெண்களின் வீதத்தை அதிகரிக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்று பிரதமர் தி.மு. ஜயரத்ன சர்வதேச மகளிர் தினத்தையொட்டித் தாம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசியலில் பெண்களின் வீதத்தை அதிகரிக்கும் அரசின் முயற்சி உலகுக்கு முன்மாதிரியானது. நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து 65 வருடங்கள் கடந்துள்ள நிலையில் மாறி மாறி பதவிக்கு வந்துள்ள அனைத்து அரசுகளும் பெண்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், சமவுரிமை வழங்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன .



துரித நகரமய்மாக்கல், நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்ற நவீன தொழில் நுட்பம் என்பன காரணமாக குறித்த துறைகளில் அதிக பிரதிநிதித்துவத்தை பெண்கள் வகித்து வருகின்றனர்.-என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச)

# வன்முறைகளை ஆராய ஆணைக்குழு

### அவசியம் என்கிறார் ஐ.தே.க. பிரதித் தவிசாளர்

கொழும்பு,மார்ச் 9
பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பிலான முறைப்பாடுகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தவிசாளரும், ஊவா மாகாண சபை உறுப்பினருமான கே.வேலாயுதம் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

சர்வதேச மகளிர் தினத்தை நினைவுகூர்ந்தால் மட்டும் போதாது. பெண்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூர்ந்தால் மட்டும் போதாது. பெண்களின் உரிமைகள் உறுதிப் படுத்தப்படவும் வேண்டும்.**

இன்று நாளாந்தம் பெண்கள் பல வழிகளில் துன்புறுத்தப்படுகின்றனர். அவர்களுக்கு எதிராக பாலியல் ரீதியிலான வன்முறைகளும் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. அதனால் பல பெண்கள் தற்கொலை முடிவுக்குக்கூடச் சென்றுள்ளனர்.

அதேவேளை, இலங்கை அமைச்சரவையில் மகளிர் விவகாரங்களைக் கையாள்வதற்கு ஆண் ஒருவரே அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவும் பெண்களுக்கு ஏதோ ஒரு வழியில் இழைக்கப்படும் அநீதியாகும். பெண்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களுக்குத் தொழில் ரீதியாக பாகுபாடுகள் காட்டப்படுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விதவைப் பெண்கள் வாழ்வதற்கு வழியின்றி திண்டாடுகின்றனர்.

அவர்களுக்கு அரசு வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மாறாக அவர்களைமேலும் பிரச்சினைகளுக்குள் தள்ளக்கூடாது. -என்றார். (ச)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
02.02.1927

மறைவு
07.02.2013

அமரர் நடராஜா குணேஸ்வரி
(சின்னனாச்சியார்)
( ஓய்வு பெற்ற உப அதிபர் - கொழும்பு கணபதி வித்தியாலயம், யாழ். வண்ணை நாவலர் வித்தியாலயம் )

கடந்த 07.02.2013 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும், தொலைபேசியில் அனுதாபங்கள் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (09.03.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

348/9, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மகன் - குடும்பத்தினர்.

(ச/6940) (45.6.7)

காணி விற்பனைக்கு

நல்லூர் சூழலில் வீட்டுடன் மூன்று பரப்பும் தனியாக, இரண்டுபரப்பும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 8323 526
075 5109 327

((33957)(45.6.7)

வாடகைக்கு விடப்படும்

எம்மிடம் மிகக்குறைந்த வாடகைக்கு JCB, Excavator, Mini Excavator, D4E Dozer, Mini Dozer,Tractor with Rotavator, Carrier வாடகைக்கு விடப்ப டும்.

தொடர்பு: 0722263778,
0714167878

தவறிவிட்டது

கந்தசாமி பார்த்தீபன் என்பவரது (793132182 V) தேசிய அடையாள அட்டை, வாகன காப்புறுதிப்பத்திரம் என்பன சிவன் கோயிலடிக்கும்- ஐந்து சந்திக்கும் இடையில் தவறிவிட்டன.

தொடர்பு:
077 2979 433,
077 6172 952.

(34226) (45.6.7)

மரண அறிவித்தல்

தங்கராஜா டானியல் செல்வராஜா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா டானியல் செல்வராஜா 07.03.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரேஸமலர் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தினி (கலாலயா ஆசிரியை), ரொபின்சன், ரவீந்திரன், சுபாஸ்கரன், சுரேஷ்கரன், நளாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், எட்வின் கிங்சாந் (சூட்டி), ரூபினி, டிலக்சி, அக்ஷரா, ரோனி, டிலானி, டிலோஜன், காலேப், லிதியா ஆகியோரின் பேரனும், இராஜரட்ணம், கில்டா, ராகினி, வினோ, புஷ்பா, ஜோர்ஜ், செல்வராஜா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.03.2013) சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ். மெதடிஸ்த கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

517, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(34231)(10.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள வைத்திய நிறுவனம் ஒன்றுக்கு ஓய்வு பெற்ற RMP/MD/MBBS வைத்தியர்கள் தேவை.

தொடர்பு: 0779465467

(27875)(6.7.11)

உழவு இயந்திரம் விற்பனைக்கு

சீன நாட்டு தயாரிப்பான Sifang 12DI, Model GN 12 DI உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773530959

(34284)(6.7.11)

# 58 வீதமான விவாகரத்துகள் கொழும்பு மாவட்டத்தில் தான்


## கணிப்பீட்டில் கண்டறிவு

கொழும்பு,மார்ச்9

நாட்டில் இடம்பெறும் விவாகரத்துக்களில் கொழும்பு மாவட்டத்தில்மட்டும் 58 சதவீதமானவை பதிவாகியுள்ளன. விவாகரத்து பெற்ற பெண்களில் 64 வீதமானவர்கள் தொழில் புரிகின்றனர். இந்தத் தகவல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கை பிரிவு பேராசிரியர் அஜந்தா ஹெப்பு ஆராச்சி தலைமையில் மேற்கொள்ளப் பட்ட கணிப்பீட்டில் கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையில் திருமணம் முடித்த பெண்களில் 61 வீதமானவர்கள் சந்தோஷமான வாழ்க்கையை வாழவில்லை எனப் பேராசிரியர் அஜந்தா ஹெப்பு ஆராச்சி தெரிவித்தார்.

இலங்கையில் பெண்களின் திருமண வயது 20 தொடக்கம் 30 ஆகும். இந்த வயதெல்லையில் 36 வீதமான பெண்கள் மகிழ்ச்சியுடன் திருமணம் செய்து கொள்கின்றனர் என்றும் அவர் கூறினார். கருத்து வேறுபாட்டினால் திருமணம் முடித்த 45 வீதமான பெண்கள் விவாகரத்து பெற்றுள்ளனர். கணவனின் மதுப் பழக்கம், மாமியார் சண்டை, குடும்ப உறுப்பினர்களின் அழுத்தம் என்பன விவாகரத்துக்குக் காரணம் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. (ச)

# நாட்டில் 25 வீத பாடசாலைகளில் 10 இற்குக் குறைந்த மாணவர்கள்




## கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு,மார்ச்9

நாட்டில் 9731 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 25 வீதமான பாடசாலைகளில் 10 இற்கும் குறைந்த மாணவர்களே கல்வி பயிலுகின்றனர் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஒரேயொரு மாணவனுடன் 123 பாடசாலைகளும், இரண்டு மாணவர்களுடன் 147 பாடசாலைகளும், 181 பாடசாலைகள் மூன்று மாணவர்களுடனும், 210 பாடசாலைகள் நான்கு மாணவர்களுடனும், ஐந்து மாணவர்களுடன் 223 பாடசாலைகளும் இயங்குகின்றன என்று அவர் கூறினார்.

2009 ஆம் ஆண்டு 104 பாடசாலைகளும், 2010 ஆம் ஆண்டு 79 பாடசாலைகளும், 2011 ஆம் ஆண்டு 16 பாடசாலைகளும், 2012 ஆம் ஆண்டு 36 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மரக்கிளை முறிந்து விழுந்ததில் மாணவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு,மார்ச் 9

கெக்கிராவ மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள மரமொன்றின் கிளை முறிந்து வீழ்ந்ததில் 15 மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 6 ஆம்,7ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களே காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மாணவர்கள் கெக்கிராவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 11 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

**6 ஆம்,7ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களே காயமடைந்துள்ளனர்.**

இந்தச் சம்பவத்தையடுத்து பாடசாலையில் உள்ள மரத்தை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# பல்கலைக்கழகங்களுக்கான நிதி அதிகரிக்கப்படும்

## உயர் கல்வி அமைச்சின் செயலர் அறிவிப்பு



கொழும்பு,மார்ச்9

பல்கலைக்கழகங்களுக்கு வழங்கும் நிதி அதிகரிக்கப்படும். பல்கலைக்கழகங்கள் சுயாதீனமான முறையில் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் ஊக்குவிக்கப்படும் என்று உயர்க்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக் கழகங்களுக்கான நிதியைக் குறைக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று உயர்கல்வி அமைச்சின் செயலர் ஜயந்த நவரத்ன கூறினார்.

வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல், பட்டப்பின் படிப்பு வசதிகளை வழங்குதல், ஆராய்ச்சி ஆகியவற்றின் மூலமும் பல்கலைக்கழகங்கள் வருமானத்தை ஈட்டிக்கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

2012 ஆம் ஆண்டு உயர் கல்விக்காக 24 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

அது 2013 ஆம் ஆண்டு 35 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

# 51 ஆபாச இணையத்தளங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை

## சிறுவர் நீதிமன்ற நீதிவான் உத்தரவு

கொழும்பு,மார்ச் 9

வயது குறைந்தவர்களின் ஆபாச படங்கள் உள்ளடக்கிய 51 ஆபாச இணையத்தளங்களை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பத்தரமுல்லையிலுள்ள சிறுவர் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அவ்வாறான இணையத்தளங்களை தடைச்செய்வதற்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை சட்டமா அதிபரிடம் பெற்றுக்கொள்ளுமாறு நீதிவான் எம்.எம். ஜயசேகர பணிப்புரை விடுத்துள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்று அது தொடர்பிலான அறிக்கையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு நீதிவான் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ்வாறான ஆபாச இணையத்தளங்கள் இலங்கையிலிருந்து இயக்கப்படுகின்றனவா? என்பது தொடர்பிலும் தேடியறியுமாறு நீதிவான் பணித்துள்ளார். (ச)

**புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு**

இல. 77/A, சம்பியன் வீதி (Champion), கொக்குவிலில் அமைதியான சூழலில் நன்னீர் கிணற்றுடன் சுற்று மதிலுடன் கூடிய புத்தம் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0772470590, 0778543106

(34299)(6.7.11)

**ஸ்ரீ சீரடி சாயி பாபாவின் 9ஆவது சாவடி ஊர்வலம் (வீதி உலா) (10.03.2013)**



அன்பான பக்தர்களே!

பாபாவின் வீதி உலாவானது இரவு 8 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து இரவு 8.30 மணிக்கு ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நாவலர் வீதி,கைலாய பிள்ளையார் வீதி, கோயில் வீதி, செட்டித் தெரு ஒழுங்கை, செட்டித்தெரு, பருத்தித்துறை வீதி, குமாரவீதி,கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதி ஊடாக மீண்டும் இரவு 11 மணிக்கு ஆலயத்தை வந்தடையும்.

★ நள்ளிரவு 12 மணிக்கு பக்தர்கள் பாபாவுக்கு அபிஷேகம் செய்யலாம்.

★ அதிகாலை 4.30 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம் பெறும்

அனைவரும் வருக! சிவசாயிநாதன் அருள்பெற

"சீரடி சாயி மந்திர்"
514, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
0777222568, 0213211605

பா.இராகவன்
(ஸ்தாபகர்)

**மரண அறிவித்தல்**

**செல்லத்துரை அரியநாயகம்**

(ஓய்வுபெற்ற குடியேற்றத்திட்ட உத்தியோகத்தர்)



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், இரத்தினபுரி, அராலியை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய செல்லத்துரை அரியநாயகம் (யோகரட்ணம்), கனடாவில் (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - மாணிக்கம் தம்பதியரின் மூத்த புதல்வனும் V.M.R. இன் அன்பு மருமகனும், பாலாவின் அன்புக் கணவரும் தேவிகா (ஆஸ்திரேலியா), வினித்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமரேஸ்வரன் (ஆஸ்திரேலியா), விக்னா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், சுமன், கீத்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், சரோஜினி, மங்களேஸ்வரி, சீவரத்தினம் (Baby-இந்தியா), காலஞ்சென்ற அதிஸ்டரட்ணம் (Bobby - ஆகியோரின் அன்புச் சகோதரனும், புனிதம், காலஞ்சென்ற கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.03.2013) சனிக்கிழமை அஞ்சலிக்காக மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி ம.செல்லத்துரை
(சகோதரி).
தொ.பே. 021 3007 157

அராலி கிழக்கு, அராலி.

(34233)(45.6.7)

**வான் விற்பனைக்கு**

NP-P5-XXXX தொடரிலக்கமுடைய Mahindra BOLERO Pik-up (Power steering) உடன் விற்பனைக்கு.
(3070 Km ஓடிய வாகனம்)

தொடர்பு: 0770869440

(34297)(6.7.11)

**கடை வாடகைக்கு உண்டு**

* 82, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய கடை வாடகைக்கும்,
* கண்ணாடி அலுமாரிகள், மேசை, படச்CDகள், போட்டோ கொப்பி மிசின் (டபிள் சைட்),பாடசாலை உபகரணங்கள் என்பன உடன் விற்பனைக்கும் உண்டு.

T.P:0771882518, 0774437947

(34296)(6.7.11)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



தோற்றம் - 27.09.1943
மறைவு - 07.02.2013

அமரர்
**சின்னையா பரராசசிங்கம்**

கடந்த 07.02.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னையா பரராசசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று(09.03.2013) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் அன்னாரின்ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மற்றும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும்,துண்டுப் பிரசுரம் வெளியிட்ட பொது அமைப்புக்கள் உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

முருகமூர்த்திகோவிலடி,
நவாலி கிழக்கு,மானிப்பாய்.

(34292)(5.6.7)

குடும்பத்தினர்.

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(22)

ஒலிம்பிக் பந்தயத்துக்கு ஒரு சிறுமி போனாள். வெற்றி மேல் வெற்றியாகக் பெற்றுக்கொண்டிருந்தாள். ''அடுத்த வரும் பெரிய நிகழ்ச்சி எப்படி இருக்கும்? வெற்றி பெறுவாயா?'' என்று நிருபர்கள் கேட்டார்கள். குழந்தைத்தனத்துடன் சொன்னாள். ''நான் நிச்சயம் வெற்றிபெறுவேன்! ஏனெனில் நான் வெற்றி பெற்றால் என்னை என் பெற்றோர் அழைத்துச் போவதாகச் சொல்லி இருக்கிறார்கள்!'' என்றாள். உண்மையில் அவள் வென்றாள்.

மனம் எதை நம்பி எதிர்பார்க்கிறதோ, எதைக்குறித்துச் செயற்படுகிறதோ அதைச் சாதனையாகப் பெறுகிறது. இதுதான் உலக உண்மை. இதுதான் மனத்தின் மகத்தான இரகசியம். அதற்கு அடுத்தபடியாக ஒரு நம்பிக்கை நம்முள் ஆழமாக வேர் விட வேண்டும்.

பேராசிரியராக வாழ் நாள் முழுவதையும் கழித்த என் நண்பர், ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலில் இறங்கினார். இத்தனை ஆண்டுகாலம் இதில் பழகிப் போன உங்களுக்கு, தொழில் செய்து சம்பாதிக்க முடியும் என்ற தைரியம் எப்படி வந்தது என்று கேட்டார்கள்.

அவர் சொன்னார், ''நான் சொல்லிக்கொண்டேன். நான் ஒரு பெரிய குடும்பத்திலிருந்து வருபவன். ஆகவே தொழிலும் வியாபாரமும் செய்யும் திறமை என் இரத்தத்தில் இருக்கிறது; இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இறங்கினேன், நம்பினேன்; முடியும் என்று செயல்பட்டேன்!'' என்றார்.

''அப்படியானால் வேறு குடும்பத்தில் பிறந்திருந்தீர்களானால் சங்கடப்பட்டிருப்பீர்களோ?'' என்று கேட்டார்கள். அவர் சிரித்தார். ''இதெல்லாம் நமக்கு நாமே கொடுக்கிற நம்பிக்கை. அவ்வளவுதான். ஒன்றுமில்லை. 'என் தந்தையின் வெள்ளிப் பொடிமட்டை என்னிடம் இருக்கும் வரை யாரும் என்னை எதுவும் செய்ய முடியாது!'' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டிருந்திருப்பேன்'' என்றார் அந்தச் சாதனையாளர்!

''எப்படியாவது கஷ்டப்பட்டுச் சாதிப்பேன்; சாதிப்பேன்'' என்கிற மனோபாவம்- நம்பிக்கை, அதுதான் அதிர்ஷ்டத்தின் அடிப்படை.

சிலர் கேட்கிறார்கள்.

''நம்பிக்கை, சூழ்நிலைகளை உருவாக்குகிறதா?'' என்று. நிச்சயமாக நமது ஆழ்மனத்தில் வேர்விடும் நம்பிக்கை தனது எண்ண சக்தியைப் பரப்பிக்கொண்டே இருக்கிறது. இதனுடைய விளைவுகளைத் தான் சூழ்நிலையில் நாம் காண்கிறோம் நம் நம்பிக்கைக்கேற்பச் சூழ்நிலையே மாறுகிறது.

நம்பிக்கைக்கு முன்னாலும், பின்னாலும் காரியத்தை நிறைவேற்றும் பல குணங்கள் நமக்குத் தேவை. அவை தான் ஆர்வம், துடிப்பு, சளைக்காத மனம், விடாமுயற்சி என்பவை.

''சிலர் அதிர்ஷ்டலாபச் சீட்டு வாங்கி அதிர்ஷ்டத்துக்காக காத்திருக்கிறார்களே?'' என்று நீங்கள் கேட்கக்கூடும். தமிழ் நாட்டில் உள்ள எல்லோரும் ஹரியானா அல்லது ஹிமாசல பிரதேசத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை வாங்கி விட்டு, வீட்டுத் திண்ணையிலே எல்லாத் தமிழ் மக்களும் உட்கார்ந்திருந்தார்களானால் என்ன ஆகும் இந்த நாடு? அதேபோல நமது எல்லாத் தேவைகளையும் அரசாங்கம் கொடுக்கும் என்று எதிர்பார்த்து, ஏழை மக்கள் தெருவிலே நின்றிருந்தார்களாணால் என்ன ஆகும்?

அதேபோல என் பெண்ணுக்கு மாப்பிள்ளை எங்கோ பிறந்திருக்கிறான். வந்து வலிய கொண்டு போய் விடுவான் என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன ஆகும்? கல்யாணமாகாமல் கிழவியாகிப்போன கன்னிப் பெண்ணைத்தான் நாம் சந்திப்போம். இங்கே என்ன தவறு என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மனம் காட்டும் சாதனைப் பாதையிலே சில படிகள் இருக்கின்றன. அதாவது எண்ணம் என்ற முதல் படி, நம்பிக்கை என்ற இரண்டாவது படி, செயல் என்ற மூன்றாவது படி அதன் பிறகுதான் சாதனை பிறக்கிறது. செயல் என்ற படியில்லாத போது, அங்கே பெரிய இடைவெளி ஏற்படுகிறது.

நமது உழைப்புக்கேற்ற ஊதியத்தைத்தான் நம் வாழ்வில் பெறுகிறோம். இந்த உலகிலே எதற்கும் ஒரு விலை உண்டு; இந்த உலகம் செயலினால் உழைப்பினால் தான் முன்னேறி இருக்கிறது. விதை விதைத்து, களை எடுத்து, நாற்று நட்டு, நீர்பாய்ச்சி வளர்ந்த பின்தான் அறுவடை செய்கிறோம்.

மந்திரத்தால் மாங்காய் விழுவதில்லை. இவ்வுலகம் காரண காரியத் தொடர்பு கொண்டது. செயல்தான் உலக நியதி. இதைச் சுற்றித்தான் இப் பிரபஞ்சம் செயற்படுகிறது. இந்த இயற்கை விதியை மீறி யாரும் எதையும் பெற முடியாது. பெற்றால் அது நிலைப்பதில்லை. உழைப்பு சம்பந்தப்படாத அதிர்ஷ்டலாபச் சீட்டு நிலையானதல்ல.

தம்பி! மறந்துவிடாதே அதிர்ஷ்டத்துக்கு மனக் கற்பனை- இலட்சிய தரிசனம்-வேண்டும். நான் ''அடைவேன்'' என்ற எதிர்பார்ப்பு வேண்டும், ''முடியும்'' என்ற நம்பிக்கை வேண்டும். ''செயல்! செயல்!'' என்கிற உழைப்பு வேண்டும்.

ஒருவன் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தான் .அவனைப் பார்த்து பத்திரிகை நிருபர் கேட்டார்.'' நீங்கள் மட்டும் எப்படி இவ்வளவு நிறைய கோல்களைப் போடுகிறீர்கள்? நீங்கள் அதிர்ஷ்டசாலி'' என்றார்.

அதற்கு அந்த சம்பியன் கூறினான்.

''அதிகமாக பயிற்சி செய்யும் போது அதிகமாக அதிர்ஷ்டம் கிடைக்கிறது!'' என்று

என்ன சொல்கிறார் அவர்? '' அட முட்டாளே! ஏன் அதிர்ஷ்டத்தை அழைக்கிறாய்? நான் நன்கு தினமும் பயிற்சி செய்யாவிட்டால் எப்படி என்னால் சமாளிக்க முடியும்? எப்படி அதிர்ஷ்டம் வரும்?'' என்று கேட்கிறார் அவர்.

அதிர்ஷ்டத்தைப் பற்றி பலரையும் கேட்டு ஆராய்ச்சி செய்தார் ஒருவர். பலர் அதிர்ஷ்டத்தினால்தான் ஏற்பட்டது என்று சத்தியம் செய்தார்கள். சிலர் அதெல்லாம் இல்லை என்று சொன்னார்கள்.

# புதுமைகளை வெளிப்படுத்தி பார்வையாளரை கவரும் வல்லமை மாணவரிடையே உள்ளது

## விளையாட்டு போட்டி நிகழ்வில் கல்விப் பணிப்பாளர்

தென்மராட்சி,மார்ச் 9

விளையாட்டுக்களை போட்டியாகக் கருதாது புதுமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களை கவர்ந்திழுக்கும் ஒன்றாக ஆக்கும் வல்லமை மாணவர்களிடையே உள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தெரிவித்தார்.

மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் வலயக் கல்விப் பணிப்பாளராக பொறுப்பேற்ற காலம் பாடசாலைகளின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறும் காலமாக இருந்ததால் பல பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களின் விளையாட்டுக்களைப் பார்வையிட்டேன். ஆனால் இந்தப் பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் அனைத்து மாணவர்களையும் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றச் செய்தமை பாராட்டத்தக்கது.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவ, மாணவிகள் மருத்துவப் பரிசோதனையின் பின்னரே விளையாட்டுக்களில் அனுமதிக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சர் நிகழ்வொன்றில் உரையாற்றியிருந்தார். அதற்கான சுற்றறிக்கை எமக்கு கிடைக்காத நிலையில் அதனை இங்கு செயல் வடிவமாக்கி போட்டியில் கலந்து கொள்ளவுள்ள வீர வீராங்கனைகளுக்கான தனியான அறை உருவாக்கப் பட்டு அங்கு பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னரே போட்டியில் கலந்துகொள்ளச் செய்தார்கள். போட்டிகளில் கலந்துகொள்ளும் வீர, வீராங்கனைகள் உடல் பரிசோதனை அறையிலிருந்து இல்ல வேறுபாடின்றி கைகோர்த்த வண்ணம் போட்டிகள் ஆரம்பிக்கும் இடங்களுக்கு வந்தமையும் எமக்கெல்லாம் படிப்பினையை தரக் கூடிய விதத்தில் அமைந்திருந்தது.

விருந்தினர்களையும், பார்வையாளர்களையும் சிந்திக்க வைக்கக் கூடிய வகையில் போட்டியை நடத்தியது பாராட்டக்கூடிய விடயமாகும்.

இந்த வருட வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் நடத்தப் படும் இசையும் அசைவும் நிகழ்வில் சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் மூன்று குழுக்களை வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றச் செய்வது என முடிவு செய்யப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்தப் பாடசாலையின் இசையும் அசைவும் நிகழ்வு வலயமட்ட போட்டியில் பங்குபற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளது -என்றார். (எ-9)




பருத்தித்துறையைச் சேர்ந்த சிறந்த கலைஞரும், விளையாட்டு வீரருமான பொன்.மகாதேவா கலாபூஷணம் விருது பெற்றதைப் பாராட்டி நடைபெற்ற கௌரவிப்பு விழாவின் போது, விருந்தினர்களான வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் இரா.தர்மகுலசிங்கம், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், மூத்த பிரஜைகள் குழுத் தலைவர் லொ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோருடன் காணப்படுவதையும் வர்த்தகர் ஏ.செல்லவிநாயகம் மகாதேவாவுக்கு பதக்கம் அணிவிப்பதையும் படங்களில் காணலாம். (எ-8)

# அயராத உழைப்பும் விடா முயற்சியும் அருணோதயாவின் சாதனைக்குக் காரணம்

## கல்லூரி அதிபர் பெருமிதம்

அளவெட்டி,மார்ச் 9

அயராத உழைப்பும் விடா முயற்சியுமே எமது கல்லூரி பல துறைகளில் தேசிய மட்டத்தில் சாதனை படைக்கக் காரணமாக அமைந்தன என்று அளவெட்டி அருணோதயக் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது பாடசாலை சகல துறைகளிலும் சாதனைகள் படைத்து முன்னேறி வருகிறது. இதற்குக் காரணம் எமது ஆசிரியர்களும், மாணவர்களுமே ஆகும். தேசிய மட்டத்தில் பல துறைகளில் எமது பாடசாலை சாதனை படைக்க முனைந்துள்ளது என்றால் அதனை பாராட்டாமல் இருக்க முடியாது. இதற்கு பழைய மாணவர்களின் ஒத்துழைப்பு- ஈடுபாடு போன்றவையே காரணம்.

பழைய மாணவர் சங்கம் எமக்குத் தேவையான உதவிகளை செய்கின்றமையால் இனிவரும் காலங்களில் நாம் தொடர்ந்து சாதனைகள் புரிந்து நிமிர்ந்து நிற்போம் என்ற மன உறுதி எமது பாடசாலை சமூகத்திடம் இருக்கிறது என்பதை இந்த விளையாட்டுப் போட்டி மூலம் அறிந்து கொள்ள முடிகிறது- என்றார். (எ-36)

# பிறந்த இடங்களிலேயே மருத்துவர்கள் சேவையாற்றுவதற்கு முன்வரவேண்டும்

முல்லைத்தீவு,மார்ச் 9

மருத்துவர்கள் தாமாகவே முன் வந்து தாம் பிறந்த இடங்களில் சேவையாற்ற வேண்டும்.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் ஒட்டுசுட்டான் மருத்துவ மனையின் மருத்துவர் ம.கலைச் செல்வன்.

வன்னி மாவட்டங்களிலிருந்து மருத்துவர்களாகப் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் தமது மாவட்ட மக்களின் அவல நிலையை நன்கு அறிந்துள்ளனர். இவர்களில் பலர் வெளி மாவட்டங்களிலும், வெளி

கின்றனர். அவர்கள் முதலில் இங்கு வந்து சேவையாற்ற வேண்டும்-

அவர்களாகவே விரும்பி வர வேண்டும். மருத்துவமனைகளைச் சிறப்புற நடத்துவதற்கும், அவற்றைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும் பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. புதிதாக அமைக்கப்பட்ட ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் எத்தனையோ பணிகள் பூர்த்தியாக்கப்படவுள்ளன-

எமது பணியாளர்களைக் கொண்டே இவற்றில் சிலவற்றை மேற்கொண்டு வருகின்றோம்- எனவும் அவர்

# நிர்வாக உறுப்பினர் தெரிவு

தென்மராட்சி,மார்ச் 9

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் அ.கயிலாய பிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் விவரம் வருமாறு:-

தலைவர் - அ.கயிலாயபிள்ளை (அதிபர்), உப தலைவர் - ந.பாலச் சந்திரன், (பிரதி அதிபர்), செயலாளர் - யோ.ஜெயக்குமார், உதவிச் செயலாளர் சு. சிவானந்தன், பொருளாளர் செ.செந்தூரன் மேலும் நிர்வாக உறுப்பினர்களாக 14 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-9)

★ ★ ★

வவுனியா, மார்ச் 9

வவுனியா குட்செட் வீதி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தேன்மொழி மகேஸ்வரன் தலைமையில் வைரவ புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவராக ம.சிவபாதசுந்தரம், உப தலைவராக ஜெ. நந்தகுமார், செயலாளராக சி.பரமேஸ்வரன், உப செயலாளராக ம. சாந்தகுமாரி, பொருளாளராக நா.ஜெயந்தன், கணக்காய்வாளராக ம. ரமேஷ், போஷகராக த.தம்பித்துரை மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக 8 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

## ஒரு முகம் இரு கண்கள்

அவனுக்கு எல்லோரையும் போலவே இரண்டு கண்கள். ஆனாலும் ஏனோ இடக்கண்ணின் மீது ஓர வஞ்சத்தோடுதான் நடந்து கொள்வான். அதற்கு மாறாக வலக் கண் மீது பாசமழை பொழிவான். இத்தனைக்கும் இரண்டு கண்களுமே அவனுக்குப் பிரதானமானவை. போதாக்குறைக்கு இடக்கண்ணே அவன் கருப்பையில் இருந்தபோது முதலில் தோன்றியதாகவும், பின்னரே வலக் கண் உருப்பெற்றதாகவும் மருத்துவர்கள் பலரும் ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவனுக்கும் அது நன்கு தெரியும். ஆனாலும் ''வலக்கண்ணே முதலில் தோன்றியது. எனவே அதற்குத் தான் முன்னுரிமை'' என்ற போக்கிலேயே நடந்து கொண்டான்.

ஒரு முறை அவனுக்கு இடக்கண்ணில் பயங்கர வலி. கண்ணில் இருந்து நீர் அருவியாகக் கொட்டியது. வலி தாங்க முடியவில்லை.மருத்துவரிடம் கொண்டு சென்று காட்டினான். அவரும் ஒரு களிம்பு மருந்தை இடக்கண்ணில் பூசக் கொடுத்தார். ஆனால் வீட்டுக்கு போனவன் அந்தக் களிம்பை வழமை போல வலக் கண்ணிலேயே தடவினான். வலி இன்னும் கூடியது. வேதனையில் துடித்தான். போவோர் வருவோர் எல்லாம் ''மருந்தைச் சீராகப் பூசினால் மாறி விடுமே'' என்று ஆலோசனைகளை இலவசமாக அள்ளிவிட்டனர். அவனும் ''மருந்து பூசியும் குணமாகாவிட்டால் என்ன செய்வது?'' என்று திருப்பிக் கேட்டான். அவர்களுக்கு அவன் இடக்கண் நோவுக்கு வலக்கண்ணில் மருந்து பூசிய கதை தெரியாது. எனவே பரிதாபப்பட்டவர்கள் ஒரு நாட்டு வைத்தியரின் பெயரை அவனுக்குப் பரிந்துரை செய்தார்கள்.

அவனும் நாட்டு வைத்தியரிடம் ஓடினான். அவர் வலி உள்ள கண்ணில் வெண்ணெய்யை வைத்துக் கட்டினால் வலி பறந்து விடும் என்று கூறினார். இவனும் வெண்ணெய்யை வாங்கி மீண்டும் இடக்கண்ணுக்குப் பதில் வலக்கண்ணிலேயே கட்டினான். வெண்ணெய் எல்லோருக்குமே புலப்படும் என்பதால் பார்ப்போர் எல்லாம் ''இடக்கண் நோவுக்கு வலக்கண்ணுக்கு வைத்தியம் பார்த்தால் எப்படி சுகம் வரும்?'' என்று கேலியாகச் சொன்னதோடு, அவனுக்கு பைத்தியம் பிடித்திருக்கலாம் என்ற எண்ணத்தில் ஒவ்வொருவராக விலகத் தொடங்கினார்கள்.

அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவேனும் இடக்கண்ணில் வெண்ணெய் வைக்க வேண்டிய கட்டாயம். ஆனால் அவனுக்கு மனமில்லை. கடைசியில் வெண்ணெய்யைப் போலவே பார்ப்பதற்குத் தோற்றமளிக்கும் வெள்ளைச் சுண்ணாம்பை இடக் கண்ணில் அப்பிக் கொண்டு திரிந்தான். வேதனை இன்னும் அதிகரித்தது. வலியால் கத்திக்கொண்டே இருந்தான். இப்போது பார்ப்போருக்கு அவன் இரு கண்ணிலும் வெண்ணெயை பூசியது போலவே தோன்றியது. அவர்கள் அவனைப் பார்த்து இப்படிச் சொன்னார்கள்;

''பாவம்! அவனும் வஞ்சகமில்லாமல் இரு கண்களுக்கும் வைத்தியம் பார்க்கிறான். ஆனால் வலி குறையாவிட்டால் அவனால் என்ன செய்ய முடியும்?''. அவர்களின் பரிதாபப் பார்வை தொடர்ந்தது. வலி மட்டும் மாறவில்லை.

ஆயிரக்கணக்கான தமிழ்க்குடும்பங்கள் போரால் பாதிப்புற்று இன்னமும் சொந்த இடங்களில் மீளக் குடியமராது தவிக்கிறார்கள். அவர்களின் நிலத்தைப் பிடித்து வைத்துக் கொண்டு, மக்களின் மீள்குடியேற்றத்தைத் தடுக்கும் அரசு, 15 ஆயிரம் சிங்கள மக்களை வடக்கில் குடியேற்றியே தீருவேன் என்று ஒற்றைக்காலில் நிற்கிறது. வலக்கண்ணில் வெண்ணெய்யும் இடக்கண்ணில் சுண்ணாம்பும் தடவும் படலம் தொடர்ந்தால் வலி எப்படி மறையும்?

# இலங்கைப் பொருளாதாரம் வீழ்ச்சியிலிருந்து மீளுமா?

இலங்கைக்குச் செரண்டிப் என்ற பழைய பெயர் உண்டு. அதாவது தற்செயலாக இங்கு கண்டுபிடிக்கப்படும் பொருள்கள் பயனுள்ளதாக அமைவதால் அல்லது ஏதோவொரு நன்மையை வழங்குவதால் இவ்வாறான பெயர் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

பெயர் செரண்டிப் என்கின்ற அப்பொழுது இலங்கைக்குப் பொருத்தமானதாக இருந்தபோதிலும், அது தற்போது முழுமைபெறவில்லை என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். அதாவது, இதன் தற்போதைய பொருளாதார நிலைப்பாட்டைப் பார்க்கும் போது இலங்கைத் தீவானது தனது நாட்டில் இடம்பெற்ற இயற்கைப் பேரழிவையும், செயற்கைப் பேரழிவையும் மறக்க முயல்வது தெளிவாகிறது.

இலங்கை அரசு, நாட்டின் பொருளாதாரத்தைச் சிறந்த முறையில் மேற்கொண்டு வருவதாக ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனால் ராஜபக்சஷ அரசு நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தை மிகவும் மந்தகதியிலேயே செயற்படுத்துவதாக மறுசாரார் கூறுகின்றனர்.

நாட்டின் பொருளாதார நிலை மிகவும் உறுதியாகக் காணப்படுவதாகவும், இங்கு பாரிய பொருளாதார அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

'இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கூட, இலங்கையானது தனது நாட்டின் வறுமை நிலை, வேலையின்மைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளதுடன், ஒதுக்கம் மற்றும் மொத்த தேசிய உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளை மிகச் சரியான பாதையில் முன்னேற்றிச் செல்கிறது'' என அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முக்கிய ஏற்றுமதி உற்பத்திப் பொருள் தேயிலை ஆகும். அதேவேளையில், இலங்கையின் மொத்தச் சனத்தொகையான 20 மில்லியனில் 1.8 மில்லியன் மக்கள் வெளிநாடுகளில் குறிப்பாக அரேபிய வளைகுடா நாடுகளில் தொழிலாளர்களாகவும், வீட்டுப் பணிப்பெண்களாகவும் பணிபுரிகின்றனர்.

இவ்வாறு வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் தமது குடும்பத்தவர்களுக்கு அனுப்புகின்ற பணம், இலங்கையின் அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிக்கின்றது. அதாவது கடந்த ஆண்டில் இந்த வருவாயானது 6 பில்லியன் அமெரிக்க டொலர் வரை காணப்பட்டது.

இலங்கைக்குத் தற்போது வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் தொகை அதிகரித்துள்ளதாக உத்தியோகபூர்வ தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, இலங்கையில் பல தசாப்தங்களின்

> **இலங்கையின் வீதிகள் மற்றும் தெருக்கள், மின்சார மற்றும் எரிசக்திப் பற்றாக்குறையால் இருட்டில் மூழ்கிக்கிடப்பதாகவும், இதனால் வீதிவிபத்துக்கள் அதிகரித்துள்ளதாகவும், இரவு நேரத் துடுப்பாட்டப் போட்டிகள் மிகவும் விலைகூடிய மின்சார விளக்குகளின் உதவியுடன் நடத்தப்படுவதாகவும் இணைய வாசகர் ஒருவர் தெரிவித்திருந்தார்.**

பின்னர் தற்போது அமைதியும் பாதுகாப்பும் மலர்ந்துள்ள நிலையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இதுவும் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்புக்கான பிறிதொரு காரணியாகும்.

இலங்கையில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உள்நாட்டு போர் தொடர்ச்சியாக இடம்பெற்றதால் நாடு அழிவுநிலைக்குத் தள்ளப்பட்டது. 2009இல் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இந்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. இது செயற்கை அழிவாகும்.

இதற்கப்பால் 2004இல் ஆழிப் பேரலை என்கின்ற இயற்கை அனர்த்தம் இலங்கையில் பெரும் அழிவை ஏற்படுத்தியது. ஆழிப்பேரலையின் போது இலங்கையில் 40,000 பேர் வரையான மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. இலங்கையின் கரையோரம் பெரும் அழிவைச் சந்தித்தது.

இந்த நிலையில் இவ்வாறான பேரழிவுகள் இலங்கையின் பொருளாதாரத்தை ஆட்டங் காணச் செய்துள்ள போதிலும், ராஜபக்ஷ அரசானது, தான் தனது நாட்டில் கணிசமான பொருளாதார அபிவிருத்தியை எட்டி விட்டதாகக் கருதுகிறது. அத்துடன் இலங்கை அரசு தன் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை மறுத்தும் வருகிறது.

''இலங்கையின் பொதுக் கடன் மட்டங்கள் தற்போதும் உயர்வடைந்தே காணப்படுகின்றன. வருமான வரி மற்றும் இறக்குமதி போன்றன வீழ்ச்சியடைந்துள்ளன'' என அனைத்துலக நாணய நிதியம் கடந்த மாதம் அறிவித்திருந்தது.

இந்தவாண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 6 சதவீதமாக இருக்கும் என அனைத்துலக நாணய நிதியம் எதிர்வுகூறிய போதிலும், இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது 7.5 சதவீதமாகக் காணப்படும் என தெரிவித்துள்ளார். இலங்கையின் பொருளாதாரம் மட்டுமல்லாது, நாட்டின் வெவ்வேறு துறைகளிலும் பல்வேறு கவலைக்குரிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் சொகுசுவிடுதிகளின் வருமானம் 2012இல் 22 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையின் கரையோர மக்களில் சுற்றுலாத்துறையை நம்பிவாழும் பலர் தற்போது பெரும் வாழ்க்கைச் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

உலகம் அழியப்போவதாக மாயன் நாள்காட்டியில் குறிப்பிடப்பட்டிருப்பதாக கூறப்பட்ட வதந்தியால் கடந்த டிசெம்பரில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் முற்பதிவுகளின் எண்ணிக்கை மிகவும் வீழ்ச்சியடைந்திருந்ததாக தென்பகுதி 'பென்ராற்றோ' என்ற சுற்றுலாத்துறை மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது 1.8 மில்லியன் வரையான மக்கள் வறுமைக்கோட்டின் கீழே வாழ்வதாகவும், இவர்கள் மாதம் ஒன்றுக்கு 3,611 இலங்கை ரூபாக்களை மட்டுமே சம்பாதிப்பதாகவும் அரச புள்ளிவிபரக்குறிப்பில்குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிலையில் 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் வறுமை நிலை என்பது முற்றாக நீக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதனை உடனடியாக குறுகிய காலத்தில் சீர்செய்ய முடியாது.

இலங்கையின் வீதிகள் மற்றும் தெருக்கள், மின்சார மற்றும் எரிசக்திப் பற்றாக்குறையால் இருட்டில் மூழ்கிக்கிடப்பதாகவும், இதனால் வீதிவிபத்துக்கள் அதிகரித்துள்ளதாகவும், இரவு நேரத் துடுப்பாட்டப் போட்டிகள் மிகவும் விலைகூடிய மின்சார விளக்குகளின் உதவியுடன் நடத்தப்படுவதாகவும் இணைய வாசகர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கான GSP Plus வரிச்சலுகை நீக்கப்பட்ட நிலையில் தற்போது இந்த நாட்டின் ஏற்றுமதித் துறை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. இந்த வரிச்சலுகையானது இலங்கை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் வர்த்தக சார் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கியது.

ஏற்றுமதிக் கட்டளைகள் வீழ்ச்சியடைந்தமை மற்றும் சில தொழிற்சாலைகள் மீளநிர்மாணிக்கப்பட்டமை போன்ற காரணங்களாலும் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இதன் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியமானது இறக்குமதிக் கட்டளைகளை வழங்குவதைக் குறைத்துள்ளது. புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ராஜபக்ஷ, தான் இதே முறைமையைப் பயன்படுத்தி தேர்தலில் தொடர்ந்தும் வெற்றி பெறலாம் எனக்கருதுவதால், அவர் நாட்டின் பொருளாதாரத்தை ஒருபோதும் கவனத்திற் கொள்ளமாட்டார்.

இலங்கை இவ்வாறான பொருளாதார மந்தநிலையைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டிருந்தால் புராதன காலத்தில் தனது இட அமைவு மற்றும் வடிவத்திற்காகவும் இலங்கை பெற்றுக் கொண்ட செரண்டிப் என்ற பெயர் முழுமை பெற மாட்டாது. இந்நிலையில் இலங்கை அரசு தனது நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக முழுமையான, பொருத்தமான மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும்.



*நன்றி-புதினப்பலகை*

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அனாவசியத் தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உறு துணையாக நடந்து கொள்வார்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.

**மிதுனம்:** ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். நீங்கள் ஒன்று பேசப்போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். நெருங்கியவரிடம் உங்களது மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.

**கடகம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக் குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள்.

**சிங்கம்:** முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்க முடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**கன்னி:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**நாளை**

மாசி- 26 ஞாயிற்றுக்கிழமை 10.03.2013
திதி: சதுர்த்தசி பி.இ. 02.58 வரை
நட்சத்திரம்: அவிட்டம்மரண பி.ப. 01.15 வரை
சுபநேரம்: 09.23- 10.53 வரை
இராகுகாலம்: 04.53- 06.23 வரை

**துலாம்:** சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவிர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**தனுசு:** உங்களின் குறிக்கோளை எட்டிப் பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்புக் கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் கிட்டும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

**மகரம்:** மனதில் இனம்புரியாத பயம் ஏற்படும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். சிறுசிறு அவமானங்கள், ஏமாற்றங்கள் வரக்கூடும். மற்றவர்கள் விடயத்தில் அநாவசியமாக தலையிட வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்சினை வந்து நீங்கும்.

**கும்பம்:** உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். தாழ்வுமனப்பான்மை வந்து போகும். உடல் அசதி, சோர்வு ஏற்படும். அரசு காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து நீங்கும்.

**மீனம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடி வந்து சிலர் உதவி கேட்பார்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படு வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | 5 | | | | 9 | |
| 5 | | | 6 | | | 2 | | |
| | | | 3 | 1 | 9 | 8 | | 4 |
| 1 | 7 | 2 | | | | 3 | | |
| | 3 | 9 | 1 | | 6 | 5 | 2 | |
| | | 5 | | | | 1 | 4 | 9 |
| 7 | | 8 | 9 | 6 | 1 | | | |
| | | 1 | | | 2 | | | 6 |
| | 5 | | | | 4 | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 6 | 9 | 8 | 1 | 3 | 4 | 5 |
| 5 | 9 | 8 | 3 | 4 | 7 | 1 | 2 | 6 |
| 1 | 3 | 4 | 5 | 6 | 2 | 8 | 9 | 7 |
| 4 | 8 | 1 | 2 | 9 | 6 | 5 | 7 | 3 |
| 2 | 7 | 3 | 4 | 1 | 5 | 6 | 8 | 9 |
| 9 | 6 | 5 | 7 | 3 | 8 | 4 | 1 | 2 |
| 6 | 4 | 9 | 8 | 2 | 3 | 7 | 5 | 1 |
| 3 | 5 | 2 | 1 | 7 | 4 | 9 | 6 | 8 |
| 8 | 1 | 7 | 6 | 5 | 9 | 2 | 3 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், சட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# கீரிமலை – நகுலேஸ்வரம்

## அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஆலயத் தேர்த் திருவிழாவும் மகா சிவராத்திரியும், தேர் வெள்ளோட்ட நிகழ்வும்



நிகழும் நந்தன வருடம் மாசி மாதம் 25 ஆம் திகதி இன்று (09.03.2013) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தேர் வெள்ளோட்டம் இடம்பெறும். தேர் நிர்மாணம் செய்த **பரஞ்சோதி சதீஸ்வரன் (தனுசா சிற்பக்கலைமணி (இடம் - திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்)** அவர்களுக்கும் அவருடைய உதவியாளர்களுக்கும் பெரியோர்களுடைய வாழ்த்துரையுடன் கௌரவித்தல் நிகழ்வு இடம்பெறும்.



நாளை (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு விசேட அபிஷேக அலங்காரத்துடன் ஆரம்பித்து 10.35 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறும். பிற்பகல் 3 மணிக்கு சுவாமி பச்சைசாத்தி திருநடனத்துடன் ஆலயத்துக்கு எழுந்தருள்வார். பின்பு பிராயசித்த அபிஷேகம், சாயரட்ச பூஜை, சகஸ்ர மகா லிங்கத்துக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும். நள்ளிரவு 12 மணிக்கு இரண்டாம் சாம பூஜை, இலிங்கோற்பவருக்கு விசேட அலங்காரபூஜை, இடபாரூடக் காட்சியுடன் உலா வருவார்.

**சிவராத்திரி இரவு இந்து கலாசார அமைச்சின் கீழ் விசேட நிகழ்ச்சிகள் இடம்பெறும்.**

★ 11.03.2013 திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு மூன்றாம்சாம பூஜை, நான்காம் சாமம் மும்மூர்த்திகளுடன் எம்பெருமான் கண்டகி தீர்த்தத்துக்கு எழுந்தருள்வார். பிற்பகல் 3 மணிக்கு அலங்கார மூர்த்திகளுக்கு சாயரட்சபூஜை நடைபெறும்.

★ 12.03.2013 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு விசேட பூஜை நடைபெற்று நடராஜப்பெருமான் திருநடனத்துடன் தீர்த்த மண்டபத்துக்கு எழுந்தருள்வார்.

★ 15.03.2013 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வைரவப் பெருமானுக்கு விசேட அலங்காரபூஜை நடைபெறும்.

**குறிப்பு:–** அர்ச்சனைப் பொருள்கள், நெய் தீபம் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். **சிவராத்திரி இரவு சகஸ்ர மகா இலிங்கத்துக்கு 1008 நெய் விளக்கு ஏற்றி அடியார்கள் அனைவரும் விரதம் இருந்து மகா சிவராத்திரியில் பங்குபற்றி உங்கள் இஸ்ட சித்திகளைப் பெறுவீர்களாக.**

**ஆதீன கர்த்தா, ஸ்ரீ ராஜராஜ ஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள், கீரிமலை.**

# குவைத்தில் சித்திரவதை; தப்பி வந்தனர் 33 பெண்கள்

கொழும்பு,மார்ச்9

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்லும் இலங்கைப் பெண்கள் அங்கு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்ற அவலம் தொடர்கின்றது.

இந்தநிலையில் குவைத்திலுள்ள வீட்டு எஜமான்களின் சித்திரவதைகளுக்கு ஆளாகிய பணிப்பெண்களில் 33 பேர் உயிர் தப்பி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இலங்கை வந்தடைந்தனர்.

தம்மைப்போல வீட்டுப் பணிப்பெண்களாகச் சென்ற எத்தனையோ பேர் குவைத்தில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்றும் அங்குள்ள சிறைகளில் 200 இற்கும் மேற்பட்ட இலங்கைப் பெண்கள் எவ்வித குற்றமும் புரியாமல் தண்டனைகளை அனுபவித்து வருகின்றனர் என்றும் குவைத்திலிருந்து தப்பிவந்த பெண்கள் கண்ணீருடன் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பொலநறுவை, குருநாகல் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த பெண்களே இவ்வாறு குவைத்திலிருந்து தப்பி வந்தவர்களாவர்.

எஜமானர்களால் தாம் கடும் சித்திரவதைகளுக்குள்ளான நிலையிலேயே அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர். இதையடுத்து அவர்கள் அனைவரும் குவைத் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

பின்னர் குவைத் அரசு அங்குள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக அவர்களுக்கு தற்காலிக கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுத்து இங்கு அனுப்பிவைத்துள்ளது. (ச)

# நாளொன்றில் 39,000 சிறுமிகள் திருமண பந்தத்தில் இணைவு

## ஐ.நா.குடிசன நிதியம் தகவல்

கொழும்பு,மார்ச்9

உலகளாவிய ரீதியில் நாளொன்றுக்கு 18 வயதுக்குக் குறைந்த 39,000 சிறுமிகள் திருமண பந்தத்தில் இணைந்து கொள்கின்றனர் என்று ஐ.நா குடிசன நிதியம் தெரிவித்துள்ளது.

குறைந்த வயதுப் பெண் பிள்ளைகள் திருமணத்தைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை தோல்வி கண்டுள்ளது என்பது இதன்மூலம் தெளிவாகிறது என்று அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

நைஜீரியா, சாட், மத்திய ஆபிரிக்க குடியரசு, கினி, பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலேயே குறைந்த வயதுத் திருமணம் அதிகம் இடம்பெறுகிறது என்று ஐ.நா. குடிசன நிதியம் கண்டறிந்துள்ளது.

உலகத்தில் 2020 ஆம் ஆண்டில் 140 மில்லியன் பெண் பிள்ளைகள் திருமணம் முடித்தவர்களாக இருப்பார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கிறது. (ச)

# ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 54 பேர் கடற்படையால் கைது

கொழும்பு,மார்ச்9

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் செல்வதற்கு முயற்சித்த 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

மாத்தறைப் பகுதியில் வைத்தே அவர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை குறிப்பிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் காலி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் கூறினர். (ச)

**மாத்தறைப் பகுதியில் வைத்தே அவர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.**

# மாணவியின் கை அகற்றப்பட்ட சம்பவம்: அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு சுகாதார அமைச்சு அறிக்கை

கொழும்பு,மார்ச்9

கொழும்பு சட்டக்கல்லூரி மாணவியின் கை சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டமை தொடர்பான பூரண அறிக்கையை சுகாதார அமைச்சு அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

அந்த அறிக்கையில் மாணவியின் கை வெட்டி அகற்றப்பட்டமை மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் கவனவீனம் உட்பட பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் செயலர் நிஹால் ஜயதிலக்க தெரிவித்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களுக்கு எதிரான குற்றப் பத்திரிகையும் விசாரணை அறிக்கையுடன் அரச சேவை ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

குற்றப் பத்திரிகையைப் பரிசீலித்த பின்னர் சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரச சேவைகள் ஆணைக்குழு தீர்மானிக்கும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)



# மதுபானத்துடன் ஒருவர் மாட்டினார்

கொழும்பு,மார்ச் 9

வெலிக்கட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதின்னாகொட வீதியில் சட்டவிரோத மதுபானங்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதான சந்தேக நபரிடம் இருந்து 540 லீற்றர் மதுபானங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

சந்தேகநபர் புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து வெலிக்கட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பஸ்களில் கப்பம் பெற்ற நபர் கைது

கொழும்பு,மார்ச்9

புறக்கோட்டை, குணசிங்கபுரம் பஸ் தரிப்பிடத்திலுள்ள பஸ்களில் கப்பம் பெற்ற குற்றச்சாட்டில், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதான குறித்த சந்தேகநபர் கடவத்தை, மஹர பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபரை புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



28.02.2013 அன்று யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.A (Hons) பட்டம் பெற்ற செல்வி திஷாந்தினி நடராஜா அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று எதிர்காலத்தில் வளமுடன் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
வே.சுந்தரலிங்கம் (மாமா), திருமதி சா.சுந்தரலிங்கம்
சுமன், சுஜீதா, சுமிந்தா (சாவகச்சேரி),
பெரியம்மா குடும்பம் (ஆவரங்கால்).
(09221)(6.7.11)

90 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



உயர்திரு. அருணாசலம் அரியரத்தினம்
(சமாதான நீதிவான், ஓய்வுநிலை விவசாய விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை -பலாலி)

05.03.2013 அன்று தனது 90ஆவது அகவையில் கால் பதித்த அருணாசலம் அரியரத்தினம் அவர்களையும், அவர்தம் துணைவியாரையும் இன்று (09.03.2013) சனிக்கிழமை பிற்பகல் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையில் அவரது இல்லத்தில் வைத்து பாராட்டுவதுடன், வட்டூர் அருள்மிகு விசாலாட்சி சமேத காசி விசுவநாதப் பெருமான் அருள்பெற்று இன்னும் பல்லாண்டு வாழ அவரை வாழ்த்துகின்றோம்.

சிவன் கோயில் வீதி,
வட்டு.மேற்கு,வட்டுக்கோட்டை.

வாழ்த்துபவர்கள்:
மக்கள், மருமக்கள் மற்றும் உறவினர்கள்,
பொதுமக்கள்,பழைய மாணவர்கள்.
(34282)(5.6.7)

தேவை

முள்ளியவளையில் அமைந்துள்ள பொதிகள் அனுப்பும் காரியாலயத்திற்கு பெண் பணியாளர் ஒருவர் தேவை. (முல்லைத்தீவு, முள்ளியவளை, தண்ணீர் ஊற்று ஆகிய இடங்களில் வசிப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்).
தொடர்பு: 0773818799
(38163)(6.7.11)

வீடு வாடகைக்கு விடப்படும்

384/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் (புகையிரத நிலையச் சந்திக்கருகில்) சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 0778897326
(34194)(6.7.11)

உ
தெல்லிப்பழை
லயன் உயர் திரு.ச.ஆறுமுகநாதன்
(உப தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தொழிலதிபர்)
All Island Nana Guna Foundation awarding Institute அமைப்பினால் தேசிய ரீதியில் வழங்கப்பட்ட தேசமாணி, லங்கா புத்திர, விஸ்வகீர்த்தி பட்டம் பெற்றமை குறித்து அன்பர்கள் எடுக்கும்



பாராட்டு விழா

காலம் : 10.03.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 09.00 மணி
இடம் : அன்னபூரணி மண்டபம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தலைவர் : செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)
வரவேற்புரை : லயன் திருமதி கலாதேவி பொன்னம்பலம் (இளைப்பாறிய விரிவுரையாளர்)
ஆசியுரை : இராஜ ராஜ ஸ்ரீ.கு. நகுலேஸ்வரக்குருக்கள் (முதல்வர் நகுலேஸ்வர ஆதீனம், கீரிமலை)
சிவஸ்ரீ.வா. அகிலேஸ்வரக்குருக்கள் (பிரதம குரு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)
சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் (முதல்வர் சுந்தர ஆஞ்சநேயர் கோயில்)
பிரம்மஸ்ரீ கி.கணேசமூர்த்திசர்மா (தோதரை அம்மன் ஆலயம்)
பிரதம விருந்தினர் : லயன் S.S. தங்கராஜா MJF J.P. தம்பதிகள் (மாவட்ட ஆளுநர் 306B1 சர்வதேச லயன்ஸ் கழகம் ஸ்ரீலங்கா)
சிறப்பு விருந்தினர் : லயன் சு. முரளிதரன் (பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)
: லயன் டாக்டர் வை.தியாகராசா MJF J.P. (துணைத் தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் மாவட்டம்)
வாழ்த்துரை : திரு. சோ.சுகிர்தன் (தவிசாளர், வலி வடக்கு பிரதேச சபை)
: லயன் A.V. ஆனந்தன் (சிற்ப கலைஞர் தெல்லிப்பழை)
: திரு. சு.தனபாலசிங்கம் (தலைவர் தெல்லிப்பழை, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)
: திரு.சி. அருளானந்தசிவம் (தலைவர் வலி வடக்கு, ஓய்வூதியர் சங்கம்)
: திரு. S. சிவபாலசுப்பிரமணியம் (சட்டத்தரணி)
: திரு.பொ. அமிர்தலிங்கம் (அதிபர், நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை)
: திரு.செ. நாகராசா (செயலாளர், சிக்கன கூட்டுறவுச் சங்கம்-தெல்லிப்பழை)
: செல்வி செல்வதியம்மா (துர்க்காபுரம் மகளிர் இல்லம்)
பதிலுரை
நன்றியுரை
விழா நாயகரை கௌரவித்தல்

அனைவரையும் விழாவில் பங்குபற்றி மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

விழாக்குழுவினர்.
(34280) (10,6,7)

# ஐ.தே.கவில் மிகவும் ஆர்வத்துடன் இணைகின்றனர் புதிய அங்கத்தவர்கள்

## எதிர்காலம் பிரகாசமாகத் தெரிகிறது என்கிறார் சுவாமிநாதன்

கொழும்பு, மார்ச் 9

ஐக்கிய தேசியக் கட்சியால் முன்னெடுக்கும் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாட்டில் மக்கள் மிகவும் ஆர்வத்துடன் புதிதாகச் சேர்ந்து வருகின்றனர். இதன் மூலம் ஐ.தே. கட்சியின் எதிர்காலம் பிரகாசமாகத் தெரிகிறது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டீ.எம் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருபது இலட்சம் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்றிட்டம் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த பெப்ரவரி மாதம் காலியில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் செயற்றிட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலி மாவட்டத்தில் அங்கத்தவர்களை இணைக்கும் இலக்கு நாம் கருதியதை விட பன்மடங்காகியுள்ளது. கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களிலும் அதனை பரீட்சித்துப் பார்க்கும் செயற்பாட்டை முன்னெடுத்தோம். எம்முடன் மக்கள் இணைவதன் மூலம் அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள வெறுப்பை வெளிக்காட்டியுள்ளனர். இது ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

கண்டி, மாத்தளை மாவட்ட மக்கள் கடந்த தேர்தலின்போது அரசாங்கத்துக்கு வாக்களித்ததாகவும் அவ்வாறான செயற்பாட்டிற்கு முற்றுப் புள்ளி வைக்கும் முகமாகவே ஐக்கிய தேசியக் கட்சியில் ஆர்வத்துடன் இணைத்து வருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளதுடன் ரணில் தலைமையிலான புதிய அரசு ஒன்றை உருவாக வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர்.



எதிர் காலங்களில் ஏனைய மாவட்டங்களிலும் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாட்டை துரிதப்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தி புதிய ஆட்சியை உருவாக்குவோம்- என்றார். (ஒ-400)

# கூட்டமைப்புக்குள் பிளவுக்கு ஆனந்தசங்கரியே காரணம்

## போரால் பாதிக்கப்பட்ட மக்கள் சங்கம் குற்றச்சாட்டு

மன்னார், மார்ச்.9

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நுழைந்தமையே கூட்டமைப்புக்குள் பிளவுகள் ஏற்படக் காரணம் எனக் குற்றம் சுமத்தியுள்ளார் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் சங்கத் தலைவர் வி.சகாதேவன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அழையாவிருந்தாளியாக நுழைந்திருப்பது அவரது வாக்கு வங்கி அரசியலாகக் காணப்படுகிறது. இவரின் உள்நுழைவை அடுத்தே கூட்டமைப்புக்குள் பிளவுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

இதேவேளை எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் சுரேஷ் பிரேமச் சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோர் முதலமைச்சர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டால் அவர்களுக்கெதிராக நாம் செயற்படவுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் ஒன்றாக இருந்து இத்தேர்தலை எதிர்கொள்ளும் போது, மக்களின் கருத்துக்கு முன்னுரிமை கொடுக்காது தன்னிச்சையாக முடிவெடுத்தால், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம், பாதிக்கப்பட்ட மக்களையும் முன்னாள் போராளிகளையும் ஓரணியாகத் திரட்டி அதற்கு எதிராகப் போராடுவோம். அது மட்டுமல்லாது மக்களுக்குரிய புதிய அரசியல் வேலைத்திட்டம் ஒன்றையும் முன் வைப்போம்- என்றார். (த-12-400)

# இலங்கைத் தமிழர் விடயத்தால் மத்திய அரசு- தி.மு.க. உறவில் விரிசல்

## 'இந்துஸ்தான் ரைம்ஸ்' கருத்து

டில்லி, மார்ச்.9

இலங்கைத் தமிழர்களின் விடயம், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இந்திய மத்திய அரசுக்கும் இடையே உள்ள உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழான 'த இந்துஸ்தான் ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளதாது:-

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் பேச்சு எதிர்பார்த்ததைப் போல் அமையவில்லை என்பதால் திராவிட முன்னேற்றக் கழகம் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்துள்ளது.

அரசின் பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்தது இதுவே முதல்முறையாகும். இந்தநிலையில் காங்கிரஸ் கட்சியுடனான தமது உறவை தி.மு.க. முறித்துக் கொள்ள ஆரம்பித்துள்ளது. எவ்வாறாயினும், காங்கிரஸின் சில உறுப்பினர்கள் தி.மு.கவுக்கு ஆதரவளித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது-என்றுள்ளது. (வ)

# போதனா வைத்தியசாலையில் 2012 ஆம் ஆண்டில் மட்டும் 20,457 பேர் எக்ஸ்ரே படப்பிடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்.போதனா வைத்தியசாலையில் 2012 ஆம் ஆண்டில் மட்டும் 20 ஆயிரத்து 457 பேர் எக்ஸ்ரே படப்படிப்புகளை மேற்கொண்டனர்.

வைத்தியசாலை விடுதியில் தங்கியிருக்கும் நோயாளர்கள் மற்றும் வெளி நோயாளர் பிரிவைச் சேர்ந்த நோயாளர்கள் ஆகியோரே இவ்வாறு எக்ஸ்ரே எடுத்துள்ளனர் என்று வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் மூலம் அறிய முடிகின்றது இதற்கென 4 எக்ஸ்ரே இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**24 மணிநேரமும் செயற் பட்டுவரும் இந்த எக்ஸ்ரே பிரிவில் மாலை 4 மணிக்குப் பின்னர் அவசர நோயாளருக்கே எக்ஸ்ரே எடுக்கப்பட்டு வருகின்றது.**

24 மணிநேரமும் செயற்பட்டுவரும் இந்த எக்ஸ்ரே பிரிவில் மாலை 4 மணிக்குப் பின்னர் அவசர நோயாளருக்கே எக்ஸ்ரே எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# ஆசிரியர்களின் 2 ஆம் கட்ட இடமாற்ற பட்டியல் வெளியீடு

தென்மராட்சி,மார்ச் 9

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் மேலும் ஒரு தொகுதி ஆசிரியர்களுக்கான இடமாற்றப் (கட்டம் 2 இன்) பட்டியல்கள் அந்தந்த வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வயதின் அடிப்படையில் இடமாற்றத்துக்கு தகுதி பெற்றுள்ளதாக கருதப்படும் ஆசிரியர்களுக்கே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 150 ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் வலயக் கல்வி அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளது.

இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்ய விரும்பும் ஆசிரியர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் தகுந்த காரணங்களுடன் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளரின் விதந்துரையுடன் அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இரண்டாம் இடமாற்றப் பட்டியல் வெளியானதை அடுத்து பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் கடந்த புதன்கிழமை வலயக் கல்வி அலுவலகங்களை முற்றுகையிட்டு தமது பெயர் வந்துள்ளதா எனப் பார்வையிட முண்டியடித்தனர். (ம-9)


### மணமகள்தேவை

* 81 இல் பிறந்த,4இல் செவ்வாய்,37 பாவமுடைய, லண்டன் பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனிற்கு படித்த, அழகான மணமகள் தேவை.
* 78இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 21¼ பாவம் உடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனிற்கு படித்த, அழகான மணமகள் தேவை.
* 79 இல் பிறந்த, செவ்வாய் பாவம் இல்லாமல் 42 பாவம் உடைய லண்டனில் எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகனிற்கு சைவ போசனமுள்ள படித்த மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த 2இல் செவ்வாய் உடைய 28½ பாவம் உடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகனிற்கு படித்த, மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
* 82இல் பிறந்த 12இல் செவ்வாய் 30½ பாவம் உடைய B.Sc.முடித்து ஆஸ்திரேலியாவில் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: பாலக்கண்ணன் திருமண சேவை,
இல. 435/3,கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே.:077 607 0862
(34235)(5-6-7)

### தவறிவிட்டது

கடந்த 05.03.2013 நல்லூர், வீரமாகாளி அம்மன் கோயிலடியில் சிவசக்தி ராதாகிருஷ்ணன் என்பவரின் தே.அ.அட்டை, மகளிர் அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், இன்சூரன்ஸ், ரக்ஸ், கையடக்கத் தொலை பேசி மற்றும் ஆவணங்கள் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ரா.சிவசக்தி,
'கைலாச வாசம்',
ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி.
T.P: 077 754 9803
(34240)(6.7.11)

### வீடு வாடகைக்கு

அரியாலை,ஏ9 வீதியில் நெடுங்குளம் சந்திக்கும் பொன்னம்பலம் சந்திக்கும் இடையில் 3 படுக்கை அறைகளைக் கொண்ட விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
(34238)(5-6-7) 077 513 8881, 077 139 7969

### கடை விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்தியில் அமைந்துள்ள கடை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 28ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (சிறப்பு) (B.A.(Hons) பட்டம் பெற்ற வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த திரு.திருமதி இராமலிங்கம் தம்பதியரின் செல்வப்புதல்வி இராமலிங்கம் லிஷாந்தினி அவர்கள் மேன்மேலும் பட்டங்களையும் பதவிகளையும் பெற்று சிறப்பாக வாழ பூந்தோட்ட நரசிங்கரை வேண்டுவதோடு பல்கலையும் பெற்று வாழ வாழ்த்துவோர்.

Best wishes

அக்கா, அத்தான் குடும்பத்தினர்.
நெளுக்குளம், வவுனியா.


## மரண அறிவித்தல்



### குமாரசாமி வைத்திலிங்கம்

(சண்முகநாதன்)

(வன பரிபாலன ஓய்வு பெற்ற அதிகாரி- R.F.O)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் 3 , ஓட்டுமடத்தை வசிப்பிடமா கவும் கொண்ட குமாரசாமி வைத்திலிங்கம் (சண்முகநாதன்) 05.03.2013 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிரோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களாகிய குமாரசாமி-தங்கம்மர தம்பதியரின் மகனும், ஸ்ரீதரன், மாலினி (U.K), கிருபாகரன் (மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை), சாந்தினி, ரஞ்சினி (சுவிஸ்), வதனி, தாரணி (இந்தியா), வசந்தினி, தர்சினி (ஜேர்மனி), சண்முகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற கமலா மற்றும் சஜித், இந்திரா, குலதிலகராஜா (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), ஸ்ரீராஜன் (சுவிஸ்), மகேந்திரன் (உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்), பீற்றர்(இந்தியா), ஆனந்தகுமார், தவதிலகராஜா (ஜேர்மனி), கௌசினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சிவமுருகானந்தன் (அப்பன் U.K), பிரியதர்சினி (U.K), ரமேஷ் (மின்சாரசபை, பருத்தித்துறை), சுபோதினி (யாழ் பல்கலைக்கழக 3 ஆம் வருட கலைப்பிரிவு), சுதன், சரண்யா (பெல்ஜியம்), சுகன்யா, கிருஷாந்தன் (கபிலா காலணியகம்), லாவண்யா, கஜன் (U.K), ஹம்சினி (HNB, யாழ்ப்பாணம்), வினோபா (ஜெயவர்த்தன புர பல்கலைக்கழகம்), ஐங்கரன் (சுவிஸ்), சோபனன், சன்யுகா, தனுசன் (பிரான்ஸ்), கபிலன் (பிரான்ஸ்), ஓசேனா (இந்தியா), விதுர்சனன், விதுர்சனா, துஷ்யந் (ஜேர்மனி), தினோயந் (ஜேர்மனி), தீபனா (ஜேர்மனி), அட்சயா (சுவிஸ்), அபிநாஷ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், சிந்மயம் (U.K), சலுயா (U.K), அருண்யா (U.K), கிறிஸ்டியா (இந்தியா), யுகோசன் (இந்தியா), குறோஸ்மி (இந்தியா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ரேவதி இல்லம்",
3ஆம் கட்டை, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

(34239)(6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்.



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# வன்னியில் பெண்களின் அவலம்; பேர்ணில் ஆவணப்படம் இன்று





ஜெனிவா, மார்ச் 9

வன்னியில் போரின் பின்னர் பெண்கள் படும் அவலத்தைச் சித்திரிக்கும் ஆவணப் படமொன்று இன்று பேர்ண் நகரில் காண்பிக்கப்பட இருக்கின்றது.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் உறுப்பினர் எம். சி. எம். இக்பால் மற்றும் பெண்ணியச் செயற்பாட்டாளரான திருமதி ராஜனி இக்பால் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இல 30, Zieglerstrasse 3007 Bern எனும் முகவரியில் அமைந்துள்ள பேர்ண் தமிழர் இல்லத்தில் இந்த நிகழ்வு நடைபெறும். நலிவடைந்தோர் உதவிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் வன்னியில் பெண்களின் அவலம் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (3)

## மதுபோதையில் அட்டகாசம்; தண்டப்பணம் தலா 6000 ரூபா

வடமராட்சி, மார்ச் 9

மதுபோதையில் பொது இடங்களில் அட்டகாசம் புரிந்த மூன்று இளைஞர்களுக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த இளைஞர்கள் நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இடங்களில் அட்டகாசம் புரிந்த வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான மூவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

நீதிபதி முன்னிலையில் குற்றத்தை மூவரும் ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து மூவரையும் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனைத் தொடர்ந்து மூவரும் குற்றப் பணத்தைச் செலுத்தி விட்டு மன்றை விட்டு வெளியேறினர். (3-8)

## நாளை தேர்

வடமராட்சி,மார்ச் 9

பருத்தித்துறை கொட்டடி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.


ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 11 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

கோயிலின் வடக்கு வெளிவீதி படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகின்ற போதிலும் அவ் வீதியால் சுவாமி வெளிவீதி உலாவர அனுமதிக்கப்பட்டுள்ளது. (3-8)

## மற்றவர்களை வீழ்த்த வெட்டும் குழியில் அவரே வீழ்வர்

முற்பகல் செய்யின் பிற்பகல் தானே வரும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்பார்கள். இயேசுவும் கூறுகின்றார் "எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். தீமையை விதைத்து நன்மையை எதிர்பார்க்க முடியாது. இன்னா செய்தவருக்கும் இனியவே செய்ய வேண்டும். கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்று வாழ்வு தொடர்ந்தால் மன்னிப்பவர் யார்? மன்னிப்பு பெறுபவர் யார்? வன்முறையின் வடுக்களே எம் வாழ்வாகிவிடும்.

விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்தவர்கள் இயேசு என்ன தண்டனையைக் கொடுப்பார் என்று காத்து நின்றனர். இயேசு அவர்களுக்கு மறுமொழியாக உங்களில் பாவம் செய்யாதவன் முதற் கல்லை எறியட்டும் என்றவுடன், ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் சென்றுவிட்டனர். இயேசுவும் அந்தப் பெண்ணிடம் இனிமேல் பாவம் செய்யாதே போ என்றார். இயேசுவின் போதனையும் பணியும் வாழ்வும் எவருக்கும் துன்பங் கொடுப்பதாக இருக்கவில்லை. இயேசு சென்ற இடமெல்லாம் நன்மையே செய்து கொண்டு சென்றதனால் மக்கள் அவர் பின்னே சென்றார்கள்..




எம் வாழ்வும் இயேசுவின் வாழ்வைப் போன்றதாக இருக்கும் பொழுது எமக்குப் பகைவர் இருக்க மாட்டார்கள். நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாமல் இருப்பதே மேல். இருளைப் பழிப்பதை விட ஒளியேற்றுவது மேலானது. எமது செயல்கள் தீயனவாக இருக்கும் பொழுது நாம் மற்றவர்களை தீயவர்கள் என்று தீர்ப்பிட முடியாது. நடுவூரில் பழுத்துள்ள நச்சுமரத்தின் பழத்தை எவரும் உண்ணமாட்டார்கள். வெள்ளையடிக்கப்பட்டாலும் கல்லறைகள் பிணவாடையே வீசும்.

கடந்தவை இறைவனின் இரக்கத்துக்கும், நிகழ்பவை இறைவனின் அன்புக்கும், வருபவை இறைவனின் பராமரிப்புக்கும் உரியவை என்று புனிதர் அகுஸ்தினார் குறிப்பிடுகின்றார். எனவே ஒவ்வொரு நொடிப் பொழுதும் இறைவனுக்கே சொந்தமானவைகள் . இதிலே எம்முடைய வீரமெல்லாம் சிறு துகள் போன்றதே. அன்பில்லாமல் ஆர்ப்பரிக்கும் பொய்மைகளைவிட அமைதியோடு உரைக்கும் உண்மைகள் மேலானவை. தவக்காலம் எம்மை மனம் மாற்றும், காலமென்றால் எவ்வாழ்வு தவக்காலமாக இருப்பதையே இறைவன் விரும்புவார். நன்மையை, உண்மையை, நம்மிலே வளர்த்துக் கொண்டால் இறையருளின் வாய்க்கால் எம்மை நோக்கிப் பாய்ந்து வருவதை எவரும் தடுக்கமுடியாது.

-அன்ரனி பீற்றர்- ஆசிரிய ஆலோசகர் (RC)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி ஏ. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்துகொள்வார். (3-9)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 9

பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வட இந்து மகளிர் பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ரி.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.(3-8-253)

## சொற்பொழிவு

குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் சனிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சமயச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

சொற்பொழிவை தென்னிலங்கையில் இருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியர் சரஸ்வதி இராமநாதன் நிகழ்த்துவார். (3)

## 'நுட்பம்' மாநாடு இன்று யாழில்

யாழ்ப்பாணம், மார்ச் 09

இலங்கைத் தமிழ்த் தகவல் தொழில் நுட்ப அமையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'நுட்பம்' மாநாடு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் தமிழ் தொழில்நுட்ப பயன்பாடுகள், இணைய மற்றும் தகவல் பாதுகாப்பு சவால்களும் தீர்வுகளும், கையடக்கல் சாதனங்களில் தமிழ், தமிழ் இணையத்தள முகவரிகள், சமூக வலைத்தளப் பாதிப்புக்கள், தீர்ப்புகள் மற்றும் மின் வணிகம் உட்பட பல்வேறு தலைப்புகளில் மூன்று அமர்வுகளாக கருத்துரைகள் இடம் பெறவுள்ளன.

இந்த மாநாட்டில் 'இலங்கையில் தகவல் தொழில்நுட்ப தொழிற்றுறை -யாழ்ப்பாணத்தின் வகிபாகம்' என்னும் தலைப்பில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவரும், இலங்கை ஆள்கள் பெயர் பதிவு நிறுவனத் தலைவருமாகிய பேராசிரியர் ஜிகான்டயஸ் சிறப்புரையாற்றவுள்ளார். (3-400)

## மின் தடை அறிவிப்பு

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின்மார்க்கங்களின் புனரமைப்புப் பணிகளுக்காகவும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரையும் மருதனார்மடம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலிப் பாற் பண்ணைப் பிரதேசம், சங்கரத்தை, அராலி, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டு.பொலிஸ் நிலையப் பகுதி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3)

## உடன் வாடகைக்குண்டு

நாவற்குழி வீடமைப்புத்திட்டத்தில் நான்கு பக்கமும் அறைகள் செய்யப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 021 3216 841,
077 8430 390.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இயற்றிய
"நித்திய கரும விதி" புத்தகம்
(சமய தீட்சை பெற்றவர்கள் தினமும் அனுட்டாணம் பார்க்கும் முறை அடங்கிய நூல்)
எம்மிடம் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.
சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ்,
பலாலி வீதி, கோண்டாவில்.
0775068982
(34247)(10.6.7)

## விற்பனைக்கு



ஐஸ்கிறீம் அல்லது பேக்கரி உணவு வகைகள் விற்பனை செய்ய உகந்த வாகனம் விற்பனைக்கு

தொடர்புக்கு:
0722008580

## மரண அறிவித்தல்



### திருமதி விநாயகமூர்த்தி சாந்தகுமாரி

வல்லிபுர பரியாரியார் ஒழுங்கை, புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விநாயகமூர்த்தி சாந்தகுமாரி நேற்று முன்தினம் (07.03.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், சரஸ்வதி (பட்டதாரிப் பயிலுனர், பருத்தித்துறை பிரதேச செயலகம்), விஸ்ணுரூபன் (எலற்றிக் இஞ்சினியர், U.K.), நேசராணி (வெளிவாரி பட்டப்படிப்பு இறுதியாண்டு -யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை,
புலோலிவடக்கு, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.
(34202) (45.6)

## முதலாம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம்
09.04.1932

மறைவு
19.02.2012

அமரர்
### செல்லையா சிவசண்முகநாதன்

திதி:திரயோதசி (09.03.2013)

அன்பின் இருப்பிடமே, அமைதியின் சொரூபமே,
சிவராத்திரியுடன் சிவன்தாள் சென்றடைந்து
ஆண்டொன்று ஆகியதே–என் துயரம் ஆறாது
இல்லறத்தில் இணைந்து ஈடில்லாப் பாசத்துடன்
எனை வழிநடத்திய தெய்வமே
நிழற்படத்தின் முன்நின்று
நினைவுகளை மீட்கின்றேன்.
ஒரு கணமும் மறவாமல் உங்கள்
திரு உருவை நெஞ்சில் சுமந்தபடி
ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்

துன்பளை,
பருத்தித்துறை.

பாசமுள்ள மனைவி.
(சி/6972)(5.6.7)

# தேசிய மட்ட ஹொக்கி; இறுதிப்போட்டிகள் இன்று

*யாழ்ப்பாணம், மார்ச் 9*

***பாடசாலை அணிகளுக்கிடையேயான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான தேசிய மட்ட ஹொக்கிச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதிப்போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் இன்று சனிக்கிழமை காலையும், இறுதிப்போட்டிகள் பிற்பகல் 4 மணியளவிலும் யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் நோயல் விமலேந்திர தலைமையில் இடம்பெறவுள்ளன.***

***இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்துகருணாரத்ன, இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் தம்பிய ரணசிங்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.***

***இதேவேளை -***

பாடசாலை அணிகளுக்கிடையேயான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான தேசிய மட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டித் தொடரில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாண மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பெண்களுக்கான காலிறுதி ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கொழும்பு, ஜனாதிபதி வித்தியாலய அணியை எதிர்த்து பாணந்துறை ஸ்ரீசுமங்கல வித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் ஜனாதிபதி வித்தியாலய அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கண்டி சீதாதேவி பாலிக வித்தியாலய அணியை எதிர்த்து காலி சவுத் லான்ட் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் சீதாதேவி பாலிக வித்தியாலய அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

மூன்றாவதாக இடம் பெற்ற காலிறுதி ஆட்டத்தில் மாத்தளை சங்கமித்த பாலிக கல்லூரி அணியை எதிர்த்து களுத்துறை பாலிக வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் சங்கமித்த பாலிக கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நான்காவதாக இடம்பெற விருந்த காலிறுதி ஆட்டத்தில் கண்டி செ‌ன். அன்ரனிஸ் பாலிக கல்லூரியும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியால அணியும் மோதவிருந்தன. ஆயினும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியால அணி மைதானத்துக்குச் சமூகமளிக்காததால் கண்டி சென். அன்ரனிஸ் பாலிக கல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப் பட்டது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான முதலாவது காலிறுதி ஆட்டத்தில் மாத்தளை விஜயா கல்லூரி அணியை எதிர்த்து கண்டி தர்மராஜா கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் கண்டி தர்மராஜா கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் வென்னப்புவ ஜோசப்வாஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு வெஸ்லிக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையானது.

ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு சந்தர்ப்பங்கள் வழங்கப் பட்டன. இதில் கொழும்பு வெஸ்லிக் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவதாக இடம் பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கண்டி சென். சில்வெஸ்ரர் கல்லூரி அணியை எதிர்த்து மாத்தளை கிறிஸ்சேர்ச் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றதினால், வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்த்து வாய்ப்புகள் வழங்கப்பட்டன. இதில் கண்டி சென். சில்வெஸ்ரர் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நான்காவது காலிறுதி ஆட்டத்தில் கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி அணியை எதிர்த்து மாத்தளை சென். தோமஸ் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் மாத்தளை சென். தோமஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ந-23)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சன சமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**இரவு 7 மணி**

இணுவில் அண்ணா வி.க. எதிர் மானிப்பாய் வெஸ்ரொங் வி.க.

* * *

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பி.ப. 3 மணி**

சிவானந்தா வி.க. எதிர் கலட்டி ஐக்கிய வி.க.

**பி.ப. 4 மணி**

கரவை சுடர் அணி வி.க எதிர் கலைமதி வி.க.

* * *

நல்லூர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களின் பெருவிளையாட்டுப்போட்டியின் ஓர் அங்கமாக யாழ். துரையப்பா விளையாட்டரங்களில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆண்களுக்கான எல்லே போட்டி நடைபெறவுள்ளது.

* * *

தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையேயான 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் தொடரின் அரையிறுதியாட்டங்கள், 3 ஆம் இடம் மற்றும் இறுதிப்போட்டிகள் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

(ந-23,86,400,422)

## கலந்துரையாடல்

வடமாகாணத்தின் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வலய விளையாட்டு உதவிப் பணிப்பாளர்கள், வடமாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் உட்பட விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை விளையாட்டுத்துறை அதிகாரிகள், வலயக் கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ந-5)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் நாகேஸ்வரி

**(தவபாக்கியம்)**



இல 39/5, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது இல. 43/1, பூநாரி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகேஸ்வரி (தவபாக்கியம்) கடந்த (06.03.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் பத்மாவதி, காலஞ்சென்றவர்களான ஜீவரெட்ணம், பத்மலோஜினி, ஜீவகுமார், பத்மஜோதி, ஜீவபாலன் ஆகியோரின் பாசமிகு தாயும் மனோன்மணி, காலஞ்சென்றவர்களான நடராசா, கனகரெட்ணம், சின்னத்துரை, தருமராஜா, கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் தெய்வானை சறோஜினிதேவி, கெங்காதரம், யோகராணி, காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவக்கொழுந்து, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வநாயகி, காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், கந்தையா ஆகியோரின் அன்பு உடன்பிறவா சகோதரியும் தனபாலசிங்கம், மீனா, சுதா, காலஞ்சென்ற கிருஷ்ணகுமார் மற்றும் ஜெயகௌரி ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரேம்குமார்- மயூரி, தினேஸ்குமார், திசாந்தி, நிசாந்தி, நிதோசாந்தி (யாழ்/ பெரியபுலம் மகா வித்தியாலயம்), நிருஷா, நிதர்சன், சைனிகா, வர்ணிஜா (யாழ்/ கொக்குவில் இந்துக் கல்லூரி), பிரணவன் (யாழ். மத்திய கல்லூரி, ஆரம்பப்பிரிவு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ்/ கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**கொக்குவில் மேற்கு.** **தகவல்: பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### செல்லையா சுப்பிரமணியம்

(நீதிமன்ற ஊழியர்-ஊர்காவற்துறை, உரிமையாளர்-ராகன்ஜா பந்தல் சேவை)



**வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் நேற்று (08.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் ஆசைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், தர்மினி (நீதிமன்றம், பருத்தித்துறை-முகாமைத்துவ உதவியாளர்), சியாமினி, சுகன்ஜா, தனுருத்திரி, ராகன்ஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ்(PHI), திலீபன் ஆகியோரின் மாமனாரும், அபிநாத்தின் அன்புப்பேரனும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் வேலணை தாளயம்பதி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**


**வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரம்.** **தகவல்: குடும்பத்தினர்.**


(34308)(8.16.14)


# இலங்கை அணி அபாரம்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் முடிவில் சங்ககாரவின் அபார சதத்தின் உதவியோடு இலங்கை அணி வலுவான நிலையை அடைந்துள்ளது.

காலியில் இடம்பெற்றுவரும் இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.







இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, முதல்நாள்ஆட்டம் மழை காரணமாக 4.3 பந்துப்பரிமாற்றங்கள் முன்னதாகவே நிறுத்தப்படும் போது 3 இலக்குகளை இழந்து 361 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

இலங்கை அணி 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான திமுத் கருணாரத்னவின் முழங்கையில் பந்து பட்டது. இதனால் அவர் வெளியேற, டில்ஷானுடன் இணைந்து குமார் சங்ககார முதலாவது இலக்குக்காக துடுப்பெடுத்தாடத் தொடங்கினார்.

டில்ஷான் ஆட்டமிழந்த பின்னர் திமுத் கருணாரத்ன மீண்டும் களம் புகுந்தார்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக குமார் சங்ககார 142 ஓட்டங்களையும், லஹிரு திரிமன்ன ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 54 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 41 ஓட்டங்களையும், அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக வீழ்த்தப்பட்ட 3 இலக்குகளையும் சொஹக் கஷி கைப்பற்றினார்.

(ந)

The Hands that Protect LIC
Life Insurance Corporation (Lanka) Ltd

ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்தில் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

**01. பதவி: அலுவலக இலிகிதர் (Office Clerk)**

கிளை: யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி.
தகைமை:
1. G.C.E. A/L 3 பாட சித்தி/அதற்கு மேற்பட்ட தகைமை.
2. போதியளவு கணினி அறிவு
3. வயதெல்லை 21-30 ற்கு இடைப்பட்டவராக இருத்தல்.
4. விண்ணப்பதாரி குறித்த பிரதேசத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
5. ஏதேனும் நிதி நிறுவனங்களில் பணி புரிந்தமை மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

**02. பதவி: உதவி கிளை முகாமையாளர் (A.B.M)/ பிரதேச விற்பனை ஒருங்கிணைப்பாளர்(ASO)**

கிளை: மன்னார்.
தகைமை:
1. G.C.E. A/L 3 பாட சித்தி.
2. ஆயுட் காப்பீட்டு விற்பனையில் குறைந்தது 3 வருட முன்னனுபவம்.
3. சிறந்த தலைமைத்துவப் பண்பு.
4. போதிய மொழி அறிவு.

**03. பதவி: அலுவலக உதவியாளர் (Peon)**

தகைமை:
1. G.C.E. O/L சித்தியடைந்திருத்தல் அவசியம்.
கிளை: சுன்னாகம், மானிப்பாய், கிளிநொச்சி, வவுனியா, மன்னார்.

குறிப்பு: மேற்படி பதவிகள் தொடர்பாக தெரிவாகுபவர்களுக்கு சிறந்த ஊதியம் வழங்கப்படும்.
தகுதியுடையவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையுடன் பதவி வெற்றிடம், கிளையை குறிப்பிட்டு 7 நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Sales Manager (North & East)
Regional Office,
L.I.C (Lanka) Ltd,
2/3, 2nd Cross Street, Vavuniya.
024-222 6960.

தற்போது யாழ் நகரில்...

LLB (Hons) in
LAW
from UNIVERSITY OF WOLVERHAMPTON

edexcel

**Why Choose BCAS for Law?**

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.
> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது.
> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.
> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நடாத்துகின்றது.
> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

Macro Ads

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747

# சூடானை இரண்டாக பிரிந்ததுபோல் இலங்கைக்கும் ஏற்படலாம்

## எச்சரிக்கிறது ஐ.தே.கட்சி



கொழும்பு,மார்ச் 9
சூடான் இரண்டாகப் பிரிந்ததுபோல் இலங்கைக்கும் ஏற்படலாம். அரசிடம் வெளிநாட்டு கொள்கை இல்லை. அதனால்தான் சர்வதேச நாடுகளால் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கப் படுகிறது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசிடம் வெளிநாட்டுக் கொள்கை இல்லை. அதனால் தான் சர்வதேச நாடுகளால் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. இதற்கு முன்னர் இலங்கை குறித்து எந்தவொரு சர்வதேச நிறுவனமும் பிரேரணைநிறைவேற்றியதில்லை.

அரசின் இயலாமையால் தான் இன்று இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட வுள்ளது.

சூடானில் போர் தீவிரமடைந்த போது ஐ.நா. சபை தலையிட்டு விசாரணை நடத்தியது. அந்த விசாரணையில் முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் ஒன்றாக வாழ முடியாது என்று தெரியவந்துள்ளது.

அதனால் வடக்கு மற்றும் தெற்கு சூடான் என இரண்டாக சூடானை ஐ.நா. சபை பிரித்துள்ளது.

சூடானில் ஏற்பட்ட நிலை இலங்கையிலும் கொண்டு வர அரசு பாதை அமைத்துக் கொடுத்துள்ளது.- என்றார். (ச)

# காரைக்கால் மீனவர் மீது இலங்கை கடற்படை மீண்டும் தாக்குதல்

காரைக்கால், மார்ச்9
வேதாரண்யம் அருகே நடுக்கடலில் காரைக்கால் மீனவர்கள் மீது இலங்கை இராணுவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மீண்டும் தாக்குதல் நடத்தியதில் 4 மீனவர்கள் காயமடைந்தனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காரைக்கால் மாவட்டம், காரைக்கால்மேடு பகுதியை சேர்ந்தவர் காசிநாதன். அவருக்குச் சொந்தமான படகில் அவரும், அதே பகுதியைச் சேர்ந்த முருகையன், சித்திரவேல், சந்திரகுமார், பிரகாஷ் ஆகியோர் கடந்த 7ஆம் திகதி காரைக்கால் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்றனர்.

மீன் பிடித்துவிட்டு அவர்கள் நேற்று முன்தினம் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். கோடிக் கரைக்கு தென்கிழக்கே அவர்கள் வந்து கொண்டிருந்தபோது, அங்கு படகில் வந்த இலங்கை கடற் படையினர் மறித்து படகில் இருக்கும் மீன்கள், மீன்பிடி உபகரணங்களைக் கடலில் போடும்படி மிரட்டினர்.

அவர்களது படகில் இருந்த காசிநாதன், முருகையன், சித்திரவேல், சந்திரகுமார் ஆகியோரைச் சரமாரியாகத் தாக்கினர். அதில் பிரகாஷ் படகிற்குள் ஒளிந்து கொண்டதால் அவர் மட்டும் தப்பினார். பின்னர் கடற் படையினர் அங்கிருந்து சென்றபின், மீனவர்கள் கரைக்குத் திரும்பினர்.

இதுகுறித்து அவர்கள் கடலோரக் காவல் படைப் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். (வ)

# டிப்பர் மோதி மூதாட்டி மீசாலையில் சாவு

தென்மராட்சி,மார்ச் 9
பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட குடும்பப் பெண் டிப்பரில் மோதுண்டு சம்பவ இடத்தில் சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் மகளிர் தினமான நேற்று மீசாலை சந்தியில் இடம்பெற்றுள்ளது. மீசாலை மேற்கைச் சேர்ந்த கந்தசாமி பரமேஸ்வரி (வயது 65) என்பவரே மரணமானவராவார். டிப்பர் மோதி வாகனம் ஏறியதில் பெண்ணின் உடல் சிதைவடைந்து காணப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த சாவகச்சேரி பொலிஸார் டிப்பர் சாரதியை கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். சம்பவ இடத்தைப் பார்வையிட்ட நீதிவான் சடலத்தை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து வைத்தியசாலை பொறுப்பதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உடற் கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார். (3-9)

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறிப் பண மோசடி

## ஜனவரியில் மட்டும் 40 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்9
வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பணத்தைப் பெற்றுக்கொண்டு மோசடி செய்வது யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ளது. கடந்த ஜனவரியிலிருந்து இன்று வரை இவ்வாறான 40 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. கோடிக்கணக்கில் மோசடி செய்யப்பட்டுள்ளது. எனவே இது குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.நேற்று நடந்த வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பலர் நிறுவனங்கள் மூலமும், தனிப்பட்ட முறையிலும் பணத்தைப் பெற்று வருகின்றனர். பின்னர் பணத்துடன் தலைமறைவாகி விடுகின்றனர்.

பலர் நகைகளை அடகு வைத்தே இலட்சக் கணக்கில் முகவர்களுக்குப் பணத்தை அள்ளிக் கொடுக்கின்றனர்.

காரியம் நிறைவடையாத நிலையில், பணத்தையும் மீளப்பெற முடியாத நிலையில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்கின்றனர்.

முகவர்களுக்குப் பணம் கொடுப்பவர்கள் அவ்வாறு பணம் கொடுத்ததற்கான ஆதாரங்கள் எதுவும் அற்ற நிலையிலேயே உள்ளனர். எனவே அவ்வாறு பணம் கொடுக்கும் போது பதிவுகள் கடிதங்கள் என ஏதாவது ஆதாரத்தையும் வைத்திருங்கள்.

மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் பலர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள போதும், மோசடி செய்தவர்கள் என்று குற்றம் சாட்டப்படும் நபர்கள் அநேகம் பேர் தலை மறைவாகியுள்ளனர். பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர் -என்றார். (த-4-86)


**A/L அரசியல் விஞ்ஞானம்**
தனிப்பட்ட, குழு வகுப்புக்கள் மற்றும் பாடம் மாறியவர்களுக்கும் கடந்தகால வினா பயிற்சியுடன் கற்பிக்கப்படும்.
தொடர்பு: R.கருணா 077 348 7712
(31243(5-6-7)

**Desktop**
Intel Pentium IV, Biostar G41, 2GB Ram. 500GB HardDisk, DVD Rom, 15" LED, Keyboard, Optical Mouse, 1Yr Warranty
Rs. 42,000.00
**Dell Laptops**
**Insp 3520**
Intel® Cel 1.70GHz, 2GB, 320GB, 15 HD
Rs 56,000.00
**Inspiron 3520**
i3-3110M, 4GB, 500GB, 15.6 HD LED
Rs 69,000.00
**Inspiron 3520**
i5-3210M, 4GB, 500GB, 15.6 HD LED
Rs 79,000.00
இச்சலுகை கையிருப்பில் உள்ளவரை மட்டுமே
STP Your Partner in IT Solution
#49, 1st Cross Street, Jaffna
T.P: 0212222674, 0212228147

**காணியும் வீடும் விற்பனைக்கு**
தாவடி வடக்கு, இணுவிலுக்கு அண்மையில் சுற்றுமதில் கட்டப்பட்டு சகல வசதிகளுடன் உள்ள இரண்டு பரப்புக் காணியும் காணியினுள் அமைந்த வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:021 222 7885
(31306)(5-6-7)


**கொக்குவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி பாலாம்பிகை உதயகுமார்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி கோபாலசாமி பொன்னம்மா
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

**இதயம் நெகிழ்ந்த அஞ்சலி**



எமது பயிற்சி நிலையத்தின் தையல் ஆசிரியை
திருமதி சாந்தி ராஜரட்ணம்
அவர்களின் அன்புத் தந்தை
டானியல் செல்வராஜா
அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் எமது துயரையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

கலாலயா பயிற்சியகம். (c/6967)(6.7.11) இயக்குநர், ஆசிரியைகள், மாணவிகள்.


உங்கள் வாகனத்தின் கோளாறுகளை
இலவசமாக அறிந்துகொள்ள இதோ வாய்ப்பு
2013 மார்ச் 15,16 ஆகிய தினங்களில்
மாநகர சபை பழைய வளாகத்தில் (சுப்பிரமணியம் பூங்கா முன்பாக)
மு.ப. 9.00 முதல் பி.ப 5.00 வரை
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்: ரகுலன் 0772 205 906
JANASHAKTHI FULL OPTION
ஜனசக்தி
மோட்டர் க்ளினிக்
வாகனத்துக்கு சுகம் - மனதுக்கு நிம்மதி



JANASHAKTHI FULL OPTION
JANASHAKTHI INSURANCE

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2013

சாவகச்சேரி நகராட்சிமன்றமானது 2013ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் எமது அலுவலகத்தில் 1000 ரூபாவை செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 31.03.2013ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### தொகுதிகள்

தொகுதி "A"- பொருள்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B"- சேவைகள்/ வேலை
தொகுதி "C"- வாகனம் திருத்தமும் சேவிஸ் செய்தலும்.

| தொகுதி இல | பொருள்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A- 01 | காகிதாதிகள், எழுது பொருள்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள். |
| A- 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம்/ உருக்கு/ ஏனையவை) |
| A- 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள். |
| A- 04 | ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A- 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்கள் வகைகள் நீர் வழங்கலுக்கான பொருள்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள். |
| A- 06 | கட்டட இரும்புப் பொருள்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருள்கள், மணல், கல், தீராந்தி சலாகை உட்பட |
| A- 07 | மின்சாரப் பொருள்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் இணைப்புக்கான பொருள்கள், மின் மோட்டார்கள், மின்சாரப் பல்ப்புகள், மின்விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள். |
| A- 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம்,மொப்பர் மற்றும் ஏனையவை |
| A- 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம் ஹார்பிக் மற்றும் கிருமி நாசினிகள், ஏனையவை |
| A- 10 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், ரயர் ரியூப் மற்றும் ஏனையவை. |
| A- 11 | தோல் உற்பத்திப் பொருள்கள், கம், சப்பாத்துக்கள் |
| A- 12 | இறப்பர் முத்திரை வகைகள். |
| A- 13 | நூலகங்களுக்கான நூல்கள். |

| தொகுதி இல | சேவைகள் விவரம் |
|---|---|
| B- 01 | உருக்கு, மரத் தளபாடங்கள் திருத்தம் செய்தல். |
| B- 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, தொலைநகல், நிழல்பட பிரதி இயந்திரம், கணினி) |
| B- 03 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| B- 04 | பதிப்பக வேலை - சகல வித படிவங்கள், ஏனையவை. |
| B- 05 | கட்டட திருத்த வேலை, உள்ளக தொலைபேசி பராமரித்தல். |
| B- 06 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |

| தொகுதி இல | வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C- 01 | சகல விதமான வாகனத் திருத்தமும் மின்சார வேலை, வாகன உள்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை. |
| C- 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்பு. |

### நிபந்தனைகள்:-

1.வழங்கல்கள்/ சேவைகள் 2013ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2.திருப்திகரமற்ற வழங்கல்கள்/ சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
3.பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
4.மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை**
**தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

# கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (வது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பானது

வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்ட 1998.05.16ஆம் திகதிய 1028/6ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு.சிற்றம்பலம் தவராசா ஆகிய நான் 2009.04.08 திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23க்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழு தெரிவுக்கான கிளை பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின்படி அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

| இல | கிளைகள் | தவிசாளர் பெயர் | காலம் | நடத்தப்படவுள்ள இடங்கள் |
|---|---|---|---|---|
| 01. | வட்டக்கச்சி மத்தி | திரு.சி.சிவாகரன் கூ.அ.உத்தியோகத்தர் | 2013.03.16 சனிக்கிழமை மு.ப 10.00 மணி | வட்டக்கச்சி மத்தி கிளை நிலையம் கட்சன் வீதி, வட்டக்கச்சி. |
| 02. | வட்டக்கச்சி மேற்கு | திரு.க.செல்வகுமார் கூ.அ.உத்தியோகத்தர் | 2013.03.16 சனிக்கிழமை மு.ப 10.00 மணி | வட்டக்கச்சி மேற்கு கிளை நிலையம் |
| 03. | வட்டக்கச்சி கிழக்கு | திரு.இ.ஜெகதீபன் கூ.அ.உத்தியோகத்தர் | 2013.03.16 சனிக்கிழமை மு.ப 10.00 மணி | வட்டக்கச்சி கிழக்கு கிளைநிலையம், ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி |
| 04. | மாயவனூர் | திரு.இ.விஜயகுமார் கூ.அ.உத்தியோகத்தர் | 2013.03.16 சனிக்கிழமை மு.ப 10.00 மணி | மாயவனூர் கிளை நிலையம், மாயவனூர் |
| 05. | மாவடி அம்மன் | திரு.சே.கிருஷ்ணகுமார் கூ.அ.உத்தியோகத்தர் | 2013.03.16 சனிக்கிழமை மு.ப 10.00 மணி | மாவடி அம்மன் கிளை நிலையம், சில்வா வீதி, வட்டக்கச்சி. |
| 06. | இராமநாதபுரம் மத்தி | திரு.யோ.ஸ்ரீஸ்கந்தராசா கூ.அ.உத்தியோகத்தர் | 2013.03.16 சனிக்கிழமை மு.ப 10.00 மணி | தலைமை அலுவலகம் கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் இராமநாதபுரம். |
| 07. | இராமநாதபுரம் தெற்கு | திரு.வி.சிவபாலன் கூ.அ.உத்தியோகத்தர் | 2013.03.16 சனிக்கிழமை மு.ப 10.00 மணி | தலைமை அலுவலகம் கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் இராமநாதபுரம் |
| 08. | இராமநாதபுரம் கிழக்கு | திரு.க.செந்தூரன் கூ.அ.உத்தியோகத்தர் | 2013.03.16 சனிக்கிழமை மு.ப 10.00 மணி | இராமநாதபுரம் கிழக்கு கிளை நிலையம், இராமநாதபுரம். |

கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி.

திரு.சி.தவராசா,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளிநொச்சி.

# மரண அறிவித்தல்

## திருமதி கமலம் சுப்பையா



சுருவிலைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு வண்ணாம்புலத்தையும் தற்போது மட்டுவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கமலம் சுப்பையா நேற்றுமுன் தினம் (07.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பையாவின் பாசமிகு மனைவியும் இந்திரபூபதி (இந்திரா -கனடா), தவமணிதேவி (சந்திரா- மட்டுவில்), நாகேஸ்வரி (மகேந்திரா- ஜேர்மனி), தண்டபாணிமூர்த்தி (விக்னேஸ்வரன் - கொழும்பு), காலஞ்சென்ற சிவராஜா மற்றும் அருட்சோதி (அருள்- ஜேர்மனி), வசந்தா (ஜேர்மனி), காலஞ்சென்ற சுபத்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் நடேசபிள்ளை (மட்டுவில்), சாந்தலிங்கம் (சுவிஸ்), சுசீலா (கொழும்பு), அன்னைமேரி (ஜேர்மனி), ஸ்ரீமதி (ஜேர்மனி), சுந்தரமூர்த்தி (ஜேர்மனி), கனகரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும் கலைச்செல்வி- சந்திரதாஸ், கலைவாணி- பவானந்தன், ரவிகாந்தன்- சிவமதி, வளர்மதி - காலஞ்சென்ற குணசீலன் மற்றும் அன்பழகன் - றஜனி, கலையமுதா- ரவிக்குமார், கலைக்கவிதா- ஆனந்தகுமார், எழிலழகன்- சிந்து, யாழ்அழகன், சிவமதி- தவசீலன், வளர்மதி- மனோகரன், கலாமதி- சிவகரன், காலஞ்சென்ற சசிக்குமார் மற்றும் தேவகுமாரி- கிறிஸ்ரி, தனுஸ்கா, ஸ்ரெசான், ஸ்புவன், அசோக்குமார்- சோபனா, அருண்குமார், அமலன், பிரியதர்சிகா- செந்தில்நாதன், கிருஷ்ணவேணி, பிரியங்கா, டானியல், யக்ளின், கபிறியல் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கௌதமன், மதுரா, இலக்கியா, அஸ்விகா, சுவாதிகா, தருண், தனுசன், தர்மிகா, தர்சன், சனோஜா, சாருஜா, அக்சனா, சக்சனா, சாரங்கா, சாரங்கன், வராகன், அபிஷன், அபர்ணா, சௌமியா, சயூ, சஞ்சீவ், ரோகித், வர்ஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம், செல்லம்மா, பொன்னம்மா, இராசப்பா மற்றும் தம்பிப்பிள்ளை, பத்மநாதன்பிள்ளை, இந்திராவதி, இராஜலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் மத்தி நேரியதூவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

பன்றிகளும் பன்றிக் குட்டிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு- அண்ணா பாம். உரும்பிராய் வீதி, இணுவில்

## மரண அறிவித்தல்கள்



### செல்லையா தெய்வேந்திரம்

சந்தாதோட்டம் புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தெய்வேந்திரம் கடந்த (06.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசேந்திரம் (ரிங்கர்) மற்றும் கமலாதேவி (டென்மார்க்), மகேந்திரம், விமலாதேவி, புவனேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2013) சனிக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தாதோட்டம்,
பருத்தித்துறை.

தகவல்:
பொ.சிவராசா (மைத்துனர்) T.P-0779184080

திருமதி

### பொன்னம்மா கோபாலசாமி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்மா கோபாலசாமி நேற்றுமுன்தினம் (07.03.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - மாணிக்கம் தம்பதியரின் மருமகளும் மோகனாம்பாள், தனகாம்பிகை, கனகாம்பிகை (ஜேர்மனி), பாலாம்பிகை (ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற செல்லச்சாமி மற்றும் வீமராசா, யோகேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமி யும், அகிலா, மாலதி (பொறி யியலாளர் - நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்), தக்ஷ்ஷாயினி (வங்கி உதவியாளர் - தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மாதுமையாள் மற்றும் இன்பயோகி (ஜேர்மனி), கோபி (ஜேர்மனி), நிதர்சன் (A/L 2011 கணிதப் பிரிவு, யாழ். இந்துக் கல்லூரி), சரண்யா (A/L 2014 கணிதப் பிரிவு - யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சசீதரசீலன் (விளையாட்டு உத்தியோகத்தர், வவுனியா), ஜெயதேவன் (தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர், வடமராட்சி வலயம்) ஆகியோரின் பேர்த்தியும், திவ்வியன், அபினுஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2013) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

81A, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(2.6)(சி/6974)

தகவல்:
குடும்பத்தினர்.

திருமதி

### இரத்தினசிங்கம் நேசம்மா



கண்ணகை அம்மன் கோயிலடி, வட்டு-மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் நேசம்மா நேற்றுமுன்தினம் (07.03 .2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாமலை இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அண்ணாமலை- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான இராசேந்திரம், பாலசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் பிறேமாவதி, பிரபாவதி (லண்டன்), கலாவதி, காலஞ்சென்ற பரமேஸ்வரன், சிறிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் இராஜசிங்கம், சுகுமார் (லண்டன்), மகாராஜன், உதயமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயப்பிரியா, விஜியலட்சுமி, சுகாசினி, அமரக்குகன், யதுஷன், சஞ்சீவ், சர்மிளா, ரஜீவன், மயூரா, சங்கவி, சபனியா, கமிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெலக்ஷனா, ஜெரோஷன், ஜெனுசன், விதுனன், விதுஷனா, அபிஷன், அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கண்ணகையம்மன் கோயிலடி,
வட்டு - மேற்கு,
வட்டுக்கோட்டை.
021 225 0868

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# இ.போ.சாவில் பணியாற்றிய ஊழியர்களுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச் 9

இ.போ.சபையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான பணிக் கொடை தண்டப் பணக் கொடுப்பனவு நாளை மறுதினம் திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு தொடர்பாக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த அனைவரையும் அன்றைய தினம் காலை 9 மணிக்கு தேசிய அடையாள அட்டை, வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் கோண்டாவில் தலைமைக் காரியாலயத்துக்கு வருகை தருமாறு சாலையின் பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார்.

(3-400-17)

## வெருகலில் பாம்புத் தொல்லை ஆறு மாதத்தில் 38 பேர் பாதிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 9

மட்டக்களப்பு, வெருகல் பிரதேசத்தில் விஷப் பாம்புகளால் தீண்டப்படுவோரின் எண்ணிக்கை வாரத்தில் இருவர் என்ற அடிப்படையில் காணப்படுகிறது.

இவ்வாறு வெருகல் பிரதேச வைத்தியசாலையின் கடமை வைத்தியர் பாக்கியதுரை வடிவுக்கரசி தெரிவித்தார்.

கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் விஷக்கடிகள் காரணமாக சிகிச்சை பெற்றுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை 38 ஆகும்.

அவர்களில் 18 பேர் அதிக விஷமுடைய புடையன், விரிபுடையன், நாகம், வளலை, கருவளலை ஆகிய பாம்புகளால் தீண்டப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஏனைய 20 பேரும் தாம் என்ன வகையான பாம்பால் தீண்டப்பட்டோம் என்கின்ற விவரம் தெரியாத நிலையில் விஷக்கடிக்குச் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர் என்று அவர் கூறினார். பாம்புக்கடிக்கு உள்ளானவர்கள் உடனடியாக சிகிச்சை பெற்றதால் உயிரிழப்புக்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று அவர் தெரிவித்தார்.

## டிப்பர் வாகனம் மோதியதில் ஒருவர் சாவு

கொழும்பு,மார்ச்9

ஆடிகம, ரஸ்நாயகபுர வீதியின் பேரியமடு பிர தேசத்தில் நேற்று வெள்ளிக் கிழமை டிப்பர் வாகனம் ஒன்று மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் குருநாகல், அலுத்மல் கடுவாவ பிரதேசத்தைச் சேர்ந்த, ஒரு வரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

சுயதொழில் செய்யும் குறித்த நபர் தொழில் நிமித்தமாக லொறியொன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது, பொலிஸ் அதிகாரி ஒருவர் வாகனத்தை நிறுத்தி சோதனை நடத்தியுள்ளார்.

அதன் பின்னர் குறித்த நபர் லொறியில் இருந்து கீழே இறங்கி பின்புறம் செல்ல முயற்சித்த போது வேகமாக வந்த டிப்பர் வாகனம் அவர் மீது மோதியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த நபர் பொலிஸாரால் சிலாபம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வேளை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சாரதி வாக னத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எமது சக விரிவுரையாளர் பா.மகாலிங்கசிவம்
அவர்களின் தந்தை
**புலவர்.ம.பார்வதிநாதசிவம்**
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கை ஆக்குவதோடு அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்விமாணி பட்டக்கற்கை நெறி, தேசிய கல்வி நிறுவக பிராந்தியக்கிளை, யாழ்.மத்திய கல்லூரி.

இணைப்பாளர்,
விரிவுரையாளர்கள்.



## சுஜீவா வைத்தியசாலை

(சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)
கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 0775594147, 0215685333
ஆயுள்வேத திணைக்கள வைத்தியசாலை
பதிவு இல ஆயு/யாப/ம.சா/63

**அறிவித்தல்**

எமது வைத்தியசாலையில் நோயளர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சான்றிதழ்கள் அனைத்திலும் எமது வைத்தியசாலைப் பதிவுப் புத்தகத்தின் இலக்கம் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இதனைப் பெறாதவர்கள் உடனடியாகப் பெற்றுக்கொள்ளவும். போலியான வைத்திய சான்றிதழ்களில் இது இல்லை என்பதுடன் எமது வைத்தியசாலையிலும் ஆயுள்வேத திணைக்களத்திலும் பாவனையிலுள்ள எமது பதவி முத்திரை கையெப்பம் என்பனவே செல்லுபடியானது என்று தெரிவிக்கின்றோம்.

Dr.C.Jeyalan
Dr.K.O.Rajaratnam
Dr.Je.Jeyalan


## மரண அறிவித்தல்

### கந்தசாமி பரமேஸ்வரி

(வித்தியா ரெக்ஸ்-சாவகச்சேரி)



மீசாலையைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பரமேஸ்வரி (வித்தியா ரெக்ஸ்-சாவகச்சேரி) நேற்று (08.03.2013) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்

## அறிவித்தல்

2013.01.19ஆம் திகதியன்று பதிவுத்தரவு பெற்ற நில அளவையாளர் சிதம்பரப்பிள்ளை வாமதேவன் அவர்களால் களத்தில் ஆய்வு செய்யப்பட்டு நிலப்பரப்பு 195/8 விஸ்தீரணம் கொண்டதும், புலோலி வடகிழக்கு (J/408) கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும் திக்கெல்லை கிழக்கு:- நாகமணி சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்கும், வடக்கும், மேற்கும், தெற்கும் ஒழுங்கை அடங்கியுள்ள ''கும்பிலோடை'' என்னும் காணிக்குள் சொரியற் பங்கு உரிமை கோருபவர்கள், ஜெயிலர் வளவு, தும்பளை வீதி, பருத்தித்துறை என்ற முகவரியில் வசிக்கும் பதிவுத்தரவு பெற்ற நில அளவையாளர் சிதம்பரப்பிள்ளை வாமதேவன் அவர்களிடம் நேரில் தமது உரிமைகளை நியாயப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றேன். இந்த நடவடிக்கை சமாதானமான முறையில் குறிப்பிட்ட காணியைப் பிரிவிடல் செய்யும் முயற்சியாகும். பத்திரிகை விளம்பரத் திகதியிலிருந்து முப்பது நாள்களுக்குள் உரிமை கோரப்படல் வேண்டுமென்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

மேற்குறிப்பிட்ட ஆதனத்தில் 29/192 இல் 1/3 பங்குக்கு வல்லிபுரம் ரவிதாசன் என்ற நாமம் கொண்ட என் பேரிலும் எனது மனைவி காந்திமதி பெயரிலும், 2011.09.12 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் நா.குமாரசாமி முகதாவில் 2025ஆம் இலக்க நன்கொடை உறுதி முடிக்கப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகின்றோம்.

வ.ரவிதாசன்
(வல்வலிபுரம் ரவிதாஸன்)

# கடைசிப் போட்டியிலும் கவிழ்ந்தது இலங்கை

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் மகளிர் அணிக்கும் இலங்கை மகளிர் அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட 20/20 சர்வதேசப் போட்டித் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு கட்டத்தில் 11.2 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து 75 ஓட்டங்களுடன் காணப்பட்டபோதிலும், இலங்கை அணி அதன் பின்னர் சிறப்பாகப் பந்து வீசி மேற்கிந்தியாவின் ஓட்டவேகத்தைக் கட்டுப்படுத்தியது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக டீன்ட்ரா டொற்றின் 33 பந்துகளில் 43 ஓட்டங்களையும் ஜூலியானா நீரோ 32 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக உதேஷிகா பிரபோதினி 8 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஒடிஷா ரணசிங்க 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஷஷிகலா சிரிவர்தன ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

123 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்களையே எடுத்தது. இதனால் இலங்கை அணி 7 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பத்திலிருந்தே இலக்குகளை தொடர்ச்சியாக இழந்த இலங்கை அணி, ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிக்கொண்டிருந்தபோது, உபதலைவி இஷானி கௌஷல்யா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தொடங்கினார். எனினும் அவரால் வெற்றியைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

துடுப்பாட்டத்தில் இலங்கை மகளிர் அணி சார்பாக இஷானி கௌஷல்யா 26 பந்துகளில் 44 ஓட்டங்களையும் தீபிகா சுரங்கிக்கா 24 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக ஷெனெல் டேலி 4 இலக்குகளையும் ட்ரெமெயின் ஸ்மார்ட், ஷக்குவானா குயின்டைன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சுப்ரினா முன்ரோ ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி 4:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. தொடரின் ஆட்டநாயகியாக மேற்கிந்தியத்தீவுகளின் ஸ்டெஃபானி டெய்லர் தெரிவானார். (ங)

## நியூஸிலாந்து முன்னிலை

நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் நியூஸிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியின் 3 ஆம் நாள் ஆட்ட முடிவில் நியூஸிலாந்து அணி தொடர்ந்தும் ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இலக்கு இழப்பு எதுவுமின்றி 131 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த நியூஸிலாந்து அணி, மழை காரணமாக நேற்றைய ஆட்டநேரம் முடிவடையும் போது 7 இலக்குகளை இழந்து 402 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக ஹேமிஸ் றதர்போர்ட் 171 ஓட்டங்களையும் பீற்றர் ஃபுல்ற்றன் 55 ஓட்டங்களையும் பிரெண்டன் மக்கலம் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 4 இலக்குகளையும், ஸ்ருவேர்ட் ப்ரோட் 2 இலக்குகளையும், மொன்டி பனேசர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

3 இலக்குகள் கைவசமுள்ள நிலையில் நியூஸிலாந்து அணி 235 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

டுனேடினில் இடம்பெறும் இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த இங்கிலாந்து அணி 167 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங)

# ஈழத் தமிழர்கள் படுகொலைக்கு சர்வதேச விசாரணை கோருக

புதுடில்லி, மார்ச் 9

இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணையை வலியுறுத்துமாறுகோரி, 14 லட்சம் இந்தியர்கள் கையெழுத்திட்ட மனுவை புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கின் அலுவலகத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை கையளித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய நிர்வாகியான அனந்த பத்மநாபன், பிரதமர் அலுவலக விவகாரத்துறை அமைச்சர் நாராயணசாமியிடம் இந்த மனுவை நேற்றுப் பிற்பகல் நேரில் அளித்துள்ளார்.

அந்த மனுவில், இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இந்தியா தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெறாமல் தடுக்க ஐ.நா. தலைமையிலான குழு, அங்கு நேரடியாக கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும். அத்துடன், இலங்கையில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தைத் திரும்பப் பெற இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. (த)

## தசாக கிருகயாக்கு அழைப்பு





நந்தன வருடம் மாசித் திங்கள் 15ஆம் நாள் (27.02.2013) புதன்கிழமை சிவகதி அடைந்த எமது அன்புத் தாய்

**ஈஸ்வரி அம்மா சுப்பிரமணிய ஐயர்**

**அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள்**

- ★09.03.2013 சனிக்கிழமை காலை 10 மணி - தசாகம் (கல்லெடுப்பு)
- ★10.03.2013 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி - ஏகோதிட்டம் மாசிகம்
- ★11.03.2013 திங்கட்கிழமை பி.ப. 1 மணி - சபிண்டீகரணம்
- ★12.03.2013 செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணி - கிருகயக்ஞம் (மதிய போசனம்)

ஆகிய கிரியைகளில் தாங்கள் குடும் சமேதராக வருகைதந்து கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

சு.வரதராசர்மா (மகன்)

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 07.03.2013 இறைபதம் அடைந்த திருமதி **பொன்னம்மா கோபாலசாமி** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டு. வடக்கு,
சித்தன்கேணி.

(34246)(5.7.11)

சே. விநாயகமூர்த்தி
குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் காணிக் கிளையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றும் திருமதி நடருலேஸ்வரி பத்மராசா அவர்களின் அன்புத் தாய் **முருகர் சிவபோகம்** அவர்கள் 01.03.2013 அன்று சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உதவிப் பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

(பி/6071)(5-8-7)

பிரதேச செயலரும்,
அனைத்து ஊழியர்களும்.

## விற்பனையாகிறது



பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (மெருகூட்டப்பட்ட 3ஆம் பதிப்பு) G.C.E. (O/L), G.C.E. (A/L) மாணவர்களுக்கானது

ஆக்கம்:- சி.பிரணவன் B.A. (Hons),
M.A. (Pub.Admin) M.A.C.S. Dip in Com. Sys. design (NIBM)
உதவிப் பதிவாளர் யாழ். பல்கலைக்கழகம்.

கிடைக்குமிடங்கள்
அனைத்து முன்னணிப் புத்தகசாலைகளிலும்.

## இரண்டாம் ஆண்டு நினைவு



பிறப்பு
03.04.1951

இறப்பு
09.03.2011

அமரர்
**ஆறுமுகம் கந்தசாமி**

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடங்களோ இரண்டாகின- அப்பா
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்

நி.மு.எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.
த.மு.காட்டுக்காணி லேன்,
கச்சாய் றோட், சாவகச்சேரி.

(34250)(5.6.7)

**விஜேந்திரன் மதனி**
**(அன்பு மகள்)**

## மரண அறிவித்தல்



திருமதி *சின்னத்தம்பி தங்கம்மா*

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் மற்றும் பாலாவி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி தங்கம்மா நேற்று (08.03.2013) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்- சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் தவமணி, தங்கராசா ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் வைரமுத்து, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2013) சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலாவி தெற்கு பெரியசாட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலாவி தெற்கு, கொடிகாமம்.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

திருமதி.இராஜேஸ்வரி தவபாலசிங்கம் அவர்களின் அன்புத்தாய்

**திருமதி.சிவபோகம் முருகர்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்.

## தொலைந்து விட்டது

கண்டாவளை கிளிநொச்சியைச் சேர்ந்த மோகன் ராஜ் செல்வராஜா என்பவருடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன தொலைந்துவிட்டன. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 0774196683, 0712440851.

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் உற்பத்திச் சாதனங்களும் விற்பனை வாகனங்கள் இரண்டும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0773277784

## Diploma in Pharmacy

Leading To Bsc Pharmacy

2 Years Course
CMCC Syllabus
Full Practical

Addmissions Open

Monthly Rs.3000/= ONLY
*Initial Payment Rs.20000/=

Starting on 16-03-2013

Visalam
Wire and Beyond

VisalamMINDS
127/1 Temple Road Jaffna
02 221 9695 075 979 9695
Email: admin@visalamholdings.com

## நாய்க் குட்டிகள் விற்பனைக்கு

டாசோன், பொமேரியன், அல்சேசன் குட்டிகளும், நாய்களும் விற்பனைக்குண்டு.

இல.6, முதலாம் ஒழுங்கை, திருநெல்வேலி. தொடர்பு-0771016407

## பார ஊர்தி (லொறி) மற்றும் உதிரிப்பாகங்கள் உடன் விற்பனைக்கு

ஆரிய குளத்தடி குட்டி கராச்சில் 27சிறி, 41சிறி Isuzu (இசூஸ்) HGxxxx LEYLAND (SUPER TUSKER) உடன் விற்பனைக்குண்டு. மற்றும் உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு.

T.P- 0774829542,
0779722621

## வாகனம் விற்பனைக்கு

மிற்சுபிசி வடி வாகனம் விற்பனைக்கு.
உற்பத்தி வருடம் 2004 (பெற்றோல்)
தொடர்பு- 0756701519, 0776545116

## ஸ்டீவன் ஸ்மித், உஸ்மான் கவாஜா இருவருக்கும் வாய்ப்பு

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் கடைசி 2 போட்டிகளிலும் ஸ்டீவன் ஸ்மித், உஸ்மான் கவாஜா இருவருக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாக ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடரின் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி 8 இலக்குகளால் தோல்வியடைந்திருந்த நிலையில், இரண்டாவது போட்டியில் இன்னிங்ஸ் தோல்வியைச் சந்தித்திருந்தது.

இந்நிலையில் மார்ச் 14 ஆம் திகதி ஆரம்பபிக்கவுள்ள 3 ஆவது போட்டியில் உஸ்மான் கவாஜா, ஸ்டீவன் ஸ்மித் இருவரும் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.

தோல்விகளின் பின்னர் அதே அணியை மீண்டும் ஈடுபடுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருவரும் இடம்பெறுவார்களா, இல்லையெனில் உஸ்மான் கவாஜா அல்லது ஸ்டீவன் ஸ்மித் ஒருவர் இடம்பெறுவாரா இல்லையெனில் அவர்களுக்கு நிச்சயமான வாய்ப்புக் கிடைக்குமா என்பதை உறுதிப்படுத்த முடியாது எனத் தெரிவித்த மிக்கி ஆர்தர், ஆனால் இவ்விரண்டு வீரர்களுக்குமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படச் சந்தர்ப்பங்கள் உள்ளதை உறுதிப்படுத்துவதாகக் குறிப்பிட்டார்.

இந்தியாவின் டெஸ்ட் போட்டிகள் மிகவும் சவாலானவை எனக் குறிப்பிட்ட மிக்கி ஆர்தர், அனுபவம் குறைந்த இந்த அணி இந்தத் தொடரிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

(ஙு)


**UK Student Visa**

கல்லூரிக்கட்டணம்- பகுதியாகச் செலுத்தலாம். முதற்பகுதி 180000/-வரை
IELTS- 4 (General உம் ஏற்கப்படும்.)

அடிக்குறிப்பு-மேற்படி student visa வில் பகுதிநேரத்தொழில்வாய்ப்புக்கோ அன்றேல் நிரந்தரக்குடியுரிமை பெறவோ சட்டரீதியாக எவ்வித வாய்ப்பும் இல்லை.

இந்த அடிக்குறிப்பு கௌரவ இயக்குநர் சபையின் கட்டளைப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

**திசைகாட்டி(பிறைவேற்)லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

**FRENCH LANGUAGE CENTRE**
யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்

**FRENCH CLASSES**

Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).

Batch 1 - 16.03.13 Sat 11am
Batch 2 - 18.03.13 Mon 3pm
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
T.P. 0779 789 456

Batch 1 - 19.03.13 Tue 11am
No, 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
இணைவு : BCLL English Courses Deutsch, Sinhala வகுப்புக்களும்...

Best Buy way

northern **PC PARK**

தனித்துவமான தரமான Dell, HP (i3,i5,i7) Laptops
எம்முடைய காட்சியறையில்...மலிவு விலைகளில்..
HP 1000, 2000, DV6,etc
DELL N5050 , N1450, etc
Join with Us
#269e Palaly Road, Kantharmadam, Jaffna
021-222 0388 / 077 757 0124
info@pcpark.co www.pcpark.co

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna *மட்டுமே*. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(ரக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

**வயது ஒரு தடையா!**

65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலை வாய்ப்பை நாடி நிற்போருக்கு, அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு!!

குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்றலாம்.

* 2 வார பயிற்சிக் காலமுடையது.
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள்:-யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, நெல்லியடி, கிளிநொச்சி.

அடிப்படைத் தகைமைகள்:

★ G.C.E(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

★ 18வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 28.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 4440
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(34271)(5-6-7)

advt@uthayan.com
0215671111

**ST. ANTONY'S ல்**
கணினி மலிவு விற்பனை
HP FULL SET COMPUTER
FREE - HEAD PHONE/ 8GB PEN/ WEBCAM மேலும்
24750/= மட்டும்
LAPTOP PC, TABLET PC, DESK TOP PC
SONY 14" T.V-8900/-
16" LED-19850/-
மிகவும் மலிவு விலையில்
ஒருவருட உத்தரவாதம்
187, k.k.s Road Jaffna.
021 222 4865

**டோஹா கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**
**Air trust** (அரச அனுமதி இல-2490)

இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட Air trust வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தினூடாக கீழ்க்காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

★ டெகரேஷன் Helper
★ General Helper
★ Mason
★ Carpenter
★ வெல்டர்
★ இலக்ரீசியன்

வெளிநாட்டுச் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள சாரதிமார்கள் அதிஉயர் சம்பளம், இரண்டே வாரத்தில் பயணம். உங்கள் விண்ணப்பங்கள் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
Lanka Voice,
24, Station Road, Vavuniya.
T.P- 0772393165, 0112676777
(26160)(8.6.16)

**காணி விற்பனைக்கு**

பூநகரி-மன்னார் வீதியில் இருந்து பள்ளிக்குடா வீதிக்கு திரும்பும் இடத்தில் உறுதியுடன் உள்ள 01 ஏக்கர் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0713011842

**ஆசிரியர் தேவை**

* தரம் 1,2,3,4,5 கற்பிக்கக்கூடிய அனுபவமிக்க ஆசிரியர்கள் தேவை.
* எழுதுனர், கணக்காளர், விற்பனையாளர் தேவை.

70, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
0212219815-0718474325, 0718474325

மாலை நேர விசேட பிரிவுகள் ஆரம்பம்

13-03-2013 மாலை 4.00மணி
**வங்கியியல் கற்கைநெறிகள்- CBF
**Chartered- CAB 1
**aat (SriLanka) - FOUNDATION
Medium:- Tamil
**A/L – 2015 English & Tamil medium

Further Details: **JAFFNA COLLEGE**
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382


## மரண அறிவித்தல்

### இராமச்சந்திரா சுதாகரன்



விளாத்தித்தோட்டம் மூளாய் வீதி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தினை வதிவிடமாகவும் கொண்ட இராமச்சந்திரா சுதாகரன் நேற்று (08.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராமச்சந்திரா காலஞ்சென்ற நல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் இராசரத்தினம்- வள்ளிநாயகி தம்பதியரின் மருமகனும், ஜெயரஞ்சினியின் அன்புக்கணவரும் யோகப்பிரியன்(மாணவன், யா/யாழ்ப்பாணக்கல்லூரி), மோகனப்பிரியா(மாணவி, யா/விக்ரோரியாக்கல்லூரி), கஜப்பிரியன் (மாணவன், யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும், சுலோசனா(அதிபர்-யா/மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), சுகிர்தராணி(இலண்டன்), பிரபாகரன்(இலண்டன்), சுமதி(கிராமிய வங்கி-சங்கானை ப.நோ.கூ.சங்கம்), தயாகரன்(C.D.O) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிவலிங்கம் (இலண்டன்), மஞ்சுளா(இலண்டன்), மாலினி (C.D.O), ஜெயரஞ்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்ப டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பிரியவாசா",
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
021-3737744


SALE SALE SALE SALE SALE SALE

**நல்லூர் சரவணா ரெக்ஸ்**

புதுவருடத்தை முன்னிட்டு பிரமாண்டமான மலிவு விற்பனை

இன்று தொடக்கம் சனிக்கிழமை வரை 5 நாள்களுக்கு

Office wear, Cotton Saree 500/=
Office wear, Silk Saree 500/=
} with Blouse

குறிப்பு:- ஏழு நாள்களும் வியாபாரம் நடைபெறும்

இடம்:- சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
நேரம்:- முற்பகல் 10 மணிமுதல் இரவு 7 மணிவரை SALE
(C/6794)(2.6.7)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.